

# சோசலிசத் தமிழீழத்தை நோக்கி....

# பொருளடக்கம்

பக்கம்

முன்னுரை 1

*முதலாவது அத்தியாயம்*

சுயநிர்ணய உரிமையும், தனிநாட்டுக் கோரிக்கையும். 5

இலங்கையில் மார்க்சிச வாதிகளின் குழம்பிய நிலை.
சுயநிர்ணய உரிமையும், பிரிந்துசெல்லும் உரிமையும்.
தனிநாட்டுக் கோரிக்கையும், பாட்டாளிவர்க்க ஒருமைப் பாடும்.
பிரியும் உரிமை வேண்டும்; பிரிவினை தேவையில்லை?
விடுதலை இயக்கமும், வர்க்கப் போராட்டமும்.
சந்தர்ப்பவாதத்தில் சறுக்கிவிட்டார்கள்?
தனித் தமிழீழம் சாத்தியமாகுமா?
முடிவுரை.

*இரண்டாவது அத்தியாயம்*

சிங்கள இளைஞரின் ஆயுதக் கிளர்ச்சி. 41

நான் ஒரு புரட்சிவாதி; பயங்கரவாதியல்லன்.
சீன-உருசிய சித்தாந்தப் பிளவு.
பலாத்காரமும், புரட்சியும்.
உருசியா விசா மறுத்தது.
சோசலிசப் புரட்சி
ஐந்து வகையான அரசியல் வகுப்புக்கள்.
புரட்சி செய்யும் உரிமை.
ஏப்ரல் கிளர்ச்சிக்குக் காரணங்கள் யாவை.
புரட்சியின் தோல்விக்குப் பிரதான காரணங்கள்.
அரசியல் சூழ்நிலையை அசட்டை செய்தார்கள்.
இந்திய விரிவாதிக்கம் என்ற இனவாதப் பிரச்சாரம்.
போர் நுணுக்கங்களில் பயிற்சி பெறவில்லை.
அந்நிய நாடுகளின் ஆதரவு.
எதிரிகள் யார்? நண்பர்கள் யார்?
உசாத்துணை 71
வரைபடம் 72

# முன்னுரை

கடந்த பொதுத் தேர்தலில் இந்தச் சரித்திர சம்பவம் நிகழ்ந்தது. இலங்கை அரசியல் வரலாற்றிலேயே சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி இது. கால் நூற்றுண்டு காலமாய் குமுறி வந்த தமிழ் அரசியல் போராட்டத்தில் ஒரு மாபெரும் திருப்பமாக இது அமைந்தது. அதுதான் சோசலிசத் தமிழீழத் தனி நாட்டுக் கோரிக்கை. தமிழீழ மக்கள் மேற்கொண்ட புரட்சிகரமான தீர்மானம்.

1977 இல், தமிழ்த் தேசிய இனத்திற்கு எதிரான ஒடுக்கு முறையின் உச்ச கட்டத்தின்போது இலங்கையில் பொதுத் தேர்தல் நடந்தது. ஒரு தேசிய இனத்தின் சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் பிரிந்து சென்று தனி நாடு அமைப்பதென்ற கோரிக்கைக்கு வாக்களிக்குமாறு தமிழ் பேசும் மக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். தமிழ் பேசும் மக்களைப் பொறுத்த வரை ஒரு தேசிய இனத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் பொது சன வாக்கெடுப்பாகவே இந்தத் தேர்தல் அமைந்ததெனலாம். இத்தேர்தலில், தமிழீழ தேசிய சுதந்திரத்தை, அதாவது, இறைமை கொண்ட சோசலிச அமைப்பைக் கொண்ட தனியரசை ஆதரித்து மக்கள் வாக்களித்தனர். அதாவது, இத்தேர்தலில் தமிழ் பேசும் மக்கள் தமது சுய நிர்ணய உரிமையை, சனநாயக அரசியல் நியதிக்கு அமையப் பிரயோகித்துத் தனியரசை அமைப்பதே தமிழ்த் தேசிய இனத்தின் ஒன்றுபட்ட அபிலாசை யெனச் சிங்கள ஆட்சியாளருக்கும் உலகத்திற்கும் எடுத்துரைத்தனர்.

தமிழீழ மக்கள் மேற்கொண்ட இத்தீர்மானம் மாக்சிச—லெனினிச கொள்கைத் திட்டத்திற்கு அமைய, அதாவது, புரட்சிவாத சோசலிச அரசியல் நியதியின்படி சரியானது என்பதை இந் நூலில் வலியுறுத்தியிருக்கிறோம். தனித் தமிழ் நாட்டுக் கோரிக்கையை எதிர்க்கும் மாக்சிசவாதிகளின் நிலை, மாக்சிச சித்தாந்த ரீதியில் முற்றிலும் தவறானது என்பதை இந்நூல் தெளிவாகச் சுட்டிக் காட்டுகிறது. சுய நிர்ணய உரிமையென்ற அரசியற் கோட்பாட்டிற்கு லெனினின் கொள்கை விளக்க மேற்கோள்களுடன் தெளிவான வரை விலக்கணம் அளித்து, தமிழ்த் தேசிய

இனப்பிரச்சனையை சமூக, பொருளாதார, அரசியல் வடிவங்களில் நோக்கி, தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தை வெற்றிப் பாதையில் இட்டுச் செல்வதற்கு, ஒரு புரட்சிகரமான வேலைத் திட்டமும், அதனைச் செயற்படுத்த ஒரு புரட்சிகரமான விடுதலை இயக்கமும் அவசியமென வலியுறுத்தியுள்ளோம்.

இன்று தமிழ்த் தேசிய இனமானது, சிங்கள ஆயுதப் படைகளின் பயங்கர வாதத்தின் மத்தியில் பயந்து வாழ்கிறது. மிருகத் தனமான பயங்கரவாதத்தைக் கட்ட விழ்த்துவிட்டு, மக்களை மிரட்டி மண்டியிடச் செய்து, தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலை வேட்கையை நசுக்கிவிடுவதே, இனவெறி பிடித்த சிங்கள ஆளும் கும்பலின் இலட்சியமாக இருக்கிறது. இந்த ஆயுத பலாத் காரத்தை, அகிம்சையென்ற அமைதி வழிப் போராட்டத்தால் முறியடிக்க முடியாது என்பது இன்று அனைவரும் உணர்ந்த அரசியல் உண்மையாகும். ஆயுத பலாத்காரம் எம்மீது திணிக்கப் பட்டு, நாம் அடிமை வாழ்விற்கு ஆளாக்கப்பட்டுள்ளோம். எமது விடுதலையின் பாதை, இனி, ஆயுதம் தரித்த புரட்சிப் போராட்ட மாக அமைய வேண்டுமே தவிர வேறொன்றுமல்ல. அநீதிக்கும் அட்டுழியத்திற்கும் எதிராகப் புரட்சி செய்வது, பலாத்காரத்திற்கு எதிராகப் போர் செய்வது அதர்மம் ஆகாது. அது புனிதமான செயல். மனித செயல்களில் புனிதமானது புரட்சி. புரட்சிதான் புதுமையைப் பிறப்பிப்பது. புரட்சிதான் புது வாழ்வைத் தருவது. புரட்சியின்றிப் புதியது பிறக்காது. புரட்சியென்பது சரித்திரத்தின் விசை. புரட்சி செய்பவன் சரித்திரம் படைப்பவன். அடக்குமுறை யின் கீழ் அடிமை வாழ்க்கையில் தள்ளப்பட்ட எமது மக்களின் விடுதலைக்குப் புரட்சி அவசியம். அதாவது, ஆயுதம் தாங்கிய புரட்சிப் போராட்டம் அவசியம்.

இனவாதம் பிடித்த, சிங்கள இராணுவ இயந்திரத்தின் முன் பாக நிராயுதபாணிகளாக நின்றுகொணடு, விடுதலை முழக்கம் எழுப்புவதில் எவ்வித பயனும் இல்லை. எம்மிடம் ஆத்ம பலம் மட்டும் இருந்தால் போதாது. ஆயுத பலமும் அவசியம். ஆயுத பலம்தான் இன்று உலகத்தை ஆளுகிறது. ஆயுதம்தான் மக்களை அடிமை கொள்கிறது. ஆயுதம்தான் மக்களை அடக்கு முறைக்கு ஆளாக்குகிறது. எம்மை அடிமைப்படுத்தி வைத்திருப்பது— சிங்கள மக்கள் அல்ல, சிங்கள ஆளும் வர்க்கத்தின் ஆயுதங்களே. ஆயுத அடக்கு முறையின் கீழ் விடுதலை வேண்டி நிற்கும் ஒரு தேசிய இனமாகிய நாம், முதலில் ஆயுதத்திற்கு எதிராகப் போராட எம்மைத் தயார் செய்து கொள்ள வேண்டும். உலக தேசிய விடுதலை இயக்கங்கள் எல்லாம் ஆயுதம் தரித்த விடுதலைப்

போராட்டத்தில்தான் குதித்துள்ளன. ஆயுத ஒடுக்கு முறையை, ஆயுதத்தால்தான் முறியடிக்க முடியும் என்ற யதார்த்த உண்மையை, இந்த விடுதலை இயக்கங்கள் உணராமலில்லை. ஆயுதம் தான் மக்களை அடக்கவும் செய்கிறது; அதே வேளை மக்களை விடுவிக்கவும் உதவுகிறது. ஆகவே, சிங்கள ஆயுதப் படைகளின் அடக்கு முறையை உடைத்தெறிந்து, எமது மக்கள் விடுதலை பெறுவதாயின் ஆயுதம் தரித்த போராட்டத்தால்தான் அது சாத்தியமாகும் என்பதில் அசையாத உறுதி கொண்டவர்கள் நாம். இந்த உறுதியில்தான், நாம் ஆயுதம் தரித்த போராட்டத்திற் குதித்துள்ளோம்.

தேசிய விடுதலைப் போராட்ட அமைப்பையுடைய ஆயுதப் புரட்சியென்பது, அப்படி இலகுவான செயலல்ல என்பதை நாம் நன்கு உணருவோம். ஒரு புரட்சிகரமான கொள்கைத் திட்டத்தின் கீழ்கட்டியெழுப்பப்பட்ட, ஒருபுரட்சிகரமான விடுதலையியக்கத்தால் தான் இந்தப் பிரமாண்டமான இராணுவ சாதனையைச் சாதிக்க முடியும். மிகவும் நுணுக்கமாய்த் திட்டமிட்டுச் சரிவர எம்மைத் தயார் செய்து கொள்ளாமல், அவசரப்பட்டு, ஆயுதப் புரட்சியில் குதிக்கும் கற்பனுவாதப் போக்கு எம்மிடம் எள்ளளவும் இல்லை. 1971-ஆம் ஆண்டு ஏப்பிரலில், ரோகன விஜேவீராவின் தலைமையிலான சிங்கள இளைஞரின் ஆயுதக் கிளர்ச்சி, எவ்விதம் கொடூரமாக நசுக்கப்பட்டதென்பதை இந்நூலில் விரிவாக ஆய்வு செய்கிறோம். சித்தாந்தத் தெளிவின்றி, கொள்கைத் திட்டமின்றி, ஒருமைப் பாடின்றி, பொதுசன ஆதரவின்றி, ஆயுத பலமின்றி, வெளிநாட்டு அனுதாபமின்றி, அரசியல் சூழ்நிலையை அசட்டை செய்து, அவசரப்பட்டு ஆயுதக் கிளர்ச்சியில் குதித்ததால் இக் கிளர்ச்சிக்குப் பத்தாயிரம் இளைஞர்கள் பலியானார்கள். எமது அயல் நாட்டில் கிளர்ந்தெழுந்த இந்த ஆயுதக் கிளர்ச்சியும், அதனை மிருகத்தனமாக நசுக்கிய சிங்கள இராணுவத்தின் வெறியாட்டமும் எமக்குப் பல அரசியல் உண்மைகளைப் போதிப்பதாக உள்ளன. இவை இந்த நூலில் ஆராயப்படுகின்றன.

தமிழ்த் தேசிய விடுதலையையும், சோசலிச சமூகப் பொருளாதாரத்தையும் நோக்காகக் கொண்ட ஒருபுரட்சிக்கு முதற்படியாக, ஒரு புரட்சிகரமான கொள்கைத் திட்டம் அவசியம். அந்தப் புரட்சிகரமான கொள்கைத் திட்டத்தைச் செயற்படுத்த, ஒரு புரட்சிகரமான விடுதலை இயக்கம் அவசியம். புரட்சிகரமான சித்தாந்தத் தெளிவும், புரட்சிகரமான செயல் திட்டமும், புரட்சிகரமான இயக்கமும் இல்லாமல், ஒரு புரட்சி நடைபெறாது என்பது லெனின் போன்ற அரசியல் ஞானிகளின் அனுபவக்கூற்று. இந்த

ரீதியில் தமிழீழ விடுதலைப் புலிகளாகிய நாம், ஒரு புரட்சிகரமான விடுதலை இயக்கமாக உருப்பெற்றுள்ளோம். புரட்சிகரமான சித்தாந்தத் தெளிவில், ஒரு புரட்சிகரமான செயல் திட்டத்தை வகுத்து அதனைச் செயல்படுத்தி வருகிறோம்.

மக்களின் விடுதலைக்காக உதித்த எமது இயக்கம், மக்கள் இயக்கமாக மலர்ந்து, மக்களின் விடுதலை வேட்கையைப் பிரதி பலிக்கும் மாபெரும் புரட்சிச் சக்தியாக உருப்பெற்று வருகிறது. இந்தச் சூழ்நிலையில், எமது கருத்துக்கள், கொள்கைகளை மக்கள் மத்தியில் பரப்பி, மக்கள் பலத்தை மேலும் அணி திரட்டும் இலட்சியத்தில் தீவிரமாகச் செயற்பட உறுதி பூண்டுள்ளோம். எமது அரசியற் பிரசுரங்கள், கொள்கை விளக்கக் கட்டுரைகள், செயல் திட்டங்கள் மக்கள் மத்தியில் விநியோகிக்கப்படும். எமது இயக்கத் தோழர்கள், பொது மக்கள் அரங்கில் தீவிர பிரச்சாரத்தை மேற் கொள்வர். சிங்கள ஆட்சியாளரின் தணிக்கையையும், ஒடுக்கு முறையையும் தகர்த்து, எமது வெளியீடுகள் பொது மக்கள் கைக்கு எட்டும் என்பதை உறுதியாகக் கூறுகின்றோம்.

கொள்கை பரப்பு, வெளியீட்டுப் பிரிவு,
—தமிழீழ விடுதலைப் புலிகள்.

23—2—1980
தமிழீழம்.

# சுயநிர்ணய உரிமையும், தனிநாட்டுக் கோரிக்கையும்.

இன்று தமிழ்த் தேசிய இனமானது, தனது சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தித் தமிழீழத் தனிநாடு கோருகிறது. ஒரு தேசிய இனத்தின் நிதர்சனமான, நெருக்கடியான அரசியல், சமூக, பொருளாதாரக் கொந்தளிப்பின் எதிரொலியாகவே இக் கோரிக்கை பிறந்தது என்பதனை யாராலும் மறுக்க முடியாது. அதாவது, ஒடுக்கப்பட்டு வந்த ஒரு தேசிய இனம் அந்த ஒடுக்கு முறையின் கொடூரம் தாங்காது, ஒன்றுபட்ட ஒரு இயக்கமாய் உருவெடுத்துத் தனியரசு அமைத்து விடுதலை பெற விரும்பியது. இரு தேசிய இனங்கள் மத்தியில் குமுறிய, முரண்பாட்டு மோதலால் எழுந்த சரித்திர நிகழ்ச்சி இது. ஒடுக்கு முறைக்கெதிராக இன விடுதலை கோரியெழுந்த, இந்தத் தனிநாட்டுக் கோரிக்கையைத் தேசிய வாதத் தீவிரவாதமென்றும், நாட்டைக் கூறுபோட விழையும் நாசகாரச் சதியென்றும் சிங்கள முதலாளித்துவ ஆளும் வர்க்கமும், அதன் அடிவருடிகளும் அசட்டுத்தனமாகப் பிதற்றி வருகிறுர்கள். இந்தப் பிற்போக்குவாதக் கும்பலின் பிதற்றல்கள் பற்றி நாம் கவலை கொள்ளத் தேவையில்லை. இவர்கள் சரித்திரம் புரியாத சர்வமுட்டாள்கள்.

ஒடுக்கப்படுவோருக்கும் ஒடுக்குவோருக்கும் மத்தியில் எழும் முரண்பாடுகள் முற்றி, அது போராட்டமாய்க் குமுறிப் புரட்சியாய் வெடிக்கும் பொழுது வரலாறு படைக்கப்படுகிறது. ஒடுக்கப்படும் இனத்திடம் அல்லது வர்க்கத்திடம்தான் விடுதலை வேட்கை பிறக்கும். ஆகவே, சரித்திரத்தின் சாராம்சமானது விடுதலையின் விசையன்றி வேறென்றுமல்ல. விடுதலையின் மூச்சே சரித்திரமாக அசைகிறது. சரித்திரம் என்பது மனித சுதந்திர சக்தி. அது மனித சுதந்திர வேட்கை என்னும் எரிமலை அது புரட்சியாகவும் வெடிக்கும்; போராகவும் வெடிக்கும். விடுதலை வேண்டி நிற்கும் மக்கள்தான் சரித்திரத்தின் படைப்பாளிகள். எங்கு மக்கள் நசுக்கப்படுகிறுர்களோ, எங்கு முரண்பாடு தலைதூக்குகிறதோ,

எங்கு விடுதலை வேட்கை பிறக்கிறதோ அங்குதான் வரலாறு படைக்கப்படுகிறது. ஒடுக்கப்படும் ஒருஇனம்தான், நசுக்கப்படும் ஒரு வர்க்கம்தான் சரித்திரத்தின் சக்கரத்தைச் சுழற்றும் சக்தியைப் பெறுகிறது. சிங்கள ஆளும் வர்க்கமானது தனது இன ஒதுக்கல் ஒடுக்குமுறை மூலம், தமிழ்பேசும் தேசிய இனத்தைச் சரித்திரம் பிறப்பிக்கும் ஒரு புரட்சிகரமான சகாப்தத்தில் தள்ளிக்கொண்டு இருக்கிறது. ஒடுக்குமினம் இதை உணர்ந்து கொள்வதில்லை.

ஒரு பெரிய தேசிய இனம், ஒரு சிறிய தேசிய இனத்தை நசுக்க விழையும்போது ஏற்படும் முரண்பாட்டால் வர்க்கப்போராட்டம் பாதிக்கப்படும்; அது சோசலிச சனநாயகத்திற்கும் சமதர்ம சமுதாய வளர்ச்சிக்கும் குந்தகமாக அமையும் என்பதனைக் கம்யூனிசத்தின் தந்தை கார்ல் மார்க்சு தெளிவாக உணர்ந்திருந்தான். அவன் ஒரு சமூக விஞ்ஞானி; சரித்திரத்தின் போக்கினைச் சரிவர உணர்ந்தவன். தேசிய இனப் பிரச்சனைக்குத் தீர்வு காணுது போனால் நசுக்கப்படும் மக்கள் மட்டுமன்றி, நசுக்கிவரும் இனமும் விடுதலை காணப் போவதில்லையென்பதனை மார்க்சு அடிக்கடி வலியுறுத்தி வந்திருக்கிறான். "ஒரு இனத்தை அடிமை கொள்ளும் இன்னொரு இனம் தனக்குத்தானே விலங்குகளைப் பிணைத்துக்கொள்கிறது." என்று ஒரு இடத்தில் அவன் குறிப்பிடுகின்றான்.

ஒரு தேசிய இனம் இன்னுமொரு தேசிய இனத்தை ஒடுக்க விழையும் பொழுது, அந்த ஒடுக்குமினத்தின் தொழிலாளி வர்க்கம் ஒன்றுபடாது பிரிந்து பலவீனமடையும் என்பதனைப் பல தடவைகளில் மார்க்சு சுட்டிக் காட்டியிருக்கிறான். அயர்லாந்து தேசத்து மக்களின் தனிநாட்டுக் கோரிக்கையை ஆதரித்த அவன், "அயர்லாந்து மக்களுக்கு எதிராகப் பிரிட்டன் மேற்கொண்டு வரும் ஒடுக்கு முறையே ஆங்கிலேய தொழிலாளி வர்க்கத்தினது வீரியமின்மையின் இரகசியம். ஆங்கிலேய முதலாளி வர்க்கம் தனது அதிகாரத்தை நீடித்து வருவதன் இரகசியமும் இதுவே." என்று எழுதியிருக்கின்றான்.

தேசிய இனங்களின் விடுதலையானது பாட்டாளிவர்க்கப் புரட்சியின் முன்னேற்றத்திற்கு முக்கியமானது; சரித்திரரீதியில் தேசிய விடுதலை எழுச்சியானது பாட்டாளிவர்க்க சர்வதேசிய ஒருமைப்பாட்டிற்கு முன்னோடியானது என்பது, மார்க்சின் கருத்து.

**இலங்கையில் 'மார்க்சிசவாதிகளின்' குழம்பிய நிலை.**

சுயநிர்ணய உரிமைக் கோட்பாடு பற்றியும், தமிழ்பேசும் மக்களின் தனிநாட்டுக் கோரிக்கை பற்றியும் இன்று இலங்கை

அரசியல் அரங்கில் மிகவும் சூடான விவாதம் நடைபெற்று வருகிறது சுயநிர்ணய உரிமையென்றால் என்னவென்பதில், பலர் பல வியாக்கியானங்களை அளிக்கிறார்கள். இதனால் குழப்பகரமான சர்ச்சைகள் எழுந்துள்ளன. துர்அதிட்டவசமாக இந்தச் சித்தாந்தப் பிணக்கில், சிந்தனைத் தெளிவற்ற குழப்பகரமான கருத்துகளைக் கொண்டிருப்பது மார்க்சிசவாதிகளே. சோசலிச அரசியல் கொள்கைத் திட்டமானது சுயநிர்ணய உரிமைக் கோட்பாடு பற்றியும், தேசிய இனப் பிரச்சனை பற்றியும் தெள்ளத் தெளிவான, தீர்க்கமான விளக்கம் அளிக்கிறது. அப்படியிருந்தும், முற்போக்கு வாதிகள் என்று தமக்கு அரசியல் முத்திரையொட்டிக் கொள்வோர் மத்தியில் இந்தக் குழப்பம் நிலவுவதன் காரணம் தான் என்ன?

முதலில் நாம் கவனத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டியது யாதெனில், தேசிய சுயநிர்ணய உரிமையென்பது வரலாற்று ரீதியான அரசியற் கோட்பாடென்பதைத்தான். 18ஆம், 19ஆம் நூற்றுண்டு காலத்தில் மேற்கத்திய முதலாளித்துவம் முன்னேற்றம் கண்டு, முடியாட்சியை முறியடித்து, அரசாட்சியைக் கைப்பற்றித் தேசியஅரசுகள் (National States) நிறுவிய காலகட்டத்தின் போது, சுய நிர்ணய உரிமைக்கோட்பாடானது மக்களின் ஆட்சியுரிமையையும், இறைமையையும் குறித்து நிற்கும் ஒரு அடிப்படையான சனநாயக விதியாகக் கொள்ளப்பட்டது. முதிர்ச்சிகண்ட முதலாளித்துவமும், அதன் தீவிர தேசிய வாதமும் காலனித்துவ, ஏகாதிபத்திய விசுவரூபம் கொண்டு, உலக தேசிய இனங்களை அடிமை கொண்டு, சுரண்டத் தொடங்கிற்று. காலப்போக்கில், காலனித்துவத்திலிருந்தும், ஏகாதிபத்திய ஒடுக்குமுறையிலிருந்தும் தேசிய இனங்கள் விடுதலைபெற விழைந்தபோது, முதலாளித்துவ சனநாயக விதியாகக் கொள்ளப்பட்ட சுயநிர்ணய உரிமைக் கோட்பாடானது, தேசிய விடுதலைப் போராட்டச் சுலோகத்தின்கீழ் முற்போக்கான அர்த்தத்தைப் பெற்று, சோசலிச அரசியற் சித்தாந்தத்தில் முக்கிய இடத்தைப் பெற்றது.

சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டிற்கு தெளிவான வரைவிலக்கணம் அளித்து, சோசலிச அரசியற் சித்தாந்தத்தில் அதன் முக்கியத்துவத்தை வலியுறுத்திய பெருமை லெனினைச் சாரும். கம்யூனிச சித்தாந்தவாதிகளான ரோசா லக்சம்பேர்க், புக்காரின், ரொட்ஸ்கி, ஸ்டாலின் மற்றும் பலருடன் தர்க்கித்து, ஒரு தேசிய இனத்தின் அடிப்படையுரிமைகளுக்காக வாதாடி வந்த அரசியல் ஞானி அவன். லெனினின் கூர்மையான அரசியல் கண்ணோட்டத்தில் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையானது, பல

அம்சங்களில், பலகோணங்களில் அதாவது, சரித்திர காலகட்டம், பொருளாதார அமைப்பு, அரசியல் விழிப்புணர்ச்சி மற்றும் சமூக பூகோள ரீதியில் நுணுக்கமாக அணுகப்படுவதைக் காணலாம். முதலாளித்துவத்தின் வளர்ச்சி, ஏகாதிபத்தியத்தின் எழுச்சி, ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் சுதந்திரக் கிளர்ச்சி, தேசிய விடுதலைப் போராட்டத்தில் வர்க்க உறவுகளில் நிகழும் மாற்றங்கள், சோசலிசப் புரட்சிப் பாதையில் அதன் முக்கியத்துவம், தேசிய இனங்களின் ஒருமைப்பாடு, பாட்டாளி வர்க்கச் சர்வ தேசியம் போன்ற நிலைகளும் ஆராயப்படுகின்றன.

உருசியப் புரட்சியை அடுத்து சோசலிச சமுதாய நிர்மாணத்திற்கான அரசியல் திட்டத்தை வகுக்கும் பெரும்பொறுப்பு லெனினின் தலையில் விழுந்தது. மாபெரும் உருசியப் பேரரசில் பெரிதும் சிறிதுமாய் பல தேசிய இனங்கள் அங்கம் வகித்தன. இந்தத் தேசிய இனங்களின் அடிப்படை உரிமைப் பிரச்சனையைத் தெளிவாக்கும் பொறுப்பு போல்சேவிக் கட்சியைச் சார்ந்திருந்தது. ஒரு பெரிய தேசிய இனம், ஒருசிறிய தேசிய இனத்தை நசுக்க முற்படலாம்; இந்த ஒடுக்குமுறை தலைதூக்குவதை ஒழித்துக் கட்டாது போனால், தேசிய இனங்களின் அடிப்படை சனநாயக உரிமைகள் பேணப்படாது போனால், சரித்திரப் புதுமை வாய்ந்த சமதர்ம சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியாது என்பதனை லெனின் நன்கு உணர்ந்து கொண்டான். ஆகையால் லெனினின் சித்தாந்த விளக்கக் கட்டுரைகளிலும், கொள்கைத் திட்டப் பிரகடனங்களிலும் சுயநிர்ணய உரிமைக் கோட்பாடானது திரும்பத்திரும்ப விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு திட்டவட்டமான விளக்கத்தைப் பெறுவதுடன், அது சோசலிச சனநாயகத்தின் ஆணிவேராக, அடிப்படை நியதியாகக்கொள்ளப்படுவதையும்,காணலாம். அப்படி இருக்கும் பொழுது, மார்க்சிச தரிசனத்தின் மாமேதையென லெனினைத் தமது அரசியற்குருவாக வரித்துக் கொள்ளும் தோழர்கள், தமிழ்த் தேசிய இனப்பிரச்சனையிலும், சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டிலும் குழப்பமான நிலையைக் கொண்டிருப்பதேன்? மார்க்சிச-லெனினிச அரசியற் சித்தாந்தத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ளும் அறிவாற்றல் இவர்களிடம் இருக்கவில்லையென்று எண்ணுவதா? அல்லது அரசியல் சுயநலத்திலும், சந்தர்ப்பவாதத்திலும் சிக்குண்டு இவர்கள் உண்மையைத் திரித்துப் பேசுகிறார்களா? காரணம் எதுவாக இருப்பினும் இவர்கள் கொண்டுள்ள நிலை லெனினின் கொள்கைத் திட்டத்திற்கு முற்றிலும் முரணானது என்பதைத் தெளிவுபடுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தேசிய இனப் பிரச்சனையிலும், சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டிலும் 'மார்க்சிச வாதி'களிடையே நான்கு வகையான கருத்துக்கள் நிலவுகின்றன. இந்த நான்கு விதமான வியாக்கியானங்களும், இலங்கையிலுள்ள நான்கு 'மாக்சிச' அரசியல் இயக்கங்களின் இன்றைய நிலையைக் குறித்து நிற்கின்றன. முதலில் இந்த நான்கு நிலைகளையும் பார்ப்போம்.

**முதலாவது:** சுயநிர்ணய உரிமையை ஆதரிக்கிறோம். ஆனால், பிரிந்து செல்லும் உரிமையை எதிர்க்கிறோம். அதாவது, ஒரு தேசிய இனம் என்ற ரீதியில் இலங்கைத் தமிழ் மக்களுக்குச் சுய நிர்ணய உரிமையுண்டு. ஆனால், தனிநாடு கோரும் உரிமை இல்லை. ஆகவே, தனிநாட்டுக் கோரிக்கையை எதிர்த்தே தீருவோம்.

— சனதா விமுக்தியப் பெரமுனே
(மக்கள் விடுதலை முன்னணி)

**இரண்டாவது:** சுயநிர்ணய உரிமையை ஆதரிக்கிறோம். ஆனால், பிரிவினையை எதிர்க்கிறோம். ஏனெனில், லெனின் பிரிவினையை ஆதரிக்கவில்லை. பாட்டாளிவர்க்கச் சர்வதேசியத்தையும், தேசிய இனங்களின் ஒருமைப் பாட்டையும், உலக சோசலிச சமுதாயத்தையுமே விரும்பினார்.

— பீக்கிங்சார்பு கம்யூனிசக் கட்சி

**மூன்றாவது:** தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்துகிறோம். சுயநிர்ணய உரிமையென்பது பிரிந்து செல்லும் உரிமைதான் கம்யூனிஸ்டுகள் என்ற ரீதியில் இந்த உரிமையை வலியுறுத்துகிறோம். ஆனால், தமிழர் என்ற ரீதியில் பிரிவினை தேவையில்லை என்கிறோம்.

— செந்தமிழர் இயக்கம்

**நான்காவது:** சுயநிர்ணய உரிமையென்பது பிரிந்து செல்லும் உரிமைதான். ஒடுக்கப்பட்டுவரும் தமிழினம் தனிநாடு கோருவது நியாயமானதே. ஆனால், இக்கோரிக்கை ஒரு பொழுதும் நிறைவேறப் போவதில்லை. சாத்தியமாகப் போகாத கோரிக்கைக்குப் போராடி என்ன பயன்? ஆகவே, பிரிவினையை நாம் ஆதரிக்கவில்லை.

— புரட்சிகர மாக்சிசக் கட்சி

இந்த நான்கு வியாக்கியானங்களையும் ஊன்றிக் கவனித்தால் ஒன்று தெளிவாகும். அதாவது, எல்லோருமே சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்கிறார்கள். அதே வேளை எல்லோருமே பிரி

வினையை எதிர்க்கிருர்கள் என்பது தான். முதல் இரண்டு நிலைகளிலும் சுயநிர்ணய உரிமைக் கோட்பாடு என்ருல் என்னவென்பதில் குழப்பம் நிலவுவதைக் காணலாம். மூன்ரும், நான்காம் நிலைகளில் தனிநாட்டுக் கோரிக்கையை அடைவதிலுள்ள இடையூறுகளைக் கருத்தில் கொண்டு, பிரிவினை தேவையில்லை என்ற கொள்கை கடைப்பிடிக்கப்படுகிறது.

இந்த நான்கு வாதங்களையும் ஒவ்வொன்ருக, லெனினின் கொள்கைத்திட்ட விளக்கத்துடன் ஆராய்ந்து பார்ப்போம். அப்பொழுது தான் இவற்றிலுள்ள முரண்பாடு புலனுகும்.

*சுயநிர்ணயஉரிமையும்,*

*பிரிந்து செல்லும் உரிமையும்.*

முதலாவது வாதத்தில் இலங்கைத் தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படுகிறது ஆனல், பிரிந்து செல்லும் உரிமை எதிர்க்கப்படுகிறது. இந்த நிலையைக் கடைப் பிடிக்கும் மார்க்சிசவாதிகள் லெனினின் கொள்கைத் திட்டத்தையோ, சித்தாந்த விளக்கத்தையோ சரிவரப் புரிந்து கொள்ளவில்லை என்பது தெளிவாகிறது. சுயநிர்ணய உரிமை என்ருல் பிரிந்து சென்று தனியரசை அமைத்துக் கொள்ளும் உரிமைதான் என்பதை, லெனின் திட்டவட்டமாகப் பல தடவைகளில் எடுத்துக்கூறியிருக்கிருன். உதாரணமாக, தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையென்ற சித்தாந்த விளக்கக் கட்டுரையில் லெனின் எழுதுகிருன்.

"தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை என்பதன் அர்த்தத்தை நாம் கிரகித்துக் கொள்வதாயின், சட்டச் சொற்பொருட்களைத் திரிக்காமல், அன்றிப்பூடகமான வரை விலக்கணங்களைப் புனையாமல் தேசியவிடுதலை இயக்கங்களின் சரித்திர, பொருளாதார நிலைமைகளை ஆராய்ந்து பார்க்க வேண்டும். அப்படிப் பார்ப்போமாஞல் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை என்பதன் அர்த்தமானது, அத்தேசிய இனங்கள் அந்நிய தேசிய ஆதிக்க அமைப்புகளிலிருந்து அரசியல் ரீதியாகப் பிரிந்து சென்று, சுதந்திரமான தேசிய அரசை நிறுவுவது தான் என்ற தவிர்க்க முடியாத முடிவுக்கு வருவோம்."

அதே கட்டுரையில் இன்னொரு இடத்தில் பின்கண்ட விளக்கம் தரப்படுகிறது.

"மார்க்சிச அரசியல் வேலைத்திட்டத்தில்தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையென்ருல், சரித்திர பொருளாதார கண்ணேட்டத்தின்படி அரசியல் சுயநிர்ணய உரிமையை, சுதந்திரமான

அரசை அமைப்பதைத் தவிர வேறெந்த அர்த்தத்தையும் அது குறிக்கவில்லை."

லெனினின் நிலை எமக்குத் தெளிவாகிறது. சுயநிர்ணய உரிமை என்பது பிரிந்து சென்று தனியரசு அமைக்கும் உரிமையே தவிர, வேறொன்றுமல்ல என்பது, லெனின் அளிக்கும் திட்டவட்டமான விளக்கம். அக்டோபர் புரட்சிக்கு முன்னரும், புரட்சியை அடுத்தும் சாகும் வரைக்கும் இந்த நிலையிலிருந்து லெனின் ஒருபொழுதும் விலகவில்லை என்பது கவனிக்கத்தக்கது. புரட்சிக்குச்சில மாதங்களுக்கு முன்னர் (மே, 1917) தேசிய இனப் பிரச்சனை பற்றி லெனின் எழுதிய கட்டுரையில்,

"உருசியாவில் அங்கத்துவம் வகிக்கும் சகல தேசிய இனங்களுக்கும் சுதந்திரமாகப் பிரிந்து சென்று, சுதந்திரமான தனியரசுகளை அமைக்கும் உரிமை உண்டென்பது அங்கீகரிக்கப்பட வேண்டும். இந்த உரிமையை மறுப்பதோ அல்லது இதனை நடைமுறைச்சாத்தியமாக்கும் உத்தரவாதங்களை அளிக்கத் தவறுவதோ, ஒரு பலவந்தமான இணைப்பு அல்லது ஆக்கிரமிப்புக் கொள்கைக்குச் சமனானது" என்று குறிப்பிடுகிறான்.

1922ம் ஆண்டு டிசம்பரில், லெனின் கடும் சுகவீனத்துடன் படுக்கையிலிருந்தபடி சொல்ல எழுதிய குறிப்பேட்டில், தேசிய இனங்களின் உரிமைப் பிரச்சினையே அவனது சிந்தனையிலிருந்ததை அவதானிக்கலாம்.

"தேசியவாதம் பற்றி பொதுப்படையாக பூடகமான வியாக்கியானங்கள் அளிப்பதில் எவ்வித பயனுமில்லை என்பதனை, தேசிய இனப்பிரச்சனை பற்றி எனது எழுத்துக்களில் ஏற்கனவே சுட்டிக்காட்டியுள்ளேன். ஒடுக்கி வரும் ஒரு தேசிய இனத்தின் தேசியவாதத்திற்கும், ஒடுக்கப்பட்டுவரும் ஒரு தேசிய இனத்தின் தேசியவாதத்திற்கும் மத்தியிலும்; ஒரு பெரிய தேசிய இனத்தின் தேசிய வாதத்திற்கும், ஒரு சிறிய தேசிய இனத்தின் தேசியவாதத்திற்கும் மத்தியிலும் நாம் கட்டாயமாக ஒரு வேறுபாட்டைக் காணவேண்டும். சர்வதேசியம் என்ற போர்வையில் ஒரு பெரிய தேசிய இனம் ஒரு சிறிய தேசிய இனத்தை ஒடுக்கு முறையின் கீழ் வைத்திருந்து, எண்ணற்ற அநீதிகளைப் புரியக்கூடும்" என உருசிய வரலாற்று இன அட்டூழியங்களை உதாரணத்திற்கு எடுத்துக் காட்டும் லெனின், "ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் பேரில், அற்ப விசயங்களுக்காவது நாம் ஏகாதிபத்தியப் போக்கை கடைப்பிடிப்போமானால், அது எமது நேர்மையான, இலட்சிய

பூர்வமான கொள்கைக்குக் குந்தகம் விளைவிப்பதுடன், மேற்கத்திய ஏகாதிபத்தியத்திற்கு எதிரான எமது இலட்சிய பூர்வமான போராட்டத்தையும் மாசுபடுத்திவிடும்" என்கிறான்.

லெனினின் இக்கூற்றுக்களில் இருந்து இரு முக்கிய விடையங்களை நாம் கருத்துக்கு எடுக்கவேண்டும். ஒன்று, பெரிய சிறிய தேசிய இனங்களின் தேசியவாத வேறுபாட்டையும், அடுத்தது, ஒடுக்கும் இனம் தனது ஒடுக்கு முறையை மூடிமறைக்கப் பேசும் ஒருமைப்பாட்டுச் சித்தாந்தத்தையுமே. லெனின் சுட்டிக் காட்டுவது போல ஒடுக்கும் ஒரு பெரிய தேசிய இனத்தின் தேசியவாதமானது, ஒடுக்கப்படும் ஒரு சிறிய தேசிய இனத்தின் தேசியவாதத்திலும் வேறுபாடானது. ஒடுக்குவோரின் தேசியவாதமானது அதிதீவிர இனவாதமே தவிர வேறொன்றுமல்ல. அதே சமயம் ஒடுக்கப்படும் ஒரு இனத்தின் தேசியவாதமானது, ஒடுக்கு முறையை எதிர்த்தெழும் தேசிய விடுதலைப் போராட்டமாதலால் அது முற்போக்கானது. அதனைத் தேசியவாதமெனக் குறிக்காமல் தேசிய விடுதலை எழுச்சியென்பதே மிகப் பொருத்தமானதாகும்.

அன்றொரு காலம், இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்னராக, பிரித்தானிய ஏகாதிபத்திய ஒடுக்கு முறைக்கு எதிராக இனப்பாகுபாடற்ற ஏகோபித்த தேசியவாதம் பிறந்தது. சிங்கள-தமிழ் தேசிய முதலாளிவர்க்கத் தலைமைப் பீடத்தின் கீழ் வர்க்கங்கள் ஒன்றிணைந்த விடுதலையெழுச்சியாகப் பிறந்த இத்தேசியவாதம், தேசிய சுதந்திரத்தையடுத்து இனவாரியாகப் பிளவடைந்து, அதிதீவிர சிங்கள தேசியவாதமாக விசுவரூபம் கண்டது. இந்த அதிதீவிர தேசியவாத ஒடுக்கு முறையின் சரித்திர வெளியீடாகவே தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் பிறந்தது எனலாம். இன்றைய நிலையில் தமிழ் பேசும் மக்கள் ஒடுக்கப்பட்டு வரும் ஒரு சிறிய தேசிய இனம். சிங்கள மக்களோ ஒரு பெரிய தேசிய இனம். அதாவது, சிறிய தேசிய இனமாகிய தமிழர்களை நசுக்கிவரும் ஒரு பெரிய தேசிய இனம். இந்த ரீதியில் சிங்கள தேசிய இனத்தின் தேசியவாதமோ ஏகாதிபத்திய இறுமாப்புடைய அதிதீவிர இனவாதமாகும். ஒடுக்குமுறையில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்ள விழையும் தமிழ் மக்களின் தேசிய உணர்வு இனவாதமாகாது. அது ஒரு உன்னதமான, முற்போக்கான தேசிய விடுதலையெழுச்சியாகும்.

அடுத்ததாக, நாம் கவனிக்கவேண்டியது என்னவென்றால் ஒடுக்குமினத்தின் ஒருமைப்பாட்டுச் சித்தாந்தத்தையே. சிங்கள முதலாளித்துவ பிற்போக்குவாதமும் தருமம், தார்மீகம், ஐக்கியம் என்றெல்லாம் பிதற்றி வருகிறது. இந்த நரிவாதம் எமக்கு நன்கு

புரியும். நாம் இங்கு ஆராய விழைவது ஒடுக்கி வரும் பெரிய
தேசிய இனத்தைச் சார்ந்த 'முற்போக்குவாதிகளின்' பிற்போக்
கான திரிபுவாதத்தையே. "லெனின் சுட்டிக் காட்டியது போல,
ஒடுக்கும் பெரிய தேசிய இனத்தைச் சார்ந்த சோசலிசவாதிகளும்
இனத்தேசிய வாதத்தில் சிக்குண்டு, சிறிய இனத்தின் தேசியப்
பிரச்சனையில் தவறுதலான் கொள்கையைக் கடைப்பிடிக்கலாம்
என்பதையே. நிதர்சனமாக, நேர்மையாக தேசிய இனப் பிரச்
சனையை அணுகாமல், மார்க்சிச அரசியல் வேலைத் திட்டத்திற்கு
முரணாக, சித்தாந்தத் தெளிவற்ற திரிபுவாதம் பேசி, சோசலிசத்
தின் சுலோகத்திலும் பாட்டாளிவர்க்க ஒருமைப்பாட்டுப் போர்வை
யிலும் இவர்கள் இன ஒடுக்கு முறையை நீடிக்கலாமென லெனின்
எண்ணினான். லெனின் இவ்விதம் சிந்தித்ததில் தவறில்லை.
ஏனெனில், லெனின் இறந்ததும் ஆட்சிபீடம் ஏறிய ஸ்டாலின்
சோசலிச நிர்மாணம், பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் என்ற
போர்வையின் கீழ் தேசிய இனங்களை நசுக்கத் தொடங்கினான்.
உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டால் கிறீமயன் டாட்டர்ஸ்,
வோல்கா ஜேர்மானியர், மஸ்கெட்டியன்ஸ் போன்ற தேசிய இனங்
கள், ஐரோப்பிய எல்லைப் பிராந்தியங்களில் இருந்து இடம் பெயர்க்
கப்பட்டுச் சைபீரிய பனிப்படல பிரதேசத்திற்கும், மத்திய ஆசிய
பிராந்தியத்திற்கும் பலவந்தமாகக் கொண்டு செல்லப்பட்டுக்
குடியேற்றப்பட்டார்கள் என்பதை மார்க்சிச வாதிகள் அறிவர்.
ஆகவே, ஒரு பெரிய தேசிய இனத்தைச் சார்ந்த சோசலிசவாதி
களின் தேசியவாதம் படிந்த கொள்கைத் திட்டங்களிலும்,
சித்தாந்த விளக்கங்களிலும் ஒடுக்கப்படும் சிறிய தேசிய இனம்
மிகவும் விழிப்பாக இருக்கவேண்டும். இதன் அடிப்படையில் நாம்
ஏற்கனவே குறிப்பிட்ட சுயநிர்ணய உரிமை சம்பந்தமான நான்கு
வியாக்கியானங்களில் முதல் நிலையை எடுத்துக் கொள்வோம்.

பெரும்பான்மை இனத்தைச் சார்ந்த இடதுசாரி இயக்கம்
ஒன்றின் தெளிவற்ற சித்தாந்தக் குளறுபடி இது. அதாவது,
தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை ஆதரிக்கும்
இவர்கள் பிரிந்து செல்லும் உரிமையை அதாவது, பிரிந்து சென்று
தனியரசு அமைக்கும் உரிமையை எதிர்க்கிறார்கள். சுயநிர்ணய
உரிமை என்பது பிரிந்து சென்று தனியரசு அமைக்கும் உரிமை
யைத் தவிர வேறொன்றுமல்ல என்பது லெனினின் திட்டவட்ட
மான விளக்கம் என்பதைப் பார்த்தோம். ஆகவே தமிழ்த்தேசிய
இனத்தின் சுயநிர்ணய உரிமையை ஆதரிப்பதாக இவர்கள் கூறிக்
கொண்டாலும், பிரிந்து சென்று தனியரசு அமைக்கும் உரிமையை
எதிர்ப்பதனால், இவர்கள் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை
மறுக்கிறார்கள் என்பதுதான் அர்த்தம். இவர்களது நிலையானது,

லெனினின் புரட்சிப் பாதைக்கு முற்றிலும முரணானது; மார்க்சிச லெனினிச அரசியல் வேலைத் திட்டத்திற்கு மாறானது. இவர்கள் உண்மையில் மார்க்சிச வாதிகளுமல்ல, சோசலிச வாதிகளுமல்ல. இப்படியான சந்தர்ப்பவாதக் கும்பலை அதிதீவிர தேசியவாதிகள் என்கிறான் லெனின்.

"ஒடுக்கிவரும் தேசிய இனத்தைச் சார்ந்த எந்தவொரு சோசலிசவாதியாவது, ஒடுக்கப்பட்டுவரும் தேசிய இனத்தின் சுய நிர்ணய உரிமையை அதாவது, பிரிந்து செல்லும் உரிமையை ஆதரித்து அந்த உரிமைக்காகப் போராடத் தவறினால், அவன் ஒரு சோஷிசவாதியாக இருக்கமுடியாது. அவன் உண்மையில் ஒரு அதி தீவிர தேசியவாதி" என்கிறான் லெனின்.

லெனினைத் தமது அரசியற் குருவாக வரித்துக் கொள்ளும் இவர்கள், லெனினின் சோசலிச சனநாயக இலட்சியத்திலிருந்து மாறுபட்டு நிற்பதன் காரணமென்ன? ஒரு பெரிய தேசிய இனத்தால் சிறிய தேசிய இனமொன்று நசுக்கப்பட்டு வருவதை நிதர்சன மாக நேரில் கண்டபோதிலும், ஒடுக்கப்படும் மக்களின் உரிமையில் கண்மூடித்தனமாக நடந்து கொள்வதேன்? இதற்குக் காரணம் நாம் கண்டு பிடிக்கத் தேவையில்லை. இவர்களின் பிற்போக்கு வாதத்தை லெனினே பிட்டுக்காட்டியிருக்கிறான். இவர்கள் ஒடுக்கி வரும் பெரிய தேசிய இனத்தைச் சார்ந்திருப்பதால், அப்பெரிய இனத்தின் அதிதீவிர தேசியவாதத்தில் சிக்குண்ட சந்தர்ப்பவாதி கள். இவர்கள் தம்மை மார்க்சிச-லெனினிச வாதிகள் என்று அழைக்கத் தகுதியற்றவர்கள்.

**தனிநாட்டுக் கோரிக்கையும்,**
**பாட்டாளிவர்க்க ஒருமைப்பாடும்.**

இனி, மார்க்சிச வாதிகளின் இரண்டாவது நிலையை எடுத்துக் கொள்வோம். இவர்கள் என்ன சொல்கிறார்கள்.

"தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஆதரிக்கிறோம். ஆனால், பிரிவினையை எதிர்க்கிறோம். ஏனென்றால், லெனின் பிரிவினையை ஆதரிக்கவில்லை. பாட்டாளிவர்க்க சர்வதேசியத்தை யும், தேசிய இனங்களின் ஒருமைப்பாட்டையும், உலக சோசலிச சமுதாயத்தையுமே விரும்பினான் என்பது இவர்களது வாதம்.

தேசிய இனப்பிரச்சனை சம்பந்தமாக மார்க்சிச அரசியல் தரிசனத்தில் இந்த நிலை மிகவும் சிக்கலானதாக, குழப்பகரமான தாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. லெனினின் மேற்கோள்களைத் திரித்துக்காட்டி, சுயநிர்ணய உரிமைக்கு மாறாக ஒருமைப்பாட்டுச்

சித்தாந்தத்தை வலியுறுத்தி மார்க்சிசவாதிகள் சிலர் மக்களைக் குழப்பி வருகிறார்கள். ஒரு தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமை பற்றியும், பாட்டாளிவர்க்க ஒருமைப்பாடுபற்றியும் லெனின் உண்மையில் எவ்வித நிலையைக் கொண்டிருந்தான் என்பதைத் தெளிவுற விளங்கிக் கொள்வோமானால், இந்தக் குழப்பத்தை நாம் தவிர்த்துக் கொள்ளலாம். அதாவது, இந்தக் குழப்பத்தை உண்டு பண்ணும் சோசலிசப் போர்வையின் கீழ் உள்ள சந்தர்ப்பவாதத்தைக் கண்டு கொள்ளலாம்.

ஒரு தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையும் அதாவது, பிரிந்து செல்லும் உரிமையும், பாட்டாளிவர்க்க சர்வ தேசியமும் அதாவது, தேசிய இனங்களின் ஒருமைப்பாடும் ஒன்றுக்கொன்று முரணான நிலைகள் எனக் கொள்வது தவறு. தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படாமல், தேசிய இனங்களின் சமத்துவம் நிலை நாட்டப் படாமல், உண்மையான பாட்டாளிவர்க்க சர்வதேசியம் அதாவது, தேசிய இனங்களின் உண்மையான ஒருமைப்பாடு உருப்பெறாது என்பது லெனினின் கொள்கைத் திட்டமாகும்.

தேசிய இனப் பிரச்சனை உள்ளவரை அதாவது, ஒரு தேசிய இனம் ஒடுக்குமுறையின் கீழ்உள்ளவரை, பாட்டாளிவர்க்கச் சர்வ தேசியம் பேசிப் பயனில்லை. தேசிய இனச்சமத்துவம் தான் சர்வ தேசியத்தின் பாதை. பின்னதற்கு முன்னது அத்திவாரம். தேசிய இன சமத்துவ அத்திவாரமின்றிப் பாட்டாளிவர்க்க ஒருமைப்பாடெனும் வீட்டைக் கட்டியெழுப்ப முடியாது. இது லெனினின் தீர்க்கமான விளக்கம்.

தேசிய இனங்களின் பிரிந்து செல்லும் உரிமை அங்கீகரிக்கப்பட்டு, இனங்கள் மத்தியில் உருப்படியான, உண்மையான சமத்துவம் நிலைநாட்டப்பட்டு, தேசியவாத, இனவாத ஒடுக்குமுறை முற்றாக ஒழிக்கப்பட்டால். அதாவது, கொள்கையளவில் மாத்திரமல்ல நடைமுறையில் கடைப்பிடிக்கப்பட்டால் சிறிய தேசிய இனங்களின் அச்சங்கள், ஐயப்பாடுகள் அகன்று அவை தாமாக, தம்மிச்சையாக. தமது சமூக பொருளாதார நலன்கள் கருதி, ஒரு சமதர்ம அரசின் கீழ் ஒற்றுமைப்பட்டுஒத்திசைவாக வாழ விரும்புவது சாத்தியமாகும் என்கிறான் லெனின். ஆகவே, தேசிய இனங்களின் ஐக்கியப்பாட்டிற்குப் பிரிந்து செல்லும் உரிமையின் அங்கீகாரம் அத்தியாவசியமாகும். பிரிவதற்குச் சுதந்திரம் வழங்கப்பட்டால் தான், அது ஒற்றுமைக்கு வழி வகுக்கும் என்ற தர்க்கீக உண்மையை லெனின திரும்பத் திரும்ப வலியுறுத்துகின்றான்.

தேசிய இனங்களின் பிரிந்து செல்லும் உரிமை அங்கீகரிக்கப் படுமாயின், அது நாட்டைப் பிளவுபடுத்திச் சிதறடித்துவிடுமென்று சில உருசிய மார்க்சிச சித்தாந்தவாதிகள் லெனினிற்கெதிராக வாதாடி வந்தனர். இவர்களின் குழம்பிய நிலைக்கு மாருக லெனின் திட்டவட்டமான, தெளிவான கருத்தை வலியுறுத்தி வந்தான். அதாவது, தேசிய இனங்களுக்குப் பிரிந்து, செல்லும் உரிமை அளிக்கப்பட்டால்தான் நாடு பிரிந்து, சி தை ந் து போகும் அபாயத்தைத் தவிர்த்துத் கொள்ளலாம் என்பதையே. இந்த உண்மையை உறுதிப்படுத்த லெனின் விவாகரத்துச் சட்டத்தை உதாரணத்துக்கு எடுத்துக் காட்டுகிருன். விவாகரத் துக்கோரும் அதாவது, பிரியும் உரிமைகோரும் சட்டம் நடைமுறை யில் இருப்பதால், தாம்பத்திய உறவு சிதைந்து விடுவதில்லை. அதற்குமாருக சன நாயக அடிப்படையில் குடும்ப உறவு மேலும் பலப்படுவதற்கு வழிவகுக்கும் என்பது லெனினின் வாதம்.

“சுயநிர்ணய உரிமையை அதாவது, பிரிந்து செல்லும் உரிமையை ஆதரிப்பவர்களைப் பிரிவினைக்கு ஊக்குவிப்பதாகக் குற்றம் சாட்டுவது, விவாகரத்துச் சுதந்திரத்தை ஆதரிப்பதால் குடும்பத்தைக் குலைக்க ஊக்குவிப்பதற்குச் சமன் என்னும் முட்டாள் தனமான, பாசாங்கான குற்றச் சாட்டாகும்” என்று லெனின் சுட்டிக்காட்டுகிருன்.

பிரிந்து செல்லும் உரிமையை வழங்காது தேசிய இனப் பிரச்சனைக்குத் தீர்வுகாண விழைவது, அதாவது, இன்னொரு விதத்தில் சொல்லப் போனல் தேசிய இனங்களின் அடிப்படை யான சன நாயக உரிமையை உதாசீனம் செய்து, பாட்டாளிவர்க்க ஒருமைப்பாட்டை வலியுறுத்தித் தேசிய இனங்களை இணைக்க முயல்வது பலவந்தமான, ஆக்கிரமிப்பான பிணைப்பாக முடியும் என்பதும் லெனினின் வாதம். இப்படியான பலவந்தமான, பலாத்காரமான இணைப்பானது, பாட்டாளி வர்க்க ஒருமைப் பாட்டிற்குக் குந்தகமானது. பாட்டாளிவர்க்கப் பிளவுக்கு அது வழிகோலும். உதாரணமாக, ஒரு சிறிய தேசிய இனம் பலவந்த மான முறையில், ஒரு பெரிய தேசிய இனத்துடன் இணைக்கப்படு மாயின் இப்படியானஒடுக்கு முறைக்கு ஆளாகும் ஒரு சிறிய தேசிய இனத்தைச் சார்ந்த பாட்டாளிவர்க்கமானது, முதலாளிவர்க்கத் திற்கு ஆதரவாக மாறுவதுடன், ஒடுக்கி வரும் பெரிய தேசிய இனத்தின் பாட்டாளிவர்க்கத்தைத் தனது எதிரியாகவும் எண்ணக் கூடும். இதை லெனின் நன்கு உணர்ந்திருந்தான். ஆகவேதான் தொழிலாளிவர்க்க ஐக்கியத்திற்கு, முதலில் தேசிய இனங்களின் சமத்துவம் நிலை நாட்டப்பட வேண்டுமென்பதை வலியுறுத்தினன்.

"முதலாளிவர்க்கத்தை ஆட்சியிலிருந்து கவிழ்த்து, ஒரு சோசலிசப் புரட்சியை நிறைவேற்றச் செய்யும் பலம் எமக்குத் தேவையாயின், தொழிலாளி வர்க்கம் நெருக்கமாக ஐக்கியப்பட வேண்டும். இந்த ஐக்கியத்தை வளர்ப்பதாயின் சுயநிர்ணய உரிமைக்கு ஆதரவாகவும், பலவந்தமான இணைப்புக்கு எதிராகவும் நாம் போராட வேண்டும்" என்கிறன் லெனின். ஆகவே, பலவந்தமான அதாவது, மக்களின் இசைவில்லாத இணைப்பானது தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமையை மீறும் நடவடிக்கை மாத்திரமன்றி, அது மிகவும் பாரதூரமான இன ஒடுக்குமுறை என்பதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

கார்ல் மார்க்சு உலகப் பாட்டாளி வர்க்கத்தின் ஒருமைப்பாட்டை வலியுறுத்தினன்; உலக சோசலிச சமுதாயத்தை விரும்பினன்; அகிலப் பாட்டாளிவர்க்கமே ஐக்கியப்படு என்று முழங்கினன். லெனினும் ஒரு சர்வதேசியவாதி. "முதலாளித்துவம் ஒரு சர்வதேச சக்தி. அதனை வெற்றி கொள்வதாயின் சர்வதேசத் தொழிலாளர்களின் கூட்டணி அவசியம், சர்வதேசத் தொழிலாளர்களின் சகோதரத்துவம் அவசியம்" என்று முழங்கி வந்தவன். ஆகவே, மார்க்சிச—லெனினிச அரசியல் திட்டத்தைத் தழுவும் ஒரு பொதுவுடமைவாதி பாட்டாளிவர்க்க ஒருமைப்பாட்டிற்குப் பாடுபடத்தான் வேண்டும். ஆனல், இந்த ஒருமைப்பாட்டிற்கு அடித்தளமாக விளங்குவது தேசிய இனங்களின் ஒருமைப்பாடு என்பதை, எந்தவொரு பொதுவுடமைவாதியும் மறந்துவிடக் கூடாது. ஒரு தேசிய இனம் ஒடுக்கு முறையில் இருக்கும்பொழுது, அத்தேசிய இனத்தின் விடுதலைக்காகப் போராடாமல் சர்வதேசியம் பேசுவதோ, பாட்டாளிவர்க்க ஒருமைப்பாட்டை வலியுறுத்துவதோ உண்மையான மார்க்சிச கொள்கைத் திட்டம் ஆகாது. அது சோசலிசப் புரட்சிக்கும் வழிவகுக்காது. தேசிய இனங்களின் மத்தியில் பரிபூரண நம்பிக்கையும், பரஸ்பர சகோதரத்துவமும் முதலில் நிலைநாட்டப்படவேண்டும். இது அப்படி இலகுவான செயல் அல்ல. காலம் காலமாக தேசியவாத, இனவாத ஒடுக்குமுறையின்கீழ் நசுக்கப்பட்டுவந்த, ஒரு தேசிய இனத்தின் நல்லெண்ணத்தைப் பெறுவது கடினமான செயல்.

"நாம் விரும்புவது, தேசிய இனங்களின் தன்னிச்சையான ஒருமைப்பாட்டையே; ஒரு தேசிய இனம், இன்னெரு தேசிய இனத்தைப் பலவந்தம் செய்யாத ஒருமைப்பாட்டையே; பரிபூரண நம்பிக்கையில், பரஸ்பர சகோதரத்துவ அங்கீகாரத்தில், பரிபூரண தன்னிச்சையான இணக்கத்தில் கட்டப்படும் ஒருமைப்பாட்டையே. திடீரென, ஒரே தடவையில் இந்த ஒருமைப்

பாட்டை உருவாக்க முடியாது. பெரும் பொறுமையுடன் சகல சூழ்நிலைகளையும் கருத்திற்கொண்டு, இந்த இலட்சியத்தை நோக்கிநாம் செயற்பட வேண்டும்'' என்று லெனின் சொல்கிருன்.

இன்னுமொரு கட்டுரையில் ''ஒடுக்கும் தேசிய இனத்தின் அல்லது பெரிய தேசிய இனத்தின் சர்வதேசியவாதமானது, தேசிய இனங்களின் சமத்துவத்தைப் பேணுவதில் மாத்திரம் நின்றுவிடாது, தான் புரிந்த அநீதிகளுக்குப் பரிகாரமாகத் தனது சமத்துவத்தையே விட்டுக் கொடுக்கக் கூடியதாக அமைய வேண்டும்'' என்கிருன் லெனின். ''இதனைப் புரிந்துகொள்ளாதவன், தேசிய இனப்பிரச்சனையில் உண்மையான பாட்டாளி வர்க்க நோக்கினை அறியாதவன். ஆகையால், இவனது பார்வை உண்மையில் குட்டி பூர்சுவா நோக்காகும்'' எனக் குறிப்பிடுகிருன்.

இந்தச் சந்தர்ப்பத்தில், நாம் முன்பு கூறிய சுயநிர்ணய உரிமை சம்பந்தமாக, சில மார்க்சிசவாதிகளின் இரண்டாவது நிலையை எடுத்துக்கொள்வோம். தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை ஆதரிக்கும் இவர்கள், பிரிந்து செல்வதை எதிர்க்கிருர்களாம். ஏனெனில், லெனின் பாட்டாளிவர்க்க சர்வதேசியத்தை வலியுறுத்தினுன் என்பதற்காக. இந்தத் திரிபு வாதம் இப்பொழுது எமக்குத் தெளிவாகிறது. லெனின் பாட்டாளிவர்க்க ஒருமைப்பாட்டை வலியுறுத்தினுன் என்பது உண்மைதான். ஆனல், தேசிய இனப்பிரச்சனை தீராமல், ஒடுக்குமுறை ஒழியாமல், தேசிய இனங்களின் சமத்துவம் நிலை நாட்டப்படாமல் ஒருமைப்பாட்டுச் சித்தாந்தம் பேசுவது சந்தர்ப்ப வாதம் ஆகும் என்பது, லெனினின் திட்டவட்டமான கொள்கை. ஆனல், இந்த மார்க்சிசவாதிகளோ சர்வதேசியம், உலக சோசலிசம் என்ற மார்க்சிசக் கோட்பாடுகளின் உண்மையான அர்த்தத்தை அறியாது, அவற்றை நடைமுறையில் சாத்தியப் படுத்தும் வழிவகைகளை ஆராயாது, ஒருமைப்பாட்டு வேதாந்தம் பேசுகிருர்கள்.

ஒடுக்கப்பட்டுவந்த தமிழ்த் தேசிய இனம், அந்த ஒடுக்குமுறையின் உக்கிரம் தாங்காமல், தனது சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தித் தனிநாடாக விடுதலை பெறவிழைந்தது. ஒடுக்குமுறைக்கெதிரான எந்த விடுதலைப் போராட்டத்தையும், அது இலட்சியத்தில் முற்போக்கானது என்பதால், அதைப் பொதுவுடமைவாதிகள் ஆதரிக்கக் கடமைப்பட்டவர்கள். இங்கு ஒற்றுமையை அல்ல, ஒடுக்குமுறையையே நாம் கருத்திற்கொள்ள

வேண்டும். ஏனெனில், ஒடுக்குமுறையின்கீழ் ஒற்றுமை ஒரு பொழுதும் சாத்தியமாவதில்லை. கணவனின் கொடூரமான ஒடுக்குமுறை தாங்காது விவாகரத்துக் கோரும் பெண்ணிடம், பிரிவினை வேண்டாம், தாம்பத்திய ஒத்துறவே சிறந்தது என்று சொல்வது முழுமுட்டாள்தனமானது.

ஒடுக்குமுறை நீங்காமல், ஒற்றுமை ஏற்படப் போவதில்லை என்பதால்தான், லெனின் போன்ற அரசியல் மேதைகள், தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தினார்கள். ஒரு தேசிய இனத்திற்குப் பிரிந்து செல்லும் உரிமையுண்டு. ஒடுக்கு முறை தாங்காது போனால், அத்தேசிய இனம் பிரிவினைப் போராட்டத்தில் குதிக்கலாம். ஆகவே, இந்தப் பிரிவினையைத் தவிர்த்து ஒற்றுமையை நிலை நாட்டுவதானால், ஒடுக்குமுறை அகல வேண்டும்; தேசிய இனச் சமத்துவம் நிலை நாட்டப்படவேண்டும்; இதுவே பாட்டாளிவர்க்க சர்வதேசியத்திற்கும், உலக சோசலிச சமுதாயத்திற்கும் வழிகோலும் உன்னதமான பாதையென்பது, லெனினின் உறுதியான கொள்கையாகும்.

ஆகவே, லெனினின் தெளிவான அரசியல் கொள்கைத் திட்டத்தைத் திரித்து, சர்வதேசியம் பேசும் 'சோசலிசவாதிகள்' என்போரின் சந்தர்ப்பவாதத்தின்மீது, தமிழினம் விழிப்பாக இருக்கவேண்டும்.

*பிரியும் உரிமை வேண்டும்,*

*பிரிவினை தேவையில்லை.*

இனி, பொதுவுடமைவாதிகள் சிலர் மேற்கொண்டுள்ள, மூன்றாவது நிலையை விசாரணைக்கு எடுத்துக்கொள்வோம். இவர்கள் கூறுவது என்ன?

"தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்துகின்றோம். சுயநிர்ணய உரிமையென்பது பிரிந்து சென்று தனியரசு அமைக்கும் உரிமைதான். கம்யூனிஸ்டுகள் என்ற ரீதியில் இந்த உரிமையை வலியுறுத்துகின்றோம்; ஆனால், தமிழர் என்ற ரீதியில் பிரிவினை தேவையில்லையென்கிறோம்" என்பது இவர்களது வாதம். இவர்களும் லெனினைஉதாரணத்திற்கு எடுத்துக்காட்டி, தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சனை, சோசலிச அரசியல் வேலைத் திட்டத்தின்படி தீர்வுகாணப்பட வேண்டுமென வாதிக்கிறார்கள். மார்க்சிச சித்தாந்தத்தின்படி, இவர்களது நிலை சரியானதா? தமிழ் பேசும் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு, இவர்கள் காட்டும் பாதை விமோசனம் அளிக்குமா?

லெனினின் கொள்கைத் திட்டத்திலிருந்து, இவர்கள் அளிக்கும் விளக்கம் சரியானதா?

இந்த வினுக்களுக்கு விடையளிப்பதற்கு முன்பாக, நாம் கவனத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டியது என்னவென்ருல், தமிழீழ மக்கள் எதற்காகத் தனியரசு கோருகிருர்கள், இந்தக் கோரிக்கை பிறந்ததன் காரணமென்ன, ஒரு தேசிய இனம் ஒடுக்கு முறைக்கெதிராகப் போராடுகையில் ஒரு பொதுவுடமைவாதி யானவன் (தமிழனே அன்றிச் சிங்களவனே) கடைப்பிடிக்க வேண்டிய கொள்கையென்ன, தேசிய விடுதலைப் போராட்டத் திற்கும் வர்க்கப் போராட்டத்திற்குமுள்ள தொடர்பினை ஆராய்ந்து சோசலிசப் புரட்சியை நோக்கி நாம் கடைப்பிடிக்க வேண்டிய பாதையென்ன, என்பவற்றைத்தான். முதலில், தமிழ் மக்களின் தனிநாட்டுக் கோரிக்கை, ஏன் எழுந்தது என்பதைப் பார்ப்போம்.

சிங்கள—தமிழ் தேசிய முதலாளிகளின் ஒன்றிணைந்த தலைமை யின்கீழ், வர்க்கங்கள் ஒன்றுசேர்ந்த தேசிய விடுதலை இயக்கம், பிரித்தானிய ஏகாதிபத்தியத்திலிருந்து 1948இல் அரசியல் விடுதலை பெற்றது. தேசிய சுதந்திரம் கிடைத்ததையடுத்து அரசியல் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளும் விவகாரத்தில், சிங்கள-தமிழ் முதலாளித்துவ ஆளும் கும்பலிடையே, பூசலும் பிணக்கும் ஏற்படத் தொடங்கின. இனவாதமும், மதவாதமும் கலந்த அதிதீவிர தேசியவாதத்தால் தூண்டப்பட்ட சிங்கள ஆளும் வர்க்கம், தமிழ் முதலாளிவர்க்கத்தின் அரசியல் அபிலாசைகளை நிராகரித்தது மட்டுமன்றி, தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப் பறித்து, அவர்களை இனவாரியாக நசுக்கத் தொடங்கியது. முதலில், மலையகத் தமிழ்த் தொழிலாளி வர்க்கத்தின், குடியுரிமை பறிபோயிற்று. பின், தமிழ்பேசும் மக்களின் மொழியுரிமை, பறிபோயிற்று; பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த, பாரம்பரிய நிலங்களும் பறிபோகத் தொடங்கின. தமிழினமானது, ஒரு திட்டமிட்ட பொருளாதார, சமூக, கலாச்சார ஒடுக்குமுறைக்கு ஆளாக்கப்பட்டது. இந்த ஒடுக்குமுறைக்கு எதிராகக் கிளர்ந்த தமிழ்த் தேசிய இயக்கத் தலைமைப்பீடம், மக்களை அணிதிரட்டிப் பிரதேச சுயாட்சி வேண்டி, அமைதிவழிப் போராட்டங்களை நடாத்தியது. போராட்டத்தின் பின்திரையில், சிங்கள ஆளும் வர்க்கத்துடன் பேரம் பேசி, ஒப்பந்தங்கள் செய்யவும் விழைந்தது. ஆனால், தீவிர சிங்கள இனவாதமும், தேசியவாதமும் அதற்கு இடமளிக்கவில்லை.

1970ஆம் ஆண்டிலிருந்து, தமிழ்த் தேசிய இனத்திற் கெதிரான ஒடுக்குமுறை தீவிரமடையத் தொடங்கியது. தீவிர

சுதந்திரக் கட்சியும்,
சிங்கள இனவாதத்தின் திருவுருவமான இடதுசாரிகளும் கூட்டுச்
சோசலிச விரோதிகளான பழைய இந்த அநீதியான ஒடுக்கு
சேர்ந்த ஆளும் வர்க்கமானது, சட்டரீதியான அங்கீகாரம்
முறைக்கு அரசியல் அமைப்புமூலம், ஏழாண்டு ஆட்சிக்
வழங்கியது. இந்த இனவாதக் கும்பலின் உச்சக்கட்டமாக அமைந்தது.
காலம், இன ஒடுக்குமுறையின் அனுபவித்து வந்த தேசிய
முப்பதாண்டுகாலமாக, தமிழீழம் காலத்தில் உக்கிரமடைந்து,
ஒடுக்குமுறை, இந்த ஏழாண்டு தொடங்கியது. இந்த ஒடுக்கு
தமிழரின் வயிற்றில் உதைக்கத் காரணமாக, விடிவில்லை என்ற
முறையின் அதிதீவிர அழுத்தம் தமிழ் இளைஞர் சமுதாயம்,
விரக்தியின் விளிம்பிற்குத் தள்ளப்பட்ட பாதையை விரும்பியது.
தேசிய இன விடுதலைக்குப் புரட்சிகரமான ஒன்றுபட்டன. தனிநாட்டுக்
ஒடுக்குமுறைக்கெதிராக வர்க்கங்கள் தனியரசு அமைக்கும்
கோரிக்கை, அதாவது, பிரிந்து சென்று ஒடுக்கப்பட்ட
கோரிக்கை தவிர்க்க முடியாததாய்உருப் பெற்றதால், விசுவரூபம் கொண்ட
இனத்தின் ஒன்றிணைந்த கோரிக்கையாக தலைமை தாங்கும் பெரும்
தால், இத்தேசிய விடுதலையியக்கத்தைத் தலையில் வைக்கப்
பொறுப்பு, கூட்டணித் தலைமைப் பீடத்தின்
பட்டது.

எந்தவொரு அரசியல்
தனிநாட்டுக் கோரிக்கையானது, இது ஒருவரலாற்று நிகழ்ச்சி;
கட்சியினதும் கண்டுபிடிப்பல்ல. விடுதலையெழுச்சி;
ஒடுக்கப்பட்டு வந்த ஒரு தேசிய இனத்தின் முரண்பாடுகளால் எழுந்த
நெருக்கடியான பொருளாதார, சமூக,
தவிர்க்க முடியாத அரசியல் கிளர்ச்சி.

இலங்கை
இந்தத் தனிநாட்டுக் கோரிக்கையானது, தமிழ் அரசியலில்,
யின் அரசியல் வரலாற்றில், குறிப்பாகத் தொடக்கி
புரட்சிகரமான ஒரு புதிய சகாப்தத்தைத் மொழிப்
வைத்தது. அதாவது, கால் நூற்றுண்டுகாலமாக இழுபட்டு
பிரச்சனையாக, சிறுபான்மை இனப்பிரச்சனையாக
வந்த தமிழர் பிரச்சனை, ஒரு தேசிய இனப்பிரச்சனையாகத்
உருவம் பெற்றது; சுயநிர்ணய உரிமைப் பிரச்சனையாகத்
திருப்பம் பெற்றது; ஒரு தேசிய இனத்தின் தேசிய
விடுதலைப் போராட்டமான அமைப்பைப் பெற்றது.

பாராளுமன்ற
முதலாளித்துவத்தின் அதிகார அமைப்பான தேசிய
மும், அதன் பிற்போக்கான சனநாயகக் கோட்பாடும் உரிமை
இனப் பிரச்சனை பற்றியோ அல்லது சுயநிர்ணய

பற்றியோ தெளிவான நிலையைக் கொண்டிருக்கவில்லை. முதலாளித்துவத்தின் வெறியாட்டத்திலிருந்தே தேசிய இன ஒடுக்குமுறை பிறப்பதால், முதலாளித்துவ ஆளும் வர்க்கமானது, ஒடுக்கப்படும் இனத்தின் சமூக, பொருளாதார, அரசியல் கொந்தளிப்பின் யதார்த்த நிலையை நிதர்சனமாக, நீதியாக அணுகும் அக்கறையோ, ஆற்றலோ அற்றது. ஆகவே, தமிழ் பேசும் இனத்தின் தேசியப் பிரச்சனையை, பாராளுமன்றச் சன நாயகம் மூலம் அணுகவோ அன்றித் தீர்த்துவைக்கவோ முடியாது.

தேசிய இனப் பிரச்சனையும், தேசிய விடுதலைப் போராட்ட மான அதன் எழுச்சியும், ஒடுக்கப்படும் மக்களின் விடுதலைக் குமுறல் என்பதால், மார்க்சிச—லெனினிசச் சித்தாந்தத்தில் அதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. சோசலிச சனநாயக அரசியல் வேலைத் திட்டத்தில், இது ஆணிவேரான அம்சமாகக் கொள்ளப்படுகிறது. ஆகையால், இன ஒடுக்குமுறையின் அழுத்தம் காரணமாய் விடுதலை வேண்டும் ஒரு சமுதாயம், மார்க்சிச—லெனினிச கொள்கைத் திட்டத்தின் அடிப்படையில் அதாவது, விஞ்ஞான சோசலிசத்தின் அடிப்படையில், தனது அரசியல் சித்தாந்தத்தையும், போராட்டச் செயல்திட்டத்தையும் அமைப்பதே சிறந்த வழியாகும்.

*விடுதலை இயக்கமும், வர்க்கப் போராட்டமும்.*

தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தை, மக்கள் எழுச்சி இயக்கமாக மாற்றுவதில் முக்கிய பங்கெடுத்த தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைப் பீடம், பழமைவாத, நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்தது; அவ்வர்க்கத்தின் அபிலாசைகளையும், கருத்துக்களை யும் பிரதிபலிக்கிறது; பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் முண்டு களான பாராளுமன்ற அரசமைப்பிலும், அதன் அரசியல் சித்தாந்தத்திலும் நம்பிக்கை கொண்டது. இந்தக் கட்சி சம்பந்தப் பட்ட மட்டில், ஒரு புரட்சிவாதியான பொதுவுடமைவாதி, எவ்வித நிலையைக் கடைப்பிடிக்க வேண்டும்? இது சம்பந்தமாக, லெனின் எமக்கு வரித்துக் காட்டும் வர்க்கப் போராட்ட வழிதான் என்ன?

மார்க்சிச சித்தாந்தம், ஒன்றைமட்டும் திடமாக வலியுறுத்து கிறது. அதாவது, ஒடுக்கு முறைக்கெதிராக ஒரு விடுதலை இயக்கம் போராடி வருமானல், அவ்வியக்கம் முதலாளித்துவ அல்லது நடுத்தரவர்க்க தலைமையில் இயங்கினலும், அதனை ஆதரிப்பது முற்போக்குவாதிகளின் கடமை.

''ஒடுக்கப்படும் ஓர் இனத்தின் பூர்சுவாக்கள் ஒடுக்குவோருக்கு எதிராகப் போராடினால், நாம் எப்பொழுதும், எந்தச் சந்தர்ப்பத்திலும் மற்றவர்களைவிட அதைப் பலமாக ஆதரிப்போம். ஏனெனில், நாம் ஒடுக்குமுறையின், தீவிரமான உறுதி கொண்ட எதிரிகள்.'' என்று லெனின் சொல்கிறான்.

பொது மக்கள் ஆதரவு பெற்ற ஒரு தேசிய விடுதலை இயக்கம் என்ற ரீதியிலும், ஒடுக்குமுறைக்கு எதிராகக் குரல் எழுப்பி வருவதாலும் கூட்டணித் தலைமைப் பீடம் பழமைவாத, நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்திருப்பினும். அதன் கட்சி அமைப்பில் முற்போக்கான, சனநாயக உள்ளடக்கம் இருக்கத்தான் செய்கிறது. ஆகவே, தமிழர் விடுதலைக் கூட்டணி ஒடுக்குமுறைக்கெதிராகத் தொடர்ந்து போராடி வருமானால், அதற்கு ஆதரவளிக்கப் பொதுவுடமைவாதிகள் கடமைப் பட்டவர்கள்.

ஆனால், இந்த ஆதரவு நிபந்தனைக்குட்பட்டது; வரையறுக்கப்பட்டது. ''ஒரு சில அம்சங்களில் மட்டும்தான், பொதுவுடமைவாதிகள் முதலாளித்துவம் அல்லது நடுத்தரவர்க்கம் தலைமை தாங்கும் விடுதலை இயக்கத்திற்கு ஆதரவளிக்கலாம். நிபந்தனையற்ற பூரண ஆதரவு அளித்தால், அது பாட்டாளிவர்க்கத்தை பூர்சுவா கொள்கைத் திட்டத்திற்கு அடிபணியச் செய்து, வர்க்கப் போராட்டத்திற்கு குந்தகம் விளைவிக்கும்'' என்பது லெனினின் வாதம்.

ஒரு தேசிய விடுதலை இயக்கம் முற்போக்கான அம்சங்களையுடையது. ஆனால், ஒடுக்கப்படும் இனத்தின் வர்க்கங்கள் ஒன்று சேர்ந்த இந்த மாபெரும் மக்கள் சக்தியை, சோசலிசப் புரட்சிப் பாதையில் இட்டுச் சென்று, தேசிய விடுதலைக்கும், வர்க்கப் போராட்டத்திற்கும் வழிவகுக்கும் புரட்சிகரமான கொள்கைத் திட்டம், பூர்சுவா அல்லது குட்டி பூர்சுவா தலைமைப் பீடத்திற்கு இருப்பதில்லை.

பூர்சுவாக்களும், குட்டிபூர்சுவாக்களும் விடுதலைப் போராட்ட சுலோகங்களை எழுப்பி, தமது வர்க்க நலன்களையும், சொந்த அபிலாசைகளையும் பூர்த்தி செய்ய விழைவதுடன், ஒடுக்கும் பெரிய தேசிய இனத்தின் முதலாளித்துவ ஆளும் வர்க்கத்துடன் ஒப்பந்தங்களைச் செய்து, விடுதலை இயக்கத்தைப் பிற்போக்கான பாதையில் தள்ளிவிடக் கூடும்.

''ஒடுக்கப்படும் இனத்தின் பூர்சுவாக்கள், தொழிலாளி வர்க்கத்தை ஏமாற்றும் நோக்கத்துடன் தேசிய விடுதலைச் சுலோகத்தை மாத்திரம் திரும்பத் திரும்ப முழங்கி வருகிறார்கள்.

இவர்கள் இந்தச் சுலோகத்தை எழுப்புவதன் காரணம், ஒடுக்கும் தேசிய இனத்தின் பூர்சுவாக்களுடன் பிற்போக்கான ஒப்பந்தங்களைச் செய்துகொள்வதற்கே" என்று லெனின் சொல்கிறுன்.

முதலாளிவர்க்கமானது, முற்போக்கான சுலோகங்களை எழுப்பி, தனது வர்க்க அபிலாசைகளைப் பூர்த்திசெய்ய விழைவது திண்ணம். ஒடுக்கப்படும் தனது இனத்தின் விடிவுக்கு விழையாது, ஒடுக்கும் பேரின ஆளும் வர்க்கத்துடன் பேரம் பேசித் தனக்குச் சாதகமான சலுகைகளைப் பெறுவதே இதன் நோக்கமாதலால், இந்தப் பூர்சுவாக் கொள்கையானது தேசிய இன விடுதலையையும், பாட்டாளிவர்க்கப் புரட்சியையும் படுகுழியில் தள்ளிவிடும் என்பது லெனினின் வாதம்.

தமிழ்த் தேசிய இனப் பாட்டாளிவர்க்கமோ, இன்றும் இழிநிலையில் இம்சைப்பட்டு வருகிறது; சிங்களத் தேசியவாத ஒடுக்குமுறை ஒருபுறமும், தன்னின முதலாளித்துவ ஒடுக்குமுறை மறுபுறமுமாக இருதுருவ முரண்பாடுகளால் சிக்குண்டு கிடக்கிறது; பூதாகரமாக வளர்ந்துவிட்ட பொருளாதார, சமூக அழுத்தங்களால் நசுக்கப்பட்டு வருகிறது. கடந்த முப்பதாண்டு காலமாக, தமிழ்ப் பூர்சுவா அரசியல் இயக்கங்கள், பேரினத் தேசியவாத ஒடுக்குமுறையைப் பிரதான பிரச்சனையாகச் சித்தரித்து வருகின்றனவே தவிர, தமிழ்பேசும் பாட்டாளிவர்க்கத்தின் சமூக பொருளாதார சுபீட்சத்திற்கு உருப்படியான நடவடிக்கைகள் எதையும் மேற்கொள்ளவில்லை.

எமது தேசிய விடுதலைப் போராட்டமானது, வர்க்கப்போராட்டத்தை ஒன்றிணைத்த புரட்சிகர அரசியல் திட்டமாக அமைய வேண்டும். ஒடுக்கப்படும் எமது தேசிய இனத்தின் அரசியல் விடுதலைக்காக மட்டுமன்றி, நசுக்கப்படும் வர்க்கங்களினதும், சாதியென்ற பெயரால் சுரண்டப்படும் எமது மக்களினதும் சுபீட்சத்திற்காகவும், நாம் போராட வேண்டும். அதாவது, எமது தேசிய விடுதலைப் போராட்டமானது, சோசலிசப் புரட்சியை இலக்காகக் கொண்ட கொள்கைத்திட்டத்தில் கட்டியெழுப்பப்பட வேண்டும். எமது மக்கள் அரசியல் ரீதியாக மட்டுமன்றி, பொருளாதார, சமூக, ஒடுக்குமுறையில் இருந்தும் விடுதலை பெறவேண்டும். ஆகவே, தமிழீழத் தேசிய விடுதலை இயக்கங்களில் பங்கேற்கும், பழமைவாத நடுத்தரவர்க்கக் கட்சிகளுக்கு நிபந்தனையற்ற பரிபூரண ஆதரவளிப்பது, தமிழ்ப்பாட்டாளி வர்க்கத்தின் விடிவிற்கும், சோசலிசப் புரட்சிக்கும் வழிகோலப் போவதில்லை.

"ஒரு குறிப்பிட்ட கோரிக்கை எந்தளவிற்கு 'சாத்தியமாகும்' என்பதில்தான், பூர்சுவாக்கள் மிகவும் அக்கறை கொண்டிருப்பார்கள். ஏனெனில், பாட்டாளிவர்க்கத்திற்குப் பாதகமான முறையில், மற்றைய தேசிய இனத்தைச் சேர்ந்த முதலாளிவர்க்கத்துடன் உடன்பாடு செய்துகொள்ளும் மாற்றமுடியாத கொள்கையை இவர்கள் கடைப்பிடித்து வருகிறுர்கள். பாட்டாளி வர்க்கத்தைப் பொறுத்தவரையில் முக்கியமானது என்னவெனில், பூர்சுவாக்களுக்கெதிராக தனது வர்க்கத்தைப் பலப்படுத்தி, உறுதியான சன நாயகத்தையும், சோசலிசத்தையும், மக்களுக்குப் புகட்டிக் கொடுப்பதுதான்" என்று லெனின் சொல்கிறுன்.

ஒடுக்கப்பட்டு வரும் தமிழ்த் தேசிய இனத்தின் தேசிய விடுதலே; தமிழ் விவசாய பாட்டாளிகளின் சமூக, பொருளாதார சுபீட்சத்திற்கு வழிகோலும் சோசலிசப் புரட்சி; இவ்விரண்டும், ஒன்ருேடொன்று இணைந்த இலக்குகளாகும். ஒரு புரட்சிகரமான அரசியல் திட்டமானது, இவ்விரு அம்சங்களையும் இணைத்த செயல் திட்டமாக அமையவேண்டும்.

தனி நாட்டுக் கோசத்தையும், விடுதலைச் சுலோகத்தையும் எழுப்பிக்கொண்டிருந்தால் மட்டும் எமது மக்கள் விடுதலை அடையப் போவதில்லை. மனிதனை மனிதன் சுரண்டும் அநீதியான, முதலாளிய அமைப்பு ஒழிக்கப்பட வேண்டும். உற்பத்தி சாதனங்கள் உழைப்பாளியின் உடைமையாக்கப்பட்ட, ஒரு உன்னத சமதர்ம சமுதாயம் உதயமாகுல்தான் எமது மக்கள் உண்மையில் விடுதலை பெறுவார்கள். ஆகவே, சோசலிசப் புரட்சியை அடிப்படையாகக் கொண்ட செயற்திட்டத்தின் மூலமே, எமது தேசிய இனத்தின் விடுதலைக்கு, அதாவது, உண்மையான அரசியல், சமூக, பொருளாதார விடுதலைக்கு வழிகாண முடியும். தமிழர் விடுதலைக் கூட்டணியோ தனிநாட்டுக் கோசத்தை மட்டும் எழுப்புகிறதே தவிர, பாட்டாளிவர்க்கத்தின் சுபீட்சத்திற்கு வழிகோலும், சோசலிசப் புரட்சிபற்றித் தீர்க்கமான கொள்கைத் திட்டம் எதையும் மக்கள்முன் வைக்கவில்லை.

தமிழீழ விடுதலை எழுச்சி முற்போக்கானது என்பதால், ஒடுக்குமுறைக்கெதிரான கிளர்ச்சி என்பதால், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப் பீடம் பழமைவாத, நடுத்தரவர்க்கத்தின் விருப்புகளைக் கொண்டதாயினும், அதற்குக் காலவரம்புக்குட்பட்ட ஆதரவளிக்கப் பொதுவுடமை விடுதலைவாதிகளான நாம் கடமைப்பட்டுள்ளோம். காலவரம்புக்குட்பட்டு ஆதரவளிக்கும் அதே வேளையில், தமிழ் பேசும் பாட்டாளிவர்க்கத்தின் ஒருமைப்

பாட்டை உறுதிப்படுத்தி, முதலாளிவர்க்கத்திற்கெதிராக அதனைப் பலப்படுத்தி, தேசிய விடுதலைப் போராட்டத்தைப் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரத் தலைமைப் பீடத்திற்குக் கொண்டு வருவதே; பொதுவுடமை விடுதலைவாதிகளான எமது வேலைத் திட்டமாகும்.

எமக்குப் பாராளுமன்ற அரசியல் இயக்கங்களில் அக்கறையில்லை. தமிழ் பேசும் இனத்தின் தேசிய விடுதலைப் போராட்டத்தை, வெற்றிப் பாதையில் கொண்டு செல்வதற்குப் பாராளுமன்றத்திற்குப் புறம்பான, பலம்வாய்ந்த ஒரு புரட்சிவாத தேசிய விடுதலை இயக்கமாக இயங்கும் எம்முடன், பொதுவுடமைவாதிகள் இணைய முன்வரவேண்டும்.

*சந்தர்ப்பவாதத்தில் சறுக்கிவிட்டார்கள்.*

தமிழ்த் தேசிய இனப் பிரச்சனையில், நாம் ஏற்கனவே பிரித்துக் காட்டிய, மூன்றுவது நிலையைக் கொண்டுள்ள, தமிழ்ப் பொதுவுடமைவாதிகளின் கொள்கையை இந்தச் சந்தர்ப்பத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்வோம். நாம் மேலே விபரித்த கருத்துக்களில் இருந்து, இந்தச் சிவப்புத் தமிழர்கள் மார்க்சிச — லெனினிசக் கொள்கைத் திட்டத்திலிருந்து நழுவி, அரசியல் சந்தர்ப்பவாதத்தில் சறுக்கிவிட்டார்கள் என்பதை வாசகர்கள் ஊகித்துக்கொள்ளலாம்.

இவர்களின் நிலைதான் என்ன? தேசிய இனப் பிரச்சனையில் இவர்களது கொள்கைத் திட்டத்தை, ஐந்து கருத்துக்களாகச் சுருக்கிவிடலாம்.

1. ஈழத் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்பதால், தம்மைத்தாமே ஆளும் உரிமையுடையவர்கள்.

2. சுயநிர்ணய உரிமை என்பது பிரிந்து சென்று தனியரசு அமைக்கும் உரிமைதான். செந்தமிழர் என்பதால் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்துகிறோம். ஆனால், தமிழர் என்பதால் பிரிவினை தேவையில்லை என்கிறோம்.

3. சமத்துவத்தின் அடிப்படையில் ஐக்கியத்தையே விரும்புகிறோம். சமத்துவம் சாத்தியமாகாத நிலையில், பிரிவினை தவிர்க்க முடியாதது. அத்தகைய சந்தர்ப்பம் எழுந்தால், நாம் பிரிவினையை ஆதரிப்போம்.

4. சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படாத நிலையில் பிரிந்து செல்ல முயற்சிப்பது, போராட்டமாக அமையும். இது இன அழிவிற்கு வழிவகுப்பதாகும்.

5. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை முற்போக்கு சக்திகளும், அரசாங்கமும் அங்கீகரிக்கப் போராட வேண்டும்.

இந்த ஐந்து கருத்துக்களையும், இனி ஆழமாக ஆராய்வோம்.

*முதலாவது:-* (1)

இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் சரித்திரரீதியாக, மொழி, கலாச்சார ரீதியாக, பூகோளரீதியாக ஒரு தேசிய இன அமைப்பை உடையவர்கள் என்பது யாவரும் அறிந்ததே. தம்மைத் தாமே ஆளும் உரிமையும் உடையவர்கள் என்பதும், அவர்களுக்குத் தெரியாதது அல்ல. உண்மையான நிலை என்னவென்ருல், தம்மைத் தாமே ஆண்டுவந்த இம்மக்கள், இன்று அடிமை வாழ்வு வாழ்கிருர்கள் என்பதுதான். ஆளும் உரிமை எமக்குண்டெனா நாம் அரசியல் பேசிக்கொண்டு, அடிமை வாழ்வில் அங்கலாய்ப்பது அசட்டுத்தனம். நாம் ஒரு தேசிய இனம் என்பதல்ல, நாம் நசுக்கப்பட்டுவரும் ஒரு தேசிய இனம் என்பதுதான் இங்கு முக்கியம். தென் இந்தியாவிலும் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமாக வாழ்கிருர்கள். அவர்களது நிலையோ வேறு. நாமோ ஒடுக்குமுறை விலங்குகளால் பிணைக்கப்பட்டிருக்கிறோம். எம்மைச் சிறைப்படுத்திச் சிதைக்க விழையும், ஒரு பெரிய தேசிய இனத்தின் தேசிய ஒடுக்குமுறையிலிருந்து, விடுதலைபெற விழைந்து கொண்டிருக்கிறோம். ஆகவே, சட்டரீதியாக, சரித்திர ரீதியாக சர்வதேச சமுதாயம் அங்கீகரிக்கும் உரிமை எமக்கு உண்டா என்பதல்ல, இந்த உரிமையை நாம் அனுபவித்து வருகிறோமா என்பதுதான் முக்கியமானது. ஆகவே, இந்தத் தோழர்களுக்கு நாம் ஒன்றை நினைவுபடுத்த வேண்டும். அதாவது, எமக்கு என்ன உரிமைகள் உண்டென்ற சித்தாந்த வாதங்களை விடுத்து, இந்த உரிமைகளைப் பெறும் உருப்படியான அரசியல் திட்டங்களை வகுத்து, செயலில் குதிப்பதன் அவசியத்தைத்தான்.

*இரண்டாவது :-* (2)

பொதுவுடமைவாதிகள் என்பதால் சுய நிர்ணய உரிமையை, அதாவது, பிரிந்து செல்லும் உரிமையை வலியுறுத்தும் இவர்கள் தமிழர் என்பதால் பிரிவினை தேவை இல்லை என்கிருர்கள். இதன் அர்த்தம்தான் என்ன? பொதுவுடைமை வாதி என்பதால் ஒரு கொள்கையும், தமிழர் என்பதால் இன்னெரு கொள்கையும் கடைப் பிடிக்கவேண்டுமென்ற இரட்டை நாக்குவாதம் இது. பொதுவுடமை வாதியானவன், தமிழனே, சிங்களவனே, வெறிறந்த இனத்தை அல்லது நாட்டைச் சேர்ந்தவனுக இருந்தாலும், ஒடுக்கப்படும் ஒரு

தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்தை ஆதரித்தே தீர வேண்டும். அந்த இனமானது, பிரிந்து செல்வதே ஒரே வழி யெனக் கங்கணம் கட்டினால், அதை ஒரு பொதுவுடமைவாதியான வன் ஆதரித்தேயாகவேண்டும். மார்க்சிசம் அதைத்தான் வலியு றுத்துகிறது. மார்க்சிசமானது மக்கள் சித்தாந்தம். மக்களின் முடிவிற்கு மார்க்சிசவாதிகள் கட்டுப்பட்டவர்கள். ஏனென்றால், மக்கள்தான் புரட்சியின் சக்தி. மக்கள்தான் சரித்திரத்தைச் சமைப்பவர்கள்.

பிரிவினை தேவையில்லை என்பதற்கு, இவர்கள் இரண்டு கார ணங்கள் கூறுகிறார்கள். ஒன்று, தமிழர்களில் பாதிப்பேர் (மலையகத் தமிழர்கள்) தென்னிலங்கையில் செறிந்து வாழ்கிறார்கள். அடுத்தது, தமிழீழப் பொருளாதாரம் பாதிக்கப்படும்.

தமிழ்த் தேசிய இனம் என்னும் பொழுது, வடக்குக் கிழக்கு மாகாணங்களைத் தமது பாரம்பரிய, மரபுரிமை மண் ணைக் கொண்டுள்ள தமிழ் பேசும் மக்களை மட்டுமல்ல, தென்னிலங்கையில் வதியும் சகல தமிழ்பேசும் மக்களை யும், குறிப்பாக, மலையகத்தில் வாழ்ந்துவரும் தமிழ்த் தோட்டப் பாட்டாளி மக்களையுமே குறிக்கிறோம். தமிழ்த் தேசிய அமைப்பில் மலையகத் தமிழரும், இசுலாமிய, கிறித் தவ, சைவ மதங்களைச் சார்ந்தவரும், மதசார்பு அற்றோரு மான தமிழ்பேசும் மக்கள் அனைவரும் அடங்குவர். தமிழீழம் என்னும் பொழுது, தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழ் மக்களின் ஒட்டுமொத்தமான தேசிய இன அமைப் பையே குறிக்கிறோம்.

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில், தமிழீழ சோச லிசப் புரட்சியில் மலையகத் தமிழ்ப் பாட்டாளி வர்க்கமும் இணைபிரி யாத அங்கமாய் அமைந்துள்ளது என்பதே எமது நிலையாகும். தமிழருக்கெதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட தேசிய ஒடுக்குமுறை யில், மிகவும் கொடூரமாக நசுக்கப்பட்டுவந்த மக்கள் இவர்களே. மொழிவாரியாக, தொழில் வாரியாக, கல்விவாரியாக பொருளாதார ரீதியாக இப்படிப் பல்வேறு வடிவங்களில் தலைவிரித்தாடிய ஒடுக்கு முறையில் படுமோசமாக நசுக்கப்பட்டது மட்டுமன்றி, குடியுரிமை யில்லாத கொடூர நிலைக்கும், இவர்கள் ஆளாக்கப்பட்டார்கள். தமிழருக்கெதிராகக் குமுறி வெடித்த இனக் கலவரங்களில், மிகவும் கொடூரமாகத் தாக்கப்பட்டு, அகதிகள் என்ற அனாதரவான நிலைக் குத் தள்ளப்பட்டவர்கள் இம்மக்களே.

மலையகத் தமிழ்ப் பாட்டாளி வர்க்கமானது, இலங்கையின் பொருளாதார உற்பத்தி இயந்திரத்தை இயக்கிவரும் மாபெரும் தொழிலாக்க சக்தியாக அமைந்திருப்பது, தமிழ்த்தேசிய இனத்திற்கு அரசியல் முக்கியத்துவத்தை அளிக்கிறது. தமிழரின் தேசிய விடுதலைக்கும், சோசலிசப் புரட்சிக்கும் இத்தொழிலாளி வர்க்கத்தின் பங்கு, அதிமுக்கியமானதாகும். சோசலிசப் புரட்சியின் மையமாக விளங்கும் இப்பாட்டாளிகளை அணிதிரட்டும் ஒரு புரட்சிகர்மான செயல் திட்டமே, சிங்கள முதலாளித்துவ அரசை முறியடிக்கும் வலுவைக் கொண்டிருக்கும். இதனை விடுத்து, அனைத்துத் தமிழரின் நலனை முன்னிட்டு எமக்குப் 'பிரிவினை தேவையில்லை' என்பது, அரசியல் சாணக்கியம் ஆகாது. முற்போக்கான, புரட்சிகர தன்மையுடைய ஒரு தேசிய இனத்தின் விடுதலையெழுச்சியை, சோசலிசப் புரட்சிப் பாதையில் இட்டுச் செல்ல வழி தெரியாதவர்களின், வரட்டுச் சித்தாந்தம் இது.

தனிநாடு அமைத்துக்கொண்டால் எமது பொருளாதாரம் பாதிக்கப்படும் என்பதும், தவறுன வாதமாகும். ஏனெனில், பொருளாதாரம் பாதிக்கப் பட்டதால்தான் தனிநாட்டுக் கோரிக்கையே எழுந்தது. தமிழ்த் தேசிய இனம் தனிநாடு கோருவதன் பிரதான காரணம், தமிழ்ப் பிரதேசப் பொருளாதாரப் புறக்கணிப்பாகும். பொருளாதார ஒடுக்குமுறையால் பிரதேச வளர்ச்சி குன்றி, வாழ்வே வளமற்றுப் போனதால்தான், மக்கள் பிரிந்து சென்று தனியரசு அமைக்க விரும்பினுர்கள். இந்த நிலையில் பிரிந்து செல்வதால், பொருளாதாரம் பாதிக்கப்படும் என்பது முரணுன வாதம். திட்டமிட்ட சோசலிசப் பொருளாதார நிர்மாணத்தில், உற்பத்தி சக்திகளை விரிவுபடுத்திச் சுபீட்சமான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பலாம் என்பதை, சோசலிச உற்பத்தி வளத்தை நன்கறிந்த பொதுவுடமைவாதி எவனும் மறுக்க மாட்டான். இதை விடுத்து, சிங்களவர்கள் எம்மிடம் சுருட்டு வாங்க மாட்டார்கள் என்பதற்காக, சுய நிர்ணய உரிமையைப் பிரயோகிக்கத் தேவையில்லை என்பது அசட்டுத்தனமான அரசியல்.

*மூன்ருவது :-*

சமத்துவத்தின் அடிப்படையில் தேசிய ஐக்கியத்தை நிலை நாட்டுவதுதான், தமது பிரதான குறிக்கோள் என்கிருர்கள் இவர்கள். பிற்போக்குவாதத்தின் தந்தையாகிய ஜே. ஆரும், இந்தச் சமத்துவ தத்துவத்தையே போதித்து வருகிருர். ஆனல், தமிழ் பேசும் இனத்தைப் பொறுத்தவரை, சமத்துவம் எந்தஅளவிற்குத் தலைகீழாகத் தொங்குகிறது என்பதை நாம் நன்கு அறிவோம். "சமத்துவம் சாத்தியமாகாதநிலையில், பிரிவினைதவிர்க்க முடியாதது.

அத்தகைய சந்தர்ப்பம் எழுந்தால், நாம் பிரிவினையை ஆதரிப்போம்'' என்பதும் இவர்களது வாதம்.

சமத்துவம் சாத்தியமாகாத நிலையில், பிரிந்து செல்வது தவிர்க்க முடியாதது என்ற நெருக்கடியான சூழ்நிலை எழுந்ததால் தான், தமிழ்த் தேசிய இனம் பிரிந்து சென்று தனியரசை அமைக்க விரும்பியது என்பதை, எவரும் மறுக்க மாட்டார்கள். முப்பதாண்டு காலமாக, பெரிய தேசிய இனத்தின் அதிதீவிர தேசிய வாதத்தால், இனவாதத்தால், மதவாதத்தால், இன அழிப்புக் கொள்கையால் படிப்படியாக நசுக்கப்பட்டு வந்த தமிழ்த் தேசிய இனம், ஒடுக்குமுறை உச்ச கட்டத்தை அடைந்ததும் இனிமேல் சமத்துவமாய் வாழ்வது சாத்தியமாகாது, ஒன்றுபட்ட வாழ்க்கை இனிமேல் ஒத்துவராது என்பதையுணர்ந்து, கடந்த தேர்தலின் போது ஒடுக்கிவந்த பெரிய தேசிய இனத்திடமிருந்து அரசியல் விவாகரத்துக் கோரியது. மார்க்சிச சித்தாந்தத்தின்படி தமிழ்மக்களின் இம்முடிவு சரியானதே.

ஒரு தேசிய இனமானது, எந்தவிதமான சூழ்நிலையில் பிரிந்து சென்று தனியரசை அமைக்க விழையும் என்பதுபற்றி, லெனின் பின்கண்டவாறு சொல்கிறுன்.

"ஒரு பெரிய நாட்டினதும், பெரிதான சந்தையினதும் அனுகூலங்கள் பற்றியும், பூகோள, பொருளாதாரத் தொடர்புகளின் நன்மைகள் பற்றியும் தமது நாளாந்த அனுபவத்திலிருந்து பொது மக்கள் அறிவார்கள். ஆனல், தேசிய ஒடுக்குமுறையும், தேசிய விரோதங்களும் கூட்டுறவான வாழ்க்கையை முற்ருகச் சகிக்க முடியாததாக்கி பொருளாதார உறவுகள் எதற்குமே, அன்றி முழுவதற்குமே குந்தகம் விளைவிக்குமாயின் மக்கள் பிரிந்து சென்று தனியரசு அமைக்க விழைவார்கள்.''

"இப்படியான சூழ்நிலையெழும்போது, ஒரு தேசிய இனத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும், வர்க்க விடுதலைக்கும் பிரிந்து செல்வதே உத்தமமான வழி" என்கிருன் லெனின்.

இப்படியான சூழ்நிலை, இலங்கைத் தமிழ் மக்களுக்கும் எழத்தான் செய்தது. இனவாதம் பூதாகரமாய் வளர்ந்து, கூட்டுறவான வாழ்க்கை சகிக்க முடியாத கட்டத்தை அடைந்தது. பொருளாதார ரீதியாக, தமிழீழம் திருகப்பட்டது. மொழிப் புறக்கணிப்பில் தொடங்கி, பின் கல்விப் புறக்கணிப்பாய், கலாச்சாரப் புறக்கணிப்பாய், தொழில் புறக்கணிப்பாய், பொருளாதாரப் புறக்கணிப்பாய் விசுவரூபம் பெற்ற தேசிய இனவாதப் பூதமானது, தமிழ்

மக்களின் பாரம்பரிய நிலங்களை விழுங்கிவந்தது மட்டுமன்றி, அவர்களை இனவாரியாக ஒழித்துக் கட்டவும் விழைந்தது.

சமத்துவம் இழந்த, தன்மானமிழந்த, சகிப்புத்தன்மையிழந்த சந்தர்ப்பம் தோன்றியபோதுதான், தனிநாட்டுக் கோரிக்கை பிறந்தது. தமிழ்த்தேசிய இனத்தின் சரித்திர, சமூக, பொருளாதார சூழ்நிலையை நன்கு புரிந்து கொண்டால், மார்க்சிச—லெனினிச வேலைத் திட்டத்தின்படி தமிழ் மக்களின் தனிநாட்டுக் கோரிக்கை சரியானதென்பதை, எந்த மார்க்சிச வாதியும் மறுக்க மாட்டான். ஆனால், சிவப்புச் சித்தாந்தத்தில் சிறிதும் பரீட்சயமற்ற செந்தமிழர்கள், 'சமத்துவம் தோன்ருத சந்தர்ப்பம் எழுந்தால் தான் பிரிந்து செல்வதை ஆதரிப்போம்' என்று சொல்கிருர்கள். இவர்களைப் பொறுத்தவரை, இன்னும் அந்தச் சந்தர்ப்பம் எழவில்லைப் போலும்.

இந்தக் குருட்டுத்தனமான அரசியல் பார்வையில், ஒடுக்குமுறையின் கொடூரமும், அந்த ஒடுக்குமுறைக்கெதிரான ஒரு தேசிய இனத்தின் விடுதலையெழுச்சியும், அதன் புரட்சிகரமான தன்மையும் நிதர்சனமாக அணுகப் படவில்லை. ஒடுக்குமுறை உண்டென்பதை ஒத்துக் கொள்ளும் இவர்கள், ஒடுக்குமுறையின் அழுத்தம் இன்னும் போதாது; பொறுத்திருந்து இன்னும் நசுக்கப் படுவோம் என்கிருர்கள் போலும். தமிழினம் இனவாரியாக ஒழிந்த பின்னர், பிரிந்து செல்வதை ஆதரித்து என்ன பயன்? அப்போது பிரிவதற்கு ஒன்றும் இராது. குட்டக் குட்டப் பொறுக்கும் மட்டி வாதம் இது. மார்க்சிசமானது, ஒடுக்கப்படும் மக்களின் விடுதலையை வேண்டும் ஒரு புரட்சிகரமான சித்தாந்தம். இந்தப் புரட்சிகரப் பாதையைத் தழுவும் பொதுவுடமைவாதியெவனும் அடிமைவாதச் சித்தாந்தம் பேசினுல், அவன் உண்மையில் ஒரு மார்க்சிசவாதியல்ல. அவன் ஒரு பிற்போக்குவாத சந்தர்ப்பவாதியாவான்.

*நான்காவது :* (A)

சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப் படாதநிலையில், பிரிந்து செல்ல முயற்சிப்பது போராட்டமாக அமையும். இது, இன அழிவிற்கு வழிவகுக்கும். ஆகவே, பிரிவினை தேவையில்லை இப்படியும் தமிழ் மக்களைப் பூச்சாண்டி காட்டி, பிரிந்து செல்லும் போராட்டத்தைக் கைவிடுமாறு கேட்கிறது செந்தமிழர் இயக்கம். ஒரு சிறிய தேசிய இனம் ஒடுக்கும் தேசிய இனத்திலிருந்து, பிரிந்து செல்ல விழைவது போராட்டமாக அமையும் என்பது யாவரும் அறிந்ததே. புரட்சி செய்யாமல், போராடாமல் எந்த

இனமோ, வர்க்கமோ ஒடுக்கு முறையிலிருந்து விடுதலை பெறப் போவதில்லை. இன, வர்க்கமுரண்பாடுகள் புரட்சியாக, போராட்டமாக வெடித்துச் சமுதாயமாற்றத்திற்கும், விடிவிற்கும் வழிவகுக்கும் என்பது வரலாற்று ரீதியாக நாம்காணும் உண்மை.

ஒடுக்கப்படும் ஒரு தேசிய இனம், ஒடுக்குமுறைக்கெதிராகப் போராடத்தவறினல் அது நிச்சம் இன அழிவிற்கு வழிவகுக்கும். எத்தனையோ தேசிய இனங்கள், அப்படி இனவாரியாக அழிக்கப்பட்டிருக்கின்றன என்பதனை உலக வரலாறு படித்தவர்கள் அறிவார்கள். அதே வேளை, ஒடுக்கு முறையை உடைத்தெறிந்த, உறுதியான மக்களும் இருக்கத்தான் செய்கிருர்கள். காலனித்துவத்திற்கெதிராக, ஏகாதிபத்தியத்திற்கெதிராக, கொடுங்கோலாட்சிக்கெதிராக, தேசிய ஒடுக்குமுறைக்கெதிராக விடுதலை வேண்டிப் போராடி, வீரவரலாறு படைத்த தேசிய இனங்களும் இருக்கத்தான் செய்கின்றன. மாபெரும் வல்லரசையே நடுங்கச் செய்த, வியட்நாமிய விடுதலைப் போராட்டம், எமக்கு ஒரு உண்மையைப் பகருகிறது. அதாவது, உறுதிபூண்ட, உணர்வு பூண்ட மக்களை, அம்மக்களின் விடுதலைமுயற்சியை எந்தவொரு சக்தியாலும் நசுக்கிவிடமுடியாது என்பதைத்தான்.

நாமோ, நசுக்கப்பட்டுவரும் ஒரு தேசிய இனம். உரிமையிழந்த அடிமை வாழ்வில், கால் நூற்றுண்டு காலத்திற்கு மேல் கழித்துவிட்டோம். சிங்கள தேசிய வாதத்திற்குச் சிறைப்பட்டு, பாதுகாப்புப் படையினரின் பயங்கரவாதத்தின் மத்தியில், நாம் ஏன் இன்னும் தலைகுனிந்து வாழவேண்டும்? நாம் பிறந்த மண், எமது மூதாதையர் பிறந்த மண், பண்டைக் காலம் தொட்டுப் பரம்பரை பரம்பரையாக நாம் வாழ்ந்துவரும் மண், எமக்குச் சொந்தமான மண் எம்மிடமிருந்து பறிக்கப்படுவதை நாம் ஏன் பார்த்துக் கொண்டு இருக்க வேண்டும்? பழமையும், பெருமையும் வாய்ந்த மொழியொன்று எமக்குண்டு. மேம்பாடு மிக்க கலாச்சாரமும், மேன்மைவாய்ந்த பண்பாடும் எமக்குண்டு.

நாம், கல்வியில் கரை கண்ட மக்கள்; கலைகளில் கைதேர்ந்தவர்கள்; கடும் உழைப்பில், களிப்பைக் காண்பவர்கள். இப்படியான, ஒரு உன்னத தேசிய இனமாய், உருப்படியான வரலாற்று வாழ்வையுடைய நாம், இன்னுமொரு தேசிய இனத்திற்கு ஏன் அடிமைப்பட்டு வாழவேண்டும்? எமது அடிப்படையுரிமைகளை, எமது ஆளும் உரிமையை நாமாக நிச்சயித்துக் கொள்ளப் போராட்டம் அவசியப்படுமாஞல், நாம் பின் நிற்கக்கூடாது. ஆயுதப் படைகளை எதிர்க்கும் போராட்டமென்றுலும், நாம்

அஞ்சக்கூடாது. ஆயுதங்களை ஏந்திப் போராடுவது அவசியமாயின், அதற்கு நாமே நம்மை ஆயத்தப்படுத்த வேண்டும். போருக்குப் பயப்படும் போலிப் புரட்சிவாதிகள், ஆயுதப் போராட்டத்திற்குப் பயப்படும் அகிம்சை வாதிகள், சமத்துவம் பேசும் சந்தர்ப்பவாதிகள் ஆகியோரின் தலைமையின் கீழ், தமிழினம் ஒரு போதும் தேசிய விடுதலைப் போராட்டத்தில் வெற்றி காணப் போவதில்லை.

*ஐந்தாவது:* (௫)

'தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையை, அரசாங்கமும், முற்போக்கு சக்திகளும் அங்கீகரிக்கப் போராட வேண்டும்'. இது தான் தேசிய இனப் பிரச்சனைக்கு, செந்தமிழர் இயக்கம் கூறும் தீர்வு. சிங்கள ஆளும் வர்க்கமானது, அதிதீவிர தேசிய வாதத்திலும், இனவாதத்திலும் தோய்ந்து கிடக்கிறது. மாறி மாறி ஆட்சிப் பீடத்தில் அமர்ந்துவரும், பிற்போக்குவாத பூர்சுவா அரசியல் இயக்கங்களான ஐக்கிய தேசியக் கட்சியும், சுதந்திரக் கட்சியும் தமிழ்த் தேசிய இனத்தின் சுய நிர்ணய உரிமையை, அதாவது, பிரிந்து சென்று தனியரசு அமைக்கும் உரிமையை, அங்கீகரிக்கப் போவதில்லை. முற்போக்கான சோசலிசக் கோட்பாட்டை, பிற்போக்கான முதலாளித்துவம் ஒரு பொழுதும் ஏற்றுக் கொள்ளாது. அப்படி எதிர்பார்ப்பது, கல்லில் நார் உரிக்க முயன்ற கதையாக முடியும்.

முற்போக்குவாத இயக்கங்கள் சில, தமிழ்த் தேசிய இனத்தின் சுய நிர்ணய உரிமையை ஆதரிக்கத்தான் செய்கின்றன. ஆனால், சுய நிர்ணய உரிமைக்கு இவர்கள் அளிக்கும் திரிபுவாத வியாக்கியானங்கள் பற்றி, நாம் ஏற்கனவே சுட்டிக் காட்டினோம்.

சிங்கள இடதுசாரி இயக்கங்களைப் பொறுத்தவரை, தேசிய சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டில், தெளிவான நிலையைக் கொண்டிருக்கும் ஒரேயொரு இயக்கம், **புரட்சிக் கம்யூனிசக் கழகமாகும்.** மற்றைய சிங்கள இடதுசாரிகள், தெளிவற்ற நிலையில் நின்று கொண்டு சுயநிர்ணய உரிமையை ஆதரிப்பதால் மட்டும், தமிழினத்திற்கு விடிவு பிறந்து விடாது. தமிழ் முற்போக்கு இயக்கங்களே குழம்பி நிற்கும் பொழுது, பெரிய தேசிய இனத்தைச் சேர்ந்த சோசலிசவாதிகளிடம், நேர்மையான நிலையை எதிர்பார்ப்பது எப்படி?

ஒரு தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையென்பது, மற்ற வர்கள் அங்கீகரிப்பதற்காக மட்டும் ஆக்கப்படவில்லை. தேவை

ஏற்படும் பொழுது பிரயோகிப்பதற்காகவே அவ்வுரிமையுள்ளது. விவகாரத்துரிமை இருப்பதால், பிரிந்து செல்ல வேண்டிய அவசியம் இல்லேத்தான். ஆனல், அவ்வுரிமை ஆக்கப்பட்டதன் காரணம், தேவை ஏற்படும் பொழுது, தவிர்க்க முடியாத அவசியம் ஏற்படும் பொழுது, விவாகரத்துச் செய்து கொள்வதற்காகவே. அப்படியான தேவை எழுந்த பொழுது அதனைப் பாவிக்க மறுப்பது முட்டாள்தனம். இந்த முட்டாள்தனமான அரசியலேயே, செந்தமிழர் இயக்கம் முற்போக்குவாதம் என்ற போர்வையில், போதித்து வருகிறது. மார்க்சிச சித்தாந்தத்தை மழுப்பிப் பேசுபவர்களிடம் மக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும். இவர்கள், முற்போக்குப் பாதையில் இருந்து நழுவி, பிற்போக்குக் கிடங்குக்குள் விழுந்துவிட்ட 'மார்க்சிச வாதிகள்'.

*தனித்தமிழீழம் சாத்தியமாகுமா?*

சுயநிர்ணய உரிமைபற்றி, நாம் முன்பு சுட்டிக்காட்டிய நான்காவது நிலேயைக் கொண்டுள்ள, பொதுவுடமைவாதிகளின் வியாக்கியானத்தை எடுத்துக் கொள்வோம். 'சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி, ஒடுக்கப்படும் தமிழினம் தனிநாடு கோருவது நியாயமானதே. மார்க்சிச சித்தாந்தத்தின்படி இக் கோரிக்கை சரியானதே. ஆனல், இந்தக் கோரிக்கை சாத்தியமடையப் போவதில்லே. சாத்தியமாகாத கோரிக்கைக்குப் போராடி கண்ட பயன் என்ன? ஆகவே, பிரிந்து செல்வதை நாம் ஆதரிக்கவில்லே' என்று இவர்கள் சொல்கிருர்கள்.

தமிழீழம் ஏன் அடைய முடியாது, ஏன் அது சாத்தியமாகாது என்று கேட்டால், 'சிங்கள ஆளும் வர்க்கம் அதற்கிடமளிக்கப் போவதில்லே. சிங்கள ஆயுதப் படைகளே எதிர்கொண்டு போராடும் வல்லமையும் தமிழ் மக்களிடம் இல்லே' என்பது இவர்களின் பதில். அப்படியானல், தமிழினத்தின் விடிவிற்கு இவர்கள் சொல்லும் வழி என்ன?

'இன ஒடுக்கு முறையானது, நாட்டின் பல்வேறு பிரச்சனேகளில் ஒன்று. ஒடுக்குமுறைக்காகப் பிரிவினே கேட்பது, குறுகிய தேசிய வாதம். ஆகவே, தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டு, பாட்டாளிவர்க்க ஒருமைப்பாட்டிற்குப் பாடுபடுவோம். அனேத்து இலங்கைச் சோசலிசப் புரட்சிதான், அனேவரினதும் பிரச்சனேகளேத் தீர்க்கும்' என்பதுதான் இவர்கள் கூறும் பாதை.

சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், தமிழ்த் தேசிய இனம் பிரிந்து சென்று தனியரசு அமைப்பதற்கு, சிங்கள ஆளும்

வர்க்கம் இடமளிக்கப் போவதில்லை என்பது உண்மைதான். அப்படி நாம் முயற்சித்தால், ஆளும்வர்க்கமானது சிங்கள ஆயுதப் படைகளைக் கட்டவிழ்த்துவிட்டு, தேசிய விடுதலைப் போராட்டத்தை முறியடிக்க விழையலாம் என்பதும் உண்மை தான். ஆனால், ஆயுதப்படைகளை எதிர்கொண்டு போராடும் வல்லமை தமிழ் மக்களிடம் இல்லையென்பதும், தமிழினம் விடுதலை காண்பது சாத்தியமாகாது என்பதும் இந்தப் போலி மார்க்சிச வாதிகளின் குருட்டுத்தனமான கண்ணோட்டமாகும். ஆயுதப் படைகளுக்கு அஞ்சி, அநீதிக்கும் அதர்மத்திற்குமெதிரான ஒரு நியாயமான கோரிக்கையைக் கைவிடக் கோருவது, மார்க்சிசமா காது. முற்போக்கான ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தை, புரட்சிப் பாதையில் இட்டுச் செல்ல வழி தெரியாதவர்களின் அடிமைவாதம் இது. இந்த அடிமை வாத சித்தாந்தம் பேசுபவர் கள், தம்மைச் சாதாரண பொதுவுடமைவாதிகள் என்று சொல் லாமல், 'புரட்சிவாத' மார்க்சிசவாதிகள் என்று அழைத்துக் கொள்கிறார்கள். இவர்களது மார்க்சிசத்தில், புரட்சிவாதம் எள்ளளவும் இல்லை.

தமிழீழ மக்களின் பிரச்சனை, ஒரு தேசிய இனப்பிரச்சனை. இருதேசிய இனங்களுக்கு மத்தியில் எழுந்த முரண்பாட்டால், உருப்பெற்ற பிரச்சனை. ஒரு சிறிய தேசிய இனத்தை, ஒரு பெரிய தேசிய இனம் நசுக்க விழைந்ததால், எழுந்த பிரச்சனை. பெரிய தேசிய இனத்தின் அதிதீவிர தேசியவாதத்தால், விளைந்த பிரச்சனை. மார்க்சிசக் கண்ணோட்டத்தின்படி தமிழரின் பிரச்சனையை, முதலில் ஒரு தேசிய இனப் பிரச்சனையாகவே நாம் அணுகவேண்டும். அடுத்ததாக, இந்தப் பிரச்சனைக்கு அத் தேசிய இனம் எவ்வித தீர்வை விரும்புகிறது, என்பதை நாம் பார்க்கவேண்டும். பிரிந்து சென்று தனியரசு அமைப்பதையே அம்மக்கள் விரும்பினால், அந்தத்தீர்வை ஆதரிக்க நாம் தயங்கக் கூடாது. ஒரு தேசிய இனத்தின் ஒன்றுபட்ட விடுதலை எழுச்சி யையும், வர்க்கங்களின் ஒன்றுபட்ட கிளர்ச்சியையும், அதன் புரட்சிகரமான தன்மையையும் நாம் கௌரவிக்க வேண்டும். அதனைக் கட்டி வளர்க்கவும் வேண்டும். ஏனெனில், ஒரு தேசிய இனத்தின் விடுதலையெழுச்சியானது, சமுதாயப் புரட்சிக்கும், சோசலிச நிர்மாணத்திற்கும் இன்றியமையாதது.

காந்தீயத்திலும், சத்தியாக்கிரகத்திலும் எமது மக்கள் நம்பிக் கை இழந்துவிட்டனர். இந்த அகிம்சைப் போராட்ட யுக்திகளைக் கையாண்டால், தமிழீழ விடுதலை ஒருபொழுதும் சாத்தியமாகாது. ஏனெனில், புத்ததர்மத்தில் ஒழுகுவதாகக் கூறிக்கொள்ளும்

சிங்கள ஆளும் வர்க்கமானது அகிம்சையிலோ, அறவழிப் போராட்டத்திலோ நம்பிக்கை கொண்டதல்ல. அது ஆயுதபலத்தைக் கொண்டு ஆட்சி புரிகிறது; ஆயுத படைகளைக் கொண்டு, எமது அகிம்சைப் போராட்டங்களை நசுக்கி விடும்.

பலாத்காரத்தையோ, பயங்கரவாதத்தையோ தமிழ் மக்கள் விரும்பவில்லை. ஆனுல், பலாத்காரம் எம்மீது பிரயோகிக்கப்படும் பொழுது, ஆயுதப் பிரயோகத்தால் நாம் அடிமையாக்கப்படும் பொழுது அந்தப் பலாத்காரத்தைப் பலாத்காரத்தின் மூலம்தான் முறியடிக்க வேண்டிய, தவிர்க்கமுடியாத நிலைக்கு நாம் தள்ளப் படுவோமாஞல், நாம் பலாத்காரத்தைப் பிரயோகிப்பது நியாய மானது, தர்மமானது. அநீதிக்கும், அதர்மத்திற்குமெதிராக, அடிமை வாழ்விற்கெதிராக, பலாத்காரத்திற்கெதிராக புரியும் பலாத்காரமானது உண்மையில் பலாத்காரமல்ல. அது விடுதலை வேட்கையின் விளைவு; புரட்சியின் குமுறல்; மனித சுதந்திர எழுச்சி. இந்த ரீதியில் ஒடுக்கும் இனத்தின் பலாத்காரத்திற்கும், ஒடுக்கப்படும் இனத்தின் பலாத்காரத்திற்கும் மத்தியில், ஒரு தார்மீக வேறுபாடு இருக்கிறது. ஒடுக்கப்படுவோர், அந்த பலாத்கார ஒடுக்குமுறைக்கெதிராகப் போராடுவது, பலாத்காரமான போராட்டமாயினும், மனித விடுதலை எழுச்சியைக் குறித்து நிற்ப தால் அது தர்மமானது. அநீதிக்கும், அதர்மத்திற்குமெதிராகப் புரட்சிசெய்வது அதர்மம் ஆகாது. அது புனிதமான செயல்.

ஆளும் வர்க்கத்தின் ஆயுதபலாத்காரத்தை, அகிம்சையால் முறியடிக்க முடியாது; ஆயுதம் தாங்கிய புரட்சிப் போராட்டத் தால்தான் முடியும். அமைதிவழிப் போராட்டத்தில் நம்பிக்கை கொண்டுள்ளதால், கூட்டணித் தலைமைப் பீடம் இப்படியான புரட்சிப் பாதைக்கு மக்களைத் தயார் செய்யவில்லை. இந்த நிலையை நன்குணர்ந்த 'புரட்சி வாத' மார்க்சிசவாதிகள், தமிழினத்தின் தனிநாட்டுக் கோரிக்கையை ஏளனம் செய்து, அது சாத்தியமாகாதது என்கிருர்கள். தமிழீழ தனிநாட்டுக் கோரிக்கையை அடைவது, அவ்வளவு சுலபமானதல்ல என்பது, எமக்குத் தெரியாததல்ல. இராணுவப் போர் நுணுக்கங்கள் அடங்கிய பிரமாண்டமான செயல் திட்டத்தை வகுத்து, மிகவும் சாணக்கியமான முறையில் அதனை அமுல் நடத்துவதால்தான், தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை வெற்றிப் பாதையில் கொண்டு செல்லலாம். இதில் பலவிதமான இடையூறு கள் இருக்கலாம். ஆனுல், அது சாத்தியமாகாது என்று சொல்ல முடியாது.

நான்கு ஆண்டு காலத்திற்கு முன்னர்தான், தமிழ் மக்களின் பிரச்சனை ஒரு தேசிய இனப் பிரச்சனையாக உருவெடுத்தது என்பதை, நாம் மறந்துவிடக்கூடாது. 1977இல், தலை விரித்தாடிய இனக் கலவரத்தின் பயங்கரமும், தமிழ் மக்களுக்குத் தனியரசின் கீழ் தனித்து வாழும் அவசியத்தை நன்கு உணர்த்தியிருக்கிறது.

கடந்த கால் நூற்றாண்டு காலமாக, நாம் நடத்தி வந்த போராட்டயுக்திகள் இனிப்பயன் அளிக்கப் போவதில்லை. இனி நாம் மேற்கொள்ளவிருப்பது, ஒரு தேசிய விடுதலைப் போராட்டம். புரட்சிகரமான வன்முறைப் போராட்ட யுக்திகளை, நாம் கையாள வேண்டும்; சரியான முறையில் திட்டமிட்டு நடத்த வேண்டும்.

பாட்டாளிவர்க்க ஒருமைப்பாடு, அனைத்து இலங்கைச் சோசலிசம் என்பதெல்லாம், தமிழ் பேசும் மக்களுக்குப் புளித்துப் போன சித்தாந்தம். பேரின ஒடுக்குமுறையில் சிக்குப்பட்டிருக்கும் ஒரு தேசிய இனம், முதலில் அந்த ஒடுக்குமுறையை உடைத்தெறிந்து, தனது சுதந்திரத்தை நிலைநாட்டப் போராட வேண்டும். அந்தச் சுதந்திரப் போராட்டம் குறுகிய தேசியவாதமாகாது.

முற்போக்கான தேசாபிமானம் வேறு. குறுகிய தேசிய வாதம் வேறு. முற்போக்கான தேசாபிமானம் சோசலிசத்திற்கு முரணானது அல்ல. ஒரு தேசிய இனம் தனது பழமையும், பெருமையும் வாய்ந்த வரலாற்றில் தனது மொழி, கலாச்சாரத்தில், தனது பண்பாட்டில், தனது பாரம்பரிய பூமியில் பற்றும் பாசமும் கொண்டிருப்பதை நாம் தேசாபிமான உணர்வு என்கிறோம். இவ்வித முற்போக்கான தேசாபிமானத்தை, தேசியப் பற்றுணர்வை உதறிவிட்டு சர்வதேசியம் பேசுபவன், உண்மையில் ஒரு சோசலிச வாதியல்ல. இப்படியான சித்தாந்தவாதிகளை பூர்சுவா சர்வதேசியவாதிகள் என்று, கார்ல் மார்க்சே கிண்டல் செய்திருக்கிறான். (முதலாவது அகிலப் பொதுச் சபைக் கூட்டத்தில் லாபர்க்கைக் கண்டித்து மார்க்சு ஆற்றிய உரையை நோக்குக.)

தேசாபிமான உணர்வு முற்போக்கானது. ஒரு இனத்தின், ஒரு தேசத்தின் கலாச்சார, சமூக சூழ்நிலையானது வர்க்கப் போராட்டத்திற்கு முக்கியமானது.

''பாட்டாளி வர்க்கமானது, தனது வர்க்கப் போராட்டத்தின் அரசியல், சமூக, கலாச்சார சூழ்நிலைகளை அலட்சியம் செய்ய முடி

யாது. இதன் காரணமாக, தனது தேசத்தின் தலைவிதியையும் அது அலட்சியம் செய்ய முடியாது." என்கிறான் லெனின்.

தேசாபிமான உணர்விலிருந்துதான், சர்வதேசிய உணர்வு பிறக்கிறது. தனது இனத்தில், தனது மக்கள் மீது பற்றில்லாதவன் மற்றைய சமுதாயம் மீதோ அல்லது மனித சமுதாயம் மீதோ பற்றுக் காட்டுவது போலப் பாசாங்கு செய்து சர்வதேசியம் பேசினால், அவன் உண்மையில் ஒரு சோசலிசவாதியல்ல. அவன் தேசாபிமானமற்ற சந்தர்ப்பவாதி. ஆகவே, தமிழ்த் தேசிய இனத்தின் தேசாபிமான உணர்வைக் குறுகிய தேசிய வாதம் எனத் திரித்துக் காட்டி, சர்வதேசிய சித்தாந்தம் பேசும் மார்க்சிசவாதிகள் மீது தமிழ் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

முடிவுரை

சுயநிர்ணய உரிமை பற்றியும், இக்கோட்பாடு பற்றி மார்க்சிசவாதிகளிடையே நிலவுந் தெளிவற்ற வியாக்கியானங்கள் பற்றியும் விரிவாகப் பார்த்தோம். சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டிற்குப் பூடகமான வரைவிலக்கணம் வரையாமல், அதனைத் திரித்துக் காட்டாமல், ஒரு தேசிய இனத்தின் நிதர்சனமான சமூக, பொருளாதார, அரசியல் சூழ்நிலை, வரலாற்றுப் பின்னணி ஆகிய நிலைகளை ஆராய்ந்து, இக் கோட்பாட்டிற்கு மார்க்சிச—லெனினிச கொள்கைத் திட்டத்தின் அடிப்படையில், தெளிவான விளக்கம் அளிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாக இருந்தது. இந்த ரீதியில் தமிழ்த் தேசிய இனம் தனது சுயநிர்ணய உரிமையைவலியுறுத்தி; தனியரசை அமைக்க விழையும் கோரிக்கை நியாயமானது என்பதனைச் சுட்டிக்காட்டினோம். ஆகவே, தனிநாட்டுக் கோரிக்கையை அங்கீகரித்து தமிழ் பேசும் இனத்தின், தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவளிப்பது மார்க்சிசவாதிகளின் கடன். ஒடுக்கப்பட்டு வரும் ஒரு தேசிய இனத்தின் விடுதலை எழுச்சியை எக் காரணங்களையாவது காட்டி ஆதரிக்க மறுக்கும் மார்க்சிசவாதிகள் மீதும், மார்க்சிய இயக்கங்கள் மீதும் தமிழ்பேசும் மக்கள் குறிப்பாகத் தமிழ் இளைஞர் சமுதாயம் விழிப்பாக இருக்க வேண்டும்.

இந்தக் கட்டுரையில், பிரதானமாக லெனினின் கொள்கைத் திட்டத்தையே மேற்கோளாக எடுத்து, சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டிற்கு விளக்கம் அளிக்கப்பட்டிருப்பதை வாசகர்கள் அவதானிக்கலாம். இதற்குக் காரணம் இல்லாமலில்லை. முதலாவதாக, லெனினின் சித்தாந்த விளக்கப்படைப்புக்களே, தேசிய இனப் பிரச்சனைக்குத் தெளிவான வரைவிலக்கணம் அளித்து,

சனநாயக சோசலிச நியதிகளுக்கு அமைய, நிலைமையை யதார்த்த மாக சமூக, பொருளாதார, அரசியல் அம்சங்களில் அணுகுகின்றன. மார்க்சிசத்தின் மூலகர்த்தாக்களான மார்க்சினதும், எங்கல்சின தும் எழுத்துக்களில் தேசிய இனப் பிரச்சனையோ, சுயநிர்ணய உரிமைக் கோட்பாடோ செம்மையாக ஆராயப்படவில்லை. அது மட்டுமின்றி ரோசாலக்சம்பர்க், கோட்ஸ்கி, ஸ்டாலின், ரொட்ஸ்கி போன்ற மார்க்சிச சிந்தாந்தவாதிகளும், தேசிய இனப் பிரச் சனைக்கு தெளிவற்ற பூடகமான வியாக்கியானங்களையே அளித் திருக்கிறார்கள். இரண்டாவதாக, சித்தாந்தரீதியிலும், செயல் திட்டத்திலும் லெனினையே சகல மார்க்சிசவாதிகளும், சோசலிச இயக்கங்களும் தமது அரசியல் குருவாகக்கொள்கின்றன. ஆகவே தான் புரட்சிவாத அரசியலின் மாமேதையான லெனினின் எழுத் துக்களை உசாத்துணையாகக் கொண்டு, தமிழ்த் தேசிய இனப் பிரச்சனையில் சில மார்க்சிசவாதிகள் கொண்டுள்ள சந்தர்ப்ப வாதப் போக்கை அம்பலப்படுத்தியுள்ளோம்.

நேரம் ——

[illegible] —— [illegible]

## இரண்டாவது அத்தியாயம்

# சிங்கள இளைஞரின் ஆயுதக் கிளர்ச்சி.

1971ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம், இலங்கையில்ஒரு பிரமாண்டமான ஆயுதக் கிளர்ச்சி வெடித்தது. ஆயுதம் தரித்த ஆயிரமாயிரம் சிங்கள இளைஞர்கள் ஆட்சியாளருக்கு எதிராகக் கிளர்ச்சியில் குதித்தனர். தென்னிலங்கையில் பெரும்பகுதி கிளர்ச்சிக்கார இளைஞர்கள் வசம் வீழ்ந்தது. பதட்டமும், பயமும் கொண்ட பண்டா அம்மையார் உலக நாடுகளின் உதவிக்கு மண்டியிட்டார். மேற்கத்தைய முதலாளித்துவ வல்லரசுகளும்,சோசலிச நாடுகளும் ஆயுதங்களைக் கொட்டிக் குவித்தன. அயல்நாடான இந்தியாஒரு பட்டாளத்தை அனுப்பி வைத்தது. சிங்கள முதலாளித்துவ இராணுவ இயந்திரம் புத்துயிர்பெற்று, கிளர்ச்சிக்கார இளைஞர்களை நசுக்கக் கிளம்பியது. ஒரு சில வாரங்களில் கிளர்ச்சி முற்றாக முறியடிக்கப்பட்டது. பத்தாயிரம் இளைஞர்கள் வரை மிருகத்தனமாகக் கொல்லப்பட்டனர். பதினையாயிரம் பேர்வரை சிறையில் தள்ளப்பட்டனர்.

√இந்த ஆயுதக் கிளர்ச்சியின் அரசியல், சமூக, பொருளாதாரப் பின்னணி என்ன? இது யாரால், எப்படி உருவாக்கப்பட்டது? இதன் நோக்கந்தான் என்ன? இந்த இளைஞர்கிளர்ச்சி படுதோல்வியடைந்ததன் காரணங்கள் யாவை? இந்த வினாக்களுக்கு விரிவான, தெளிவான விடைகளை ஆராய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

தமிழீழத்தைத் தனிநாடாக அமைக்கும் ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தை எதிர் கொண்டுள்ள நாம், ஆயுதம் தரித்த புரட்சியில் குதிப்பது தவிர்க்க முடியாதது. ஆகவே, எமது அயல் நாட்டில் வெடித்த ஒரு ஆயுதக் கிளர்ச்சியின் அம்சங்கள் அனைத்தையும் நாம் அறிந்திருப்பது அவசியம். தோல்வியின் காரணங்களைத் தெரிந்து கொள்வதில்தான் வெற்றியின் பாதையைக் கண்டு கொள்ளலாம்.

1971ஆம் ஆண்டு, இளைஞர் கிளர்ச்சியின் மூலகர்த்தாவாக விளங்கியவன் ரோகன் விஜேவீரா. அவன் தன்னைப் பற்றியும், தனது அரசியல் இலட்சியம் பற்றியும் எவ்விதம், எதற்காக ஒரு ஆயுதக் கிளர்ச்சியைத் திட்டமிட்டுச் செயல்படுத்தினான் என்பது பற்றியும் விரிவான விளக்கம் கொடுத்திருக்கின்றான்.

முதலில் அவனது அறிக்கையைப் பார்ப்போம். பின்னதாக எமது ஆராய்ச்சியில் இறங்குவோம்.

1973ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2ஆம் தேதி, குற்றவியல் நீதி ஆணைக்குழு (Criminal Justice Commission) முன்பாக விஜேவீரா நீண்ட அறிக்கை ஒன்றை விடுத்தான். அந்த அறிக்கையின் முக்கிய அம்சங்களைக் கீழே தருகிறோம்.

*"நான் ஒரு புரட்சிவாதி; பயங்கரவாதியல்ல"*

"நான் பதின்மூன்றுவது சந்தேக நபராக இந்த ஆணைக்குழுவினால் குறிக்கப்பட்டிருந்த போதும், பிரதம நீதியரசர் என்னையே தலையான சந்தேகநபர் எனச் சுட்டிக் காட்டியுள்ளார். ஆகவே, ஆரம்பத்திலேயே நான் யார் என்பதை விளக்குவது அவசியமாகிறது. நான் ஒரு மார்க்சிச, லெனினிசவாதி (Marxist Leninist). நான் ஒரு பாட்டாளிவர்க்கப் புரட்சிவாதி. மார்க்சிச—லெனினிசவாதம் என்பது ஒரு தெளிவான அரசியல் சித்தாந்தம். மார்க்சிச லெனினிசவாதி என்பவன் ஒரு சதிகாரன் அல்லன். நான் ஒரு புரட்சிவாதி. நான் ஒரு பயங்கரவாதியல்லன். நான் ஒன்றை மட்டும் திடமாகச் சொல்லுவேன். அதாவது, நான் ஒரு பாட்டாளிவர்க்கப் புரட்சிவாதியென்பதால், தற்போதைய முதலாளிவர்க்க அரசமைப்பை வீழ்த்தி, ஒரு சமதர்ம சமுதாயத்தை அமைப்பதே எனது இலட்சியமாகும்."

"பிற்போக்கான, பின்தங்கிய முதலாளித்துவ அமைப்பைக் கைவிடுவதோ அல்லது இந்தப் பழைய அமைப்பைமாற்றி, மனித சமுதாயத்தின் முன்னேற்ற வரலாற்றில் தோன்றிய, உன்னதமான ஒரு நவீன சோசலிச, சமூக அமைப்பை உருவாக்குவதோ அல்லது இந்த இலட்சியத்தின் பேரில்செயற்படுவதோ சதித்திட்டமெனச் சொல்ல முடியாது. ஆகவே, சரித்திர முன்னேற்றத்தின் நியதியைக் கொண்டு பார்க்கப் போனால், நான் ஒரு சதிகாரன் அல்லன்."

"மகிமைக்குரிய நீதியரசர்களே! நான் உங்களிடம் ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். ஆளும் வர்க்கத்தின் கையில், நான் மிகமோசமான முறையில் இம்சைப்படுத்தப்பட்டேன்; அவமானத்

திற்கு ஆளானேன்; பல வருடங்களாய் என்னைத் தூற்றினர்கள்; இழிவுபடுத்தினர்கள்; மானபங்கப்படுத்தினர்கள். இவ்வளவிற்கும் சட்டத்தின் பாதுகாப்பு எனக்குக் கிடைக்கவில்லை. நான் உங்களிடம் கேட்கும் ஒரேயொரு கோரிக்கை என்னவென்ருல், எனது கபடமற்ற தன்மையை எவ்வித தடையுமின்றிச் சுதந்திரமாக, வெளிப்படையாக எடுத்தியம்ப எனக்கு உரிமைதாருங்கள் என்பதுதான். முதலாளித்துவ ஆளும்வர்க்கம் நீண்டகாலத்திற்கு எனது வாய்க்குப் பூட்டுப் போட்டுவிடும். ஆகவே, இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்ல வேண்டியது அனைத்தையும் உங்கள் முன்பு சொல்ல விரும்புகின்றேன். ஆகவே, எனது பேச்சுச் சுதந்திரத்தைத் தடை செய்து விடாதீர்கள்.''

''இந்த நீதிமன்ற முதலாளித்துவ நிறுவனமானது, எனக்கு எதிராகப் பாரதூரமான முறையில் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. நான் இதுபற்றி ஆச்சரிப்படவில்லை. ஆளும் வர்க்கமானது, முதலாளித்துவத்தின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் தனது நிறுவனங்களை அமைத்துக்கொள்ளும் என்பது எனக்குத் தெரிந்ததே. ஆனல், அண்மைக்கால இலங்கைச் சரித்திரத்தில் நிகழ்ந்த மிகவும் கோரமான, மிகவும் மிருகத்தனமான மனிதப் படுகொலைகளின் சரித்திரப் பின்னணி என்ன என்பதை இங்கு விளக்குவதே எனது நோக்கம்.''

''கௌரவத்திற்குரிய ஆணைக்குழு அங்கத்தவர்களே! 'மனித வாழ்க்கையின் அர்த்தத்திற்கு ஒரு உருசிய அறிஞன் பின்வரும் விளக்கத்தைக் கொடுக்கிருன். ''மனிதனிடம் ஒரு உயர்வான, உன்னதமான, மகத்துவமான பொக்கிசம் உள்ளதென்ருல் அது அவனது வாழ்க்கைதான். அந்த வாழ்க்கையை மனிதன் ஒரு தடவைதான் வாழலாம். ஆகவே, அந்த வாழ்க்கையை ஒருவன் நிறைவானதாக, இலட்சிய பூர்வமானதாக வாழ்ந்தால் தான் சாகும் கணத்தில் அவன் கவலையோ, கலக்கமோ, ஏமாற்றமோ, ஏக்கமோ அனுபவிக்கத் தேவையில்லை. மனித இனத்தின் விடிவிற்காக, விடுதலைக்காக, விருத்திக்காக வாழ்க்கையை அர்ப்பணித்த ஒருவன் சாகும் தறுவாயில் சந்தோசத்தையே அனுபவிப்பான்.'' இப்படியான ஒரு இலட்சிய வாழ்க்கையையே நானும் தழுவ விரும்புகின்றேன். ஆகவே, இந்த முதலாளித்துவ ஆளும்கும்பலானது எனது வாழ்க்கையை என் இளமையிலேயே துண்டித்துவிட்டாலும், நான் எவ்வித கவலையும் கொள்வதற்கு இடமில்லை. எனது தலைவிதி எவ்விதம் நிச்சயப் படவிருக்கிறது என்பதுபற்றி எனக்குக் கவலையேயில்லை. என்மீது எவ்வித பழிதீர்க்கப்பட்டாலும், எப்பிரல் சம்பவங்களின் சரித்திர

அடிப்படையான காரணங்கள் அனைத்தையும் ஒளிவுமறைவின்றி உங்களுக்கு ஒப்புவிக்க விரும்புகின்றேன்."

"நான் 1943-ஆம் ஆண்டு, ஜூலை மாதம், தங்காலை என்னுமிடத்தில் பிறந்தேன்; மாத்தறை மாவட்டத்திலுள்ள ஒரு குக்கிராமமாகிய கோட்டைகொடையில் வளர்ந்தேன்; கொடானந்த அரசாங்கப் பாடசாலையில் படித்தேன். இளமைப் பருவத்தில் கம்யூனிச சித்தாந்தம் என்னைக் கவர்ந்தது. ஏகாதிபத்தியத்திற்கும், முதலாளித்துவத்திற்கும் எதிராக டாக்டர் எஸ்.ஏ. விக்கிரமசிங்கா தென்னிலங்கையில் அன்று நடத்திவந்த, மாபெரும் பிரசாரத்தினால் ஈர்க்கப்பட்டுக் கம்யூனிசக் கட்சி அனுதாபியானேன். கம்யூனிச இளைஞர் சம்மேளனத்தில் அங்கத்தவனாகி, வாழ்க்கையில் முதன் முறையாக அரசியலில் ஈடுபடத் தொடங்கினேன். 1959-ஆம் ஆண்டுஜூலை மாதம், விஞ்ஞானத்துறையில் ஜீ.சி.ஈ. (சாதாரண பிரிவில்) சித்தியடைந்தேன்."

"ஒரு நாள் 'சோவியத் நாடு' என்ற சஞ்சிகையில் வெளியாகிய ஒரு செய்தி என்னைக் கவர்ந்தது. அதில், ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளைச் சேர்ந்தவறிய மாணவர்களுக்கென, மாஸ்கோவில் ஒரு சர்வதேச சர்வகலாசாலை திறக்கப் படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனது குடும்பமோ ஏழ்மையானது. உயர்கல்வி படிப்பிக்க அவர்களால் முடியாது. ஆகவே, நான் மாஸ்கோ சர்வதேச மக்கள் நட்புறவுச் சர்வகலாசாலைக்கு விண்ணப்பித்தேன்."

"வைத்திய பட்டதாரிப் படிப்புக்கு உபகாரநிதி கிடைத்ததும் 1960-ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம், 25-ஆம் திகதி, நான் மாஸ்கோ புறப்பட்டேன். உருசிய மொழியைக் கற்பதற்காக, என்னை முதலில் மொழியியல் போதனாபீடத்தில்அனுமதித்தார்கள். 1961-ஆம் ஆண்டு ஜூன் வரை, உருசிய மொழி பயின்றேன். அத்துடன் உலகசரித்திரமும், மார்க்சிச சித்தாந்தமும் பயின்றேன். அவ்வேளையில்தான், பிரபல உருசிய சரித்திர வல்லுநரான பேராசிரியர் மெற்ருபொல்சிக்கியை சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. நான் அவரது மாணவராக இருந்திராது போனால், இன்று உங்கள் முன்னிலையில் நிற்கமாட்டேன். ஒரு வைத்தியனாகமாறுவதைவிட ஒரு புரட்சிவாதியாவதால், நான் மனித சமுதாயத்திற்கு இந்த யுகத்தில் அளப்பரிய சேவை ஆற்றலாம் என்பதை, எனக்கு உணர வைத்தது இந்த மனிதரின் புரட்சிகரமான கருத்துக்கள்தான்."

**சீன—உருசிய சித்தாந்தப் பிளவு.**

"வைத்தியக் கல்லூரியில் இரண்டாவது வருடப்படிப்பை ஆரம்பித்தபோது, எனது அக்கறையும், ஆர்வமும் அரசியலில் திரும்பியது. இந்தச் சந்தர்ப்பத்தில், சீன—உருசிய சித்தாந்தப் பிணக்குப்பற்றி எனது நெருங்கிய நண்பர்களுடன் விவாதித்தேன். இந்த விவாதங்களின் பயனாய், சீனக் கம்யூனிசக் கட்சியின் நிலை தான் சரியானதென எனக்குத் தோன்றியது. இதைக்கொண்டு நான் உருசியாவுக்கு விரோதமானவன் என எண்ணிவிடக் கூடாது."

"எம்மைப் பொறுத்தவரை இந்தப் பிளவானது, ஒரு சரியான கொள்கைத் திட்டத்தை அணுகுவதில் சீன, உருசியக் கட்சிகள் மத்தியில் எழுந்த, ஒரு சினேகபூர்வமான சித்தாந்த வாதம் என்றே எண்ணினோம். விரோதிகள் மத்தியில் எழும், கொந்தளிப்பாக இது மாறக்கூடுமென நான் அன்று எதிர்பார்க்கவில்லை."

"இந்தச் சந்தர்ப்பத்தில் இவ்வழக்குடன் தொடர்புடையதான ஒரு முக்கிய விடயத்தை, நான் இங்கு விளக்க விரும்புகிறேன். அதாவது, சாத்வீகம், பலாத்காரம் சம்பந்தப்பட்டமட்டில்மார்க்சிச வாதிகளின்நிலை என்னவென்பதுதான். நான் இதை விளக்க விரும்புவது ஏனென்றால், எனக்கு எதிரான சாட்சியங்களில் பலாத்காரம் பிரதான பிரச்சனையாக எழுப்பப்பட்டிருக்கிறது. சீன-உருசிய சித்தாந்தப் பிளவை எடுத்துக்கொண்டாலும், பலாத்காரக் கோட்பாட்டில்தான் அடிப்படையான பிணக்குத் தோன்றியுள்ளது."

"சமாதான வழியைத் தழுவி, முதலாளித்துவத்திலிருந்து சமதர்ம சமுதாயத்தை அமைப்பது சாத்தியமா என்பதுபற்றி, உலக கம்யூனிச இயக்கத்தில் நீண்டகாலமாக மிகச் சூடான விவாதம் நடைபெற்று வருகிறது. மார்க்சிசவாதிகளான எம்மைப் பொறுத்தவரை, தேச பரிபாலன அதிகாரம் சுரண்டி வாழும் முதலாளிவர்க்க ஆளும் கும்பலிலிருந்து, பாட்டாளிவர்க்கத்திற்குச் சமாதான முறையில் கைமாறுவதையே நாம் பெரிதும் விரும்புகிறோம்."

"ஒரு சிலரின் கைவசமிருக்கும் சொத்துரிமையானது, பொது மக்களிடம் சமாதான முறையில் கையளிக்கப்படுவதையே நாம் விரும்புகிறோம். மனிதனை மனிதன் சுரண்டி வாழும் இந்த அநீதியான ஆட்சியமைப்பு, சமாதான முறையிற் சுலபமாக, சீக்கிரமாக ஒழிந்துபோகுமாயின், நாம் அதனை ஆட்சேபிக்கவில்லை. வர்க்க

முரண்பாடுகள் நெருக்கடியின்றி, சினேக பூர்வமான முறையில் நீக்கப்படுமாயின், நாம் அதனை ஆட்சேபிக்கவில்லை. முரண்பாடான வர்க்க வேறுபாடுகள் அகன்ற, மனிதனை மனிதன் சுரண்டும் அநீதி அழிந்த பொருளாதார உற்பத்தி, பொது மக்களுக்கு உரித்தான ஒரு சமதர்ம சமுதாயத்தை உருவாக்கும். எமது அரசியல் இலட்சியமானது சமாதான முறை தழுவிப் பூர்த்தியடைவதையே, மார்க்சிசவாதிகளான நாம் விரும்புகின்றோம். ஆனால், இங்கு முக்கியமாக வலியுறுத்தவேண்டியது என்னவென்றால், ஒரு பாட்டாளிவர்க்க சோசலிசப் புரட்சி, சமாதான முறையிலோ அல்லது பலாத்கார மூலமோ நடைபெற வேண்டும் என்பதைத் தீர்மானிப்பது புரட்சிவாதிகள் அல்ல.''

''சுரண்டி வாழும் சொத்துரிமை கொண்ட ஆளும் வர்க்கமானது, தனது ஆட்சியதிகாரத்தையும், விசேடசலுகைகளையும் தானாக விட்டுக்கொடுத்ததாக இதுவரை சரித்திரத்தில் சம்பவம் இடம் பெறவில்லை என்பதை, கார்ல் மார்க்சு தெளிவாக விளக்கியிருக்கிறான். பெரும்பான்மை மக்களின் தேவைகளுக்கும், அவர்களின் வேண்டுகோளுக்கும் அடிபணிந்து, சொத்துடமையுள்ள வகுப்பினர் தமது சலுகைகளை விட்டுக்கொடுத்த வரலாறு இந்த முழு உலகத்திலுமே நடைபெறவில்லை. எமது சமுதாயத்தில், ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி வைத்திருக்கும் வகுப்பினர், இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தித் தனியார் சொத்துரிமை முறையைப் பாதுகாத்து வருகின்றனர். இந்த முதலாளித்துவ ஆளும் வர்க்கமானது, தனது சொத்துரிமையைப் பாதுகாக்கும் வண்ணம் ஒடுக்கப்பட்ட மக்கள்மீது மிகவும் கொடூரமான, படுபாதகமான குற்றங்களைப் புரியத் தயங்கி நிற்காது."

பலாத்காரமும், புரட்சியும்.

''மார்க்சிசவாதிகளான நாம் பாட்டாளிவர்க்கப் புரட்சிவாதிகளாவோம். தற்போதைய சமுதாய அமைப்பைப் புரட்சிகரமான முறையில் மாற்றியமைப்பதில் நம்பிக்கை கொண்டுள்ள நாம், இந்த இலட்சிய நோக்கைக் கொண்டே செயல்புரிவோம். இந்த முதலாளித்துவ அமைப்பை, மற்றவர்கள் தோளில் சுமந்து சென்று புதைக்கும் நாளை எதிர்பார்த்தபடி, நாம் கைகட்டிக் காத்திருக்கப் போவதில்லை.''

''இந்த முதலாளித்துவ ஆட்சிமுறையானது, இந்நாட்டின் முப்பது லட்சம் பாட்டாளிவர்க்கத்தினரை ஆழ்ந்த துயரத்திற்கும், அடக்குமுறைக்கும் ஆளாக்கியுள்ளது; ஏழை விவசாயிகளைப் பசியிலும், பட்டினியிலும் வாட்டிவருகிறது; வேலையில்லா இளைஞர்

பட்டாளத்தையும், போசாக்கற்ற குழந்தைகளையும் படைத்து வருகிறது. இந்நாட்டின் சமூகப் பிரச்சனைகள் அனைத்திற்குமே இந்த ஆட்சிமுறைதான் மூலகாரணமாக விளங்குகிறது.''

''புரட்சிக்கு எதிரான பிற்போக்குவாதிகள், பலாத்காரத்தைப் பிரயோகிக்கத் தவறமாட்டார்கள். ஆகவே, ஒரு புதிய சோசலிச சமுதாயத்தைப் பாதுகாப்பாகப் பிரசவிக்கச் செய்யவும், முதலாளித்துவ வர்க்கம் கையாளும் பலாத்காரத்தை முறியடிக்கவும், பாட்டாளிவர்க்கப் புரட்சிவாதிகள் புரட்சிகரமான பலாத்காரத்தில் குதிப்பது அவசியமாகிறது.''

''இங்கு, அடிப்படையான பிரச்சனை அரசின் அதிகாரம். முதலாளித்துவ அரசைத் தகர்த்தெறிந்து, பாட்டாளிவர்க்க அரசை அதாவது, பாட்டாளிவர்க்கச்சர்வாதிகாரத்தை உருப்பெறச் செய்வதுதான் ஒரு சமுதாயப் புரட்சியின் பிரதான கைங்கரியமாகும். ஒரு சமதர்ம சமுதாயம் உருவாகுதற்கு முதற்படியாக, பாட்டாளிவர்க்கச் சர்வாதிகாரத்தைத் தொடங்குவது அத்தியாவசியமாகும். பாட்டாளிவர்க்கத்தினர் அரசின் அதிகாரத்தினைக் கைப்பற்றி,அதனை நிலைப்படுத்திக் கொள்ளத் தவறினல், சோசலிச சமுதாயம் ஒருபோதும் உதயமாகப் போவதல்லை.''

''மார்க்சிசவாதிகளான நாம், பலாத்காரத்தைப் போதிப்பவர்கள் அல்லர். புரட்சி வெடிக்கும் சமயம், பலாத்காரச் செயல்கள் நிகழ்வது திண்ணம் என்பதை மட்டும், நாம் திடமாக முன்கூட்டியே சொல்ல முடியும். சோசலிசப் புரட்சிமூலம், சமுதாயமானது முற்போக்குப் பாதையில் முன்னேறிச் செல்கையில், ஆட்டம் காணும் ஆளும் வர்க்கத்தினர் இதற்கு முட்டுக்கட்டையாக, எதிர்ப் புரட்சிப் பலாத்காரத்தில் இறங்குவார்கள். இவ்வேளை பாட்டாளிவர்க்கமானது, இதனை எதிர்கொள்ளப் பலாத்காரமான புரட்சிகர செயல்களில் குதிக்க வேண்டி வரும்.''

*உருசியா விசா மறுத்தது.*

''1964ஆம் ஆண்டு பங்குனி 24ஆம் திகதி, விடுமுறையைக் கழிப்பதற்காக இலங்கை வந்தேன். இலங்கை வந்ததும் சீனக் கம்யூனிசுக் கட்சியின் சார்பாக, அதன் அனுதாபியாகச் சில செயல்கள் புரிந்தேன். பல மாணவ சங்கங்களும், மற்றும் பொது நிறுவனங்களும் எனக்கு அழைப்புக்களை விடுத்துச் சோசலிசம் பற்றியும், சோவியத் நாடு பற்றியும் பேசும்படி சொன்னர்கள். இக் கூட்டங்களின்போது, சீன—உருசிய சித்தாந்தப் பிளவுபற்றிக் கேள்விகள் விடுக்கப்பட்டன. நான் சீனவின் நிலையை ஆதரித்துப்

பதிலளித்தேன். இதனால், மாஸ்கோ சார்புக் கம்யூனிசுக் கட்சித் தலைவர்கள் சீற்றமடைந்தனர். 1964 ஆவணியில், நான் மீண்டும் உருசியா செல்வதற்காக விசாவுக்கு விண்ணப்பித்தபோது, சோவியத் தூதராலயம் எவ்வித காரணமும் காட்டாமல் எனது விசா மனுவை நிராகரித்தது. இதனையடுத்து இலங்கை அரசியலில் எனது கவனம் திரும்பியது.''

'1967ஆம் ஆண்டு, நடுப்பகுதியில், நானும் எனது நண்பர்கள் சிலருமாக எனது வீட்டில் ஒரு கூட்டம் நடத்தி, எமது எதிர்கால அரசியல் நடவடிக்கைகள்பற்றி ஆராய்ந்தோம். இப்படி நாம் கூடி நடத்திய விவாதங்கள் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தவை யாகும். ஏனெனில், இதன் பயனாகவே 'ஜனதா விமுக்தி பெரமுன' [மக்கள் விடுதலை முன்னணி] என்ற புதிய அரசியல் இயக்கம் உதயமாகியது.'

"இது இவ்வாறிருக்க, சர்வதேச ரீதியாக புரட்சி அரசியலில் ஒரு புதிய நோக்குப் பிறந்து, எமது நாட்டிலும் அதன் தாக்கத்தை விளைவித்தது. பொலிவியாவில், சேகுவேரா கொலை செய்யப்பட்ட சம்பவம் உலக ரீதியாகப் பிரசித்தமானதுடன், பாரதூரமான விளைவுகளையும் உண்டு பண்ணியது."

''இலங்கையிலுள்ள கியூபா தூதராலயம் சேகுவோர வினதும், காஸ்ட்ரோவினதும் சொற்பொழிவுகளையும், அரசியல் நூல்களையும் சிங்களத்தில் மொழிபெயர்த்து நாடு பூராகவும் விநியோகம் செய்திருந்தது. இந்தக் கருத்துக்களினால் தூண்டப் பட்ட எமது கட்சி ஆதரவாளர்கள் சிலர், இலங்கையும் கியூபாவின் புரட்சிப் பாதையைப் பின்பற்ற வேண்டுமென வாதாடினர். ஒரு புரட்சிகரமான கட்சியைக் கட்டியெழுப்பாமல், ஒரு புரட்சியை நடத்தலாமென இவர்கள் கருதினர். முதலாளித்து வத்தின் அடக்குமுறைக்கு அடிபணிந்து, பழைய இடதுசாரி இயக்கம் மக்களுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்ததால், ஒரு புரட்சிகரமான கட்சி எழும்பமுடியாதென்றும், புரட்சிவாதிகள் ஆயுதப் போராட்டத்தைத் தொடக்கி, அடக்குமுறையின் கீழுள்ள மக்களைத் தம்பக்கமாக அணிதிரளச் செய்ய வேண்டு மெனவும் இவர்கள் கருதினர். கியூபாவின் புரட்சிப் பாதையைப் பின்பற்ற விரும்பிய இத்தோழர்கள், இப்புரட்சியின் தன்மையை நன்கு புரிந்துகொள்ளவில்லை. பதினொரு பேர்கொண்ட புரட்சி வாதிகள் குழு ஒன்று துப்பாக்கிகளின் உதவியுடன் ஒரு புரட்சி யைத் தொடங்கி, போரிட்டு, வெற்றி பெற்றார்கள் என இவர்கள் கருதுகிறார்கள் போலும். கொடுங்கோலனான பட்டிசாவின்

சர்வாதிகாரத்திற்கு எதிராக, எவ்வாறு பொதுமக்கள் அணிதிரட்டப்பட்டார்கள் என்பதை இவர்கள் உணரவில்லை.''

*சோசலிசப் புரட்சி*

''நாம் சீனக்கம்யூனிசக் கட்சிக்குச் சார்பாக இருந்த சமயம், இலங்கையில் ஒரு சமுதாயப் புரட்சி எவ்வாறு அமையவேண்டும் என, நாம் கொண்டிருந்த கருத்துத் தவறுனதென உணர்ந்து கொண்டோம். சீனுவுக்குச் சார்பாக இருந்தபோது, மக்கள் சனநாயகப் புரட்சியை மேற்கொள்ளப் போராடுவதெனத் தீர்மானித்திருந்தோம். இலங்கையின் சூழ்நிலையைப் பொறுத்த வரை, எமக்குத் தேவையானது சோசலிசப் புரட்சியேயன்றி மக்கள் சனநாயகப் புரட்சியல்ல. இலங்கையின் தற்போதைய சமுதாய வளர்ச்சியையும், சர்வதேச முதலாளித்துவத்தின் தன்மையையும் பார்க்குமிடத்து, அந்நிய ஏகாதிபத்தியத்தை முற்றுக முறியடிப்பதாறுல் அது சோசலிசப் புரட்சியால்தான் முடியும். தேசிய சுதந்திரம், விவசாயப் புரட்சி, சனநாயகம் போன்ற நிறைவுபெரு இலட்சியங்களை நிறைவு பெறச் செய்ய வேண்டுமாயின், அது சோசலிசப் புரட்சியால்தான் முடியும். பாட்டாளிவர்க்கத்திறுல்தான் இந்தப் புரட்சிகரமான சாதனையைப் புரிய முடியும்.''

"ஆகவே, நாம் ஒரு பாட்டாளிவர்க்கப் புரட்சிவாதக் கட்சியைக் கட்டியெழுப்பத் தீர்மானித்தோம். எனினும், மார்க்சிசவாதிகள் அல்லாத ஒரு மார்க்சிசக் கட்சியை உருவாக்க முடியாது. கடந்த முப்பது ஆண்டு காலமாக, பழைய இடதுசாரி இயக்கம் புரிந்த சாதனைதான் என்ன? இந்தப் பழைய இடதுசாரித் தலைவர்கள் முதலாளித்துவ சித்தாந்தத்திற்குட் சிறைப்பட்டதால், பாட்டாளிவர்க்கத்திற்கு, மார்க்சிசதரிசனம்பற்றி அடிப்படையான விளக்கம்கூடக் கொடுக்கத் தவறிவிட்டார்கள். மார்க்சிசக் கருத்துக்களைச் சிங்களமொழியில் பரப்பக்கூடிய கட்சித் தொண்டர்கள் எவரையும், பழைய இடதுசாரித் தலைவர்கள் உருவாக்கவில்லை. ஒழுங்கற்ற முறையில் ஓரிரண்டு அரசியல் வகுப்புக்களை நடாத்திஞர்கள். ஆயினும் செம்மையாக, ஒழுங்கான முறையில் தொழிலாளிவர்க்கத்திற்கு அரசியற் கல்வி புகட்டத் தவறிவிட்டார்கள். தமது சொந்தக் கட்சியணியிற்கூட, அரசியல் விழிப்புணர்வை உருவாக்கத் தவறிவிட்டார்கள். ஆகவே, இந்த இடதுசாரித் தலைவர்கள் வலதுசாரிகளுடன் சார்ந்தபோது, அங்கு அவர்களை எதிர்த்துப் போராடும் வலிமை பெற்ற மார்க்சிசவாதிகள் இருக்கவில்லை. கட்சி அங்கத்தவர்கள் அனைவரும் கண்முடித்தனமாகத் தலைவர்களைப் பின்பற்றிஞர்கள்."

**ஐந்து வகையான அரசியல் வகுப்புக்கள்.**

"பழைய இடதுசாரி இயக்கம் இழைத்த தவறுகளைப் படித்தறிந்த நாம், சாதாரண மக்களுக்கு மார்க்சிசசித்தாந்தத்தைத் தெளிவான முறையிற் புகட்ட விரும்பினோம். மக்கள் இலகுவாகக் கிரகித்துக்கொள்ளும் விதத்தில், சிக்கலில்லாத சாதாரணமான எளிய முறையைத் தழுவி, அரசியல் வகுப்புக்களை நடத்தத் தீர்மானித்தோம். ஐந்து வகுப்புக்களைக் கொண்ட இந்த அரசியற் கல்வியின் சாராம்சத்தை இங்கு தருகிறேன்."

"முதலாவது வகுப்பு, **பொருளாதார நெருக்கடி** என்ற விடயம் பற்றியது. ஒரு சமுதாயத்தின் பொருளாதார அமைப்பிலேயே மற்றைய நிறுவன அமைப்புக்கள் தங்கியிருப்பதால், பொருளாதாரத்தை ஆழமாக அலசிப் பார்க்கும் அவசியத்தை உணர்ந்தோம். எமது தற்போதைய பொருளாதார நிலை, அதன் நெருக்கடி, அதன் மூலகாரணிகள், அதன் வளர்ச்சி, அதன் எதிர்காலம், அதன் தவிர்க்க முடியாத விளைவுகள் ஆகியனபற்றி அலசி ஆராய்ந்தோம். காலனித்துவ, நவீன காலனித்துவ ஆதிக்கங்களுக்கு அடிமைப்பட்டிருக்கும் சமுதாயங்களின் பொருளாதார நெருக்கடியானது, ஒரு அரசியல் நெருக்கடியாக உருவாகும் நிலையில் உள்ளது என்றும், இது ஒரு மாபெரும் தேசிய கொந்தளிப்பை ஏற்படுத்துமென்றும், இந்தக் கொந்தளிப்பைத் தவிர்ப்பதானல் வர்க்கப் போராட்டத்தை முன்னேற்றப் பாதையில் வலுப்படுத்தி, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை அமைத்து, சோசலிசக் கைத்தொழில் மயமாக்குதலையும், கூட்டுறவு விவசாயத்தையும் துரிதப்படுத்த வேண்டுமென விளக்கினோம்"

"இரண்டாவது வகுப்பு, **சுதந்திரம் ஒரு நவீன காலனித்துவ சூழ்ச்சி** என்ற தலைப்பைக் கொண்டது. 1948 ஆம் ஆண்டு மாசி 4 ஆம் திகதி, தேசியக் கொடிகள் மாற்றப்பட்டு எமக்குக் கிடைத்த சுதந்திரமானது, முழுமையான தேசிய சுதந்திரமோ அல்லது பொருளாதார சுதந்திரமோ அல்ல என்பதனை, இந்த வகுப்பில் எடுத்து விளக்கினோம். ஏகாதிபத்தியத்திற்கு எதிரான விடுதலை இயக்கங்களின் எழுச்சியில் இருந்து தனது முதலீடுகளையும், சொத்துக்களையும் பாதுகாப்பதற்காக, பிரித்தானிய ஏகாதிபத்தியமானது ஒரு நவீன காலனித்துவ சூழ்ச்சித்திட்டத்தல், எமது நாட்டின் பொருளாதாரத்தைச் சுரண்டி வருகிறது என்பதனை எடுத்து விளக்கினோம். "பொருளாதார சுதந்திரமற்ற அரசியல் சுதந்திரமானது போலியானது என்பதனைச் சுட்டிக்காட்டினோம்."

மூன்ருவதுவகுப்பு, **இந்திய விரிவாதிக்கம்** பற்றியது. இந்திய முதலாளித்துவ ஆளும் வர்க்கமானது, தனக்கருகாமையில் உள்ள சிறிய அயல் நாடுகள் மீது, எவ்விதம் தனது அரசியல், பொருளாதார ஆதிபத்தியத்தை விரிவடையச் செய்து வருகிறது என்பதைப் பற்றியதே இவ்வகுப்பு. இந்த இந்திய விரிவாதிக்கத்திஞல், எவ்விதம் எமது நாடு பாதிக்கப்பட்டு வருகிறது என்பதனை இவ்வகுப்பில் விவாதித்தோம். மிகவும் பலம் வாய்ந்த இந்திய முதலாளித்துவ வர்க்கம் எவ்விதம் எமது நாட்டைச் சுரண்டி வருகிறது என்றும், இந்திய வம்சாவழித் தோட்டத் தொழிலாளரை நாட்டின் ஏனைய பாட்டாளி வர்க்கத்துடன் இணைய விடாது பிரித்து வைக்கும் நோக்கத்துடன், இந்திய முதலாளி வர்க்கம் மேற்கொண்டு வரும் இனவாத அரசியல் பற்றியும் விவாதித்தோம். இந்த முதலாளிவர்க்கம் இந்திய வம்சாவழித் தோட்டத் தொழிலாளரைத் தப்பான வழியில் இட்டுச் செல்வதாகச் சுட்டிக் காட்டிய நாம், இத்தொழிலாளரை முதலாளித்துவ சித்தாந்த வலையிலிருந்து, விடுவிக்க வேண்டுமெனத் தீர்மானித்தோம். ஆனுல், இந்தச் செயலைப் பூர்த்திசெய்வதற்கான கட்சி வேலையாட்கள் எம்மிடம் இருக்கவில்லை. தேசிய சிறுபான்மை இனங்களைச் சார்ந்த தோழர்கள் மத்தியிலிருந்து, கட்சித் தொண்டர்களைக் கட்டியெழுப்ப நாம் மேற்கொண்ட முயற்சிகள் எதுவும் பயன் தரவில்லை.

"நான்காவது வகுப்பு, **இலங்கையின் இடதுசாரிஇயக்கம்** பற்றியது. பழைய இடதுசாரி இயக்கத்தின் தவறுகளிலிருந்தும், அதன் தோல்வியிலிருந்தும் நாம் என்ன பாடங்களைப் படித்துக் கொள்ளலாம் என்பது பற்றியதே இந்த வகுப்பு. 1930ஆம் ஆண்டிலிருந்து, பழைய இடதுசாரி இயக்கம் மேற்கொண்டு வந்த கொள்கைத் திட்டங்களையும், அரசியல் நடவடிக்கைகளையும் இவ்வகுப்பில் கண்டித்தோம்."

"ஐந்தாவது வகுப்பு, மிகவும் முக்கியமானது. **இலங்கைப் புரட்சி எந்தப் பாதையில் செல்ல வேண்டும்** என்பது பற்றியதே இந்த வகுப்பு.சேகுவேராவின் '**கெரில்லாப் போர்**' என்றநூல் வெளியானதையடுத்து, எமது ஆதரவாளர்களிற் சிலர், எமது பொருளாதார நெருக்கடிக்கு விடிவுகாணச் சேகுவேராவின் வழியைப் பின்பற்ற விழைந்தனர். இதே வேளை லின்பியாவோ எழுதிய '**மக்கள் போரின் வெற்றி நீடூழி வாழ்க**' என்ற நூலும், மாசேதுங்கின் '**இராணுவ எழுத்துக்கள்**' என்ற நூலும்சிங்களத்தில் வெளியாகின. இந்த எழுத்துக்களில், குறிப்பிடப்பட்ட யுக்திகளைக் கையாளலாம் எனச் சிலர் கருதினர். நாட்டுப் புறங்களி

லிருந்து பட்டினங்களைச் சூழ்ந்து கைப்பற்றும் சீனப் புரட்சியின், நீடித்த கெரில்லாயுத்தத்தை மேற்கொள்வதே, இலங்கைப் புரட்சிக்கு ஏற்றபாதையென, சீன சார்பானவர்கள் வாதாடினர். வேறு சிலர் உருசியப் புரட்சியின் பாதையில் செல்ல வேண்டுமெனக் கருதினர். இந்தக் கருத்துக் குழப்பத்திற்குத் தெளிவு காணும் நோக்கத்துடனேயே, இந்த ஐந்தாவது வகுப்பு நடாத்தப்பட்டது."

"ஒரு நாட்டில், ஒருகாலகட்டத்தில், அந்தச் சூழ்நிலைக்கேற்ப, மேற்கொள்ளப்பட்ட ஒரு புரட்சியானது, இன்னொரு நாட்டில், இன்னொரு காலகட்டத்தில், இன்னொரு சூழ்நிலைக்கு வேறுபட்டதாக இருக்கும் எனச் சுட்டிக்காட்டிய நாம், சோசலிசப் புரட்சிகளானது பிரத்தியேகமான ஒரே பாதையைக் கடைபிடிக்கவில்லையென்றும், காலம், இடம், சூழ்நிலைகளுக்கேற்ப ஒவ்வொரு புரட்சியும் தனக்கிசைவான, தனித்துவமான பாதைகளை மேற்கொண்டன என்பதையும் விளக்கினோம். இந்த ரீதியில், சீனப் புரட்சியானது உருசியாவின் புரட்சியிலிருந்து வேறுபட்டதென்றும், இவ்விரு புரட்சிகளோடு ஒத்துப்பார்க்கையில், கியூபாவின் புரட்சி மாறுபட்டதென்றும் எடுத்துக் காட்டினோம்."

"இந்த அடிப்படையான ஐந்து வகுப்புக்களுடன் எவரும் மார்க்சிசவாதிகளாக மாறிவிடுவார்கள் என நாம் எதிர்பார்க்கவில்லை. முதலாளித்துவ சித்தாந்தத்தின் ஆதிக்கத்திலிருந்து மக்களைக் காப்பாற்றி, அவர்களை மார்க்சிசப் புரட்சிவாதத்தில் கவருதற்கு இந்த வகுப்புகள் முக்கிய சாதனமாக அமைந்தன எனலாம்."

"1968ஆம் ஆண்டிலிருந்து, நாடு பூராகவும் இந்த வகுப்புகளை நடத்தினோம். அரசாங்கத் தொழிலாளர்கள், விவசாயிகள், இளைஞர்கள் பெரும்பாலானோர் இந்த வகுப்புகளிற் கலந்து கொண்டனர். எமது வகுப்புகளிற் பங்கு பற்றிய பல இளைஞர்கள் சர்வகலாசாலைகளில் அனுமதிபெற்றனர். இதன் விளைவாக உருசிய, சீன சார்பாக இருந்தபலர் எமது இயக்கத்தின் ஆதரவாளர்களாக மாறினர். இதனையடுத்துச் சர்வகலாசாலைகளிலும், பாடசாலைகளிலும் எமது வகுப்புகளை ஆரம்பித்தோம்."

புரட்சி செய்யும் உரிமை.

"நான் ஒரு மார்க்சிசவாதி என்ற ரீதியில், ஒரு அநீதியான ஆட்சிமுறைக்கு எதிராகப் புரட்சி செய்யும் உரிமை மக்களுக்குண்டு என்ற கருத்தைக் கொண்டுள்ளேன். இது மார்க்சிசவாதி

களின் கருத்து மட்டுமல்ல, சரித்திரத்தை எடுத்துக் கொண்டாற் பல்வேறு சித்தாந்தங்களிலும், மதங்களிலும் நம்பிக்கை கொண்ட மக்கள், ஒரு கொடுமையான ஆட்சிக் கெதிராகப்புரட்சி செய்யும் உரிமையில் நம்பிக்கை கொண்டவர்களாக இருந்திருக்கிறார்கள். மகாராணியாரின் அரசாங்கத்திற்கு எதிராகப் புரட்சிசெய்தோம், புரட்சிக்கு முயற்சி செய்தோம், சதி செய்தோம் என்றெல்லாம் எம்மீது குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது.''

''மகிமைக்குரிய தலைமை நீதியரசர் அவர்களே! 1649ஆம் ஆண்டில், ஆங்கிலேய மக்கள், ஒலிவர் குரோம்வெல் என்பவன் தலைமையில், இன்றையமகாராணியாரின்மூதாதையாகியமுதலாம்சாள்சு மன்னனுக்கு எதிராகப் புரட்சி செய்யவில்லையா? அவனைச் சிம்மாசனத்தில் இருந்து அகற்றி, மக்கள் வெற்றி கொள்ளவில்லையா? ஒரு கொடுங்கோலாட்சிக்கு எதிராகக் கிளர்ச்சி செய்வது நீதியானது, தர்மமானது என்று அன்றைய ஆங்கிலேய மக்கள் நம்பினார்கள். 1778 ஆம் ஆண்டு ஜோர்ச்வாசிங்டன் தலைமையில், அமெரிக்க மக்கள் பிரித்தானியப் பேரரசுக்கு எதிராகப் புரட்சி செய்து வெற்றி கொண்டார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். இவை எதைக் காட்டுகின்றன என்றால், மார்க்சிசம் தோன்றுவதற்கு முன்னரே புரட்சி செய்யும் உரிமை தமக்குண்டு என்பதில், மக்கள் நம்பிக்கை கொண்டிருந்தார்கள் என்பதையே. மகாவம்சம், சூழவம்சம் எனப்படும் எமது நாட்டின் சரித்திரக் குறிப்பு ஏடுகளில் எடுத்துப் பார்த்தாலும், கொடுங்கோலாட்சிக்கு எதிராகப் பல தடவைகள் மக்கள் கிளர்ச்சி செய்தார்கள் என்பதைக் காணலாம். எமது நாட்டு மக்களும் புரட்சி செய்யும் உரிமையை ஏற்றிருந்தார்கள் என்பதையே இது எடுத்துக் காட்டுகிறது. ஆகவே, ஒரு ஒடுக்கு முறை ஆட்சிக்கு எதிராகப் புரட்சி செய்யும் உரிமை, மக்களுக்குண்டு என்பதே எனது கருத்தாகும்.''

*ஏப்பிரல் கிளர்ச்சிக்குக் காரணங்கள் யாவை?*

''1971ஆம் ஆண்டு நிகழ்ந்த, சில முக்கிய சம்பவங்களை உங்களது கவனித்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன். எமது இயக்கத்தின் ஆரம்ப காலத்தில், நகரப்புறத் தொழிலாளி வர்க்கத்தினர் மத்தியில் எமக்கு அதிக ஆதரவிருக்கவில்லை. 1971ஆம் ஆண்டில், கிராமப் புறங்களிலிருந்து பட்டினங்களுக்கும் எமது இயக்கம் விரிவடைந்தது. எமது அரசியற் பிரச்சார இயக்கத்தின் தாக்கம் நகரங்களிலும், நகரப்பாட்டாளி வர்க்கத்தின் சில பிரிவினர் மத்தியிலும் பரவியது. தொழிற்சாலைகளிலும் மற்றும் தொழிலகங்களிலுமுள்ள இளைஞர்கள் எமக்குச் செவிகொடுக்கத் தொடங்கினர். இந்தச் சந்தர்ப்பத்தில்தான், பழைய இடதுசாரிகள்

எம்மால் ஏற்படக்கூடிய ஆபத்தை உணரத் தொடங்கினர்; எம்மை எதிர்கொண்டு மடக்கும் திட்டங்களைத் தீட்டினர்.”

‘‘முதல் முயற்சியாக, எம்மை அமெரிக்க உளவுத்தாபனமாகிய சி. ஐ. ஏயின் ஏஜெண்டுகள் என்று பொய்ப்பழி சுமத்தினர். இந்த முயற்சி பலிக்கவில்லை. அடுத்தபடியாக, தமது உள்ளூர் இயக்க ஆதரவாளர்களைத் தூண்டி, எமது அங்கத்தவர்களைத் தாக்க முயன்றனர். அதுவும் பயனளிக்காது போகவே, அமைச்சரவையைக் கூட்டி, சனதா விமுக்தி பெரமுனை ஒரு பலம் வாய்ந்த அரசியல் இயக்கமாவதைத் தடை செய்யும் வழி வகைகளை ஆராய்ந்தனர்.’’

‘‘எமது நாடு இன்று, மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியிருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்தப் பொருளாதார நெருக்கடியானது, திடீரென வானத்தில் இருந்து தோன்றவில்லை. 1971-ஆம் ஆண்டு ஏப்ரில் 5ஆம்தேதியும், அது இருக்கத்தான் செய்தது. அதற்கு முன்னரும் அது இருக்கத்தான் செய்தது. இன்று மக்கள்மீது சுமத்தப்பட்டிருக்கும் பொருளாதார, சமூகச் சுமைகளை அன்று மக்கள்மீது திணிக்க அரசாங்கம் தயங்கியது. ஏனென்றால், அன்று ஒரு புரட்சிவாத அரசியல் இயக்கம் இருந்தபடியால்தான். இந்தப் புரட்சிவாத இயக்கம் அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிராக, மக்களைக் கிளர்ச்சி செய்யத் தூண்டலாமென அரசாங்கம் அஞ்சியது. ஆகவே, மக்களுக்கெதிரான தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்னராக, எமது இயக்கத்தை ஒழித்துக் கட்டத் திட்டமிட்டனர்.’’

‘‘1971-ஆம் ஆண்டு சனவரிக்குப் பின்னர், நிலைமை உச்சக்கட்டத்தை அடைந்தது. முன்னாள் பொலிசுமா அதிபரான திரு. எல். ஏ. திசநாயாக்கா பாதுகாப்பு வெளி விவகார அமைச்சின் உப நிரந்தரக் காரியதரிசியாக நியமிக்கப்பட்டார். இதற்கு முன்னரே, இரகசியப் போலீசார் தமது முழு அதிகாரங்களையும் பிரயோகித்து, எமது இயக்கத்தின் நடவடிக்கைகளை விசாரணை செய்து வந்தனர். எமது இயக்கத்தின் விவகாரங்களைக் கண்காணிக்க, ஒருவிசேடப் பொலிசுப் பிரிவு ஒன்று நியமிக்கப்பட்டது. நாட்டின் பல பகுதிகளிலிருந்தும், எமது இயக்கத்தைச் சார்ந்த தோழர்கள் கைது செய்யப்பட்டனர். எமது இயக்கத்தின் அமைப்பு எல்லாவற்றிலும் உளவுப் படையினரை ஊடுருவச் செய்தனர்.’’

"மார்ச்சு மாதம் 6ஆம்திகதி, அமெரிக்கத் தூதராலயம்மீது ஒரு தாக்குதல் சம்பவம் நிகழ்ந்தது. இந்தச் சம்பவத்தைச் சாக்காகக் கொண்டு, எமது புரட்சிவாத இயக்கத்தை நசுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மார்ச்சு 13ஆம்திகதி, நான் கைது செய்யப்பட்டேன். மார்ச்சு 16ஆம் திகதி, அவசர காலச்சட்டம் பிறப்பிக்கப்பட்டது. 1971-ஆம் ஆண்டு, ஏப்பரல் 5ஆம்திகதிக்கு முன்னதாக, 4098 பேர் கைதாகினர்."

"1971ஆம் ஆண்டு ஏப்பிரலில், ஒரு ஆயுதப் புரட்சிக்கான, அல்லது பாட்டாளிவர்க்கம் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான புரட்சிகரமான சூழ்நிலையிருக்கவில்லை. இதுவே எனது கருத்து. நெருக்கடியான பொருளாதார, சமூக சூழ்நிலையும், புரட்சிகரமான மானசீகச் சூழ்நிலையும் இல்லாத பட்சத்தில், ஒரு ஆயுதக்கிளர்ச்சி எழுவது கடினம்."

"ஆயுதப் புரட்சி மூலம் அரசாங்க அதிகாரத்தைக் கைப்பற்றும் சூழ்நிலை, அச்சமயம் பக்குவமாகவில்லையென்பதே எனது கருத்து. எனினும் இச்சூழ்நிலை துரிதமாக வளர்ந்து கொண்டிருந்தது. ஆனால், ஆயுதப் புரட்சியைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைக்கு மக்கள் தள்ளப்படவில்லை. மக்களின் பரந்த ஆதரவைப் பெற்று, அவர்களை ஆயுதப் புரட்சிப் பாதையில் இட்டுச் செல்லும் சக்தி வாய்ந்த ஒரு புரட்சிகரமான கட்சியும் இருந்திருக்கவில்லை. சனதா விமுக்தி பெரமுனை இந்தப் பாதையில் வளர்ந்து கொண்டிருந்ததே தவிர, பலமும் பக்குவமும் அடையவில்லை. எமது இயக்கத்தை வடக்குக் கிழக்கு மாகாணங்களிலும், மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியிலும் ஒரு அரசியல் சக்தியாகத் தாபிக்கத் தவறிவிட்டோம்."

"1971 ஆம் ஆண்டு ஏப்பிரல் 5ஆம்திகதி, அரசின் அதிகாரத்தைக் கைப்பற்றச் சனதா விமுக்தி பெரமுனை தீர்மானித்தது என்பதனை நான் முற்றாக நிராகரிக்கிறேன். நான் அதனை ஒருபொழுதும் அங்கீகரிக்கமாட்டேன். ஆனால், ஒன்றை மட்டும் நான் மறுக்கவில்லை. அது எனக்குப் பின்புதான் தெரிய வந்தது. அதாவது, தாங்க முடியாத ஒடுக்கு முறையை எதிர்கொண்ட எமது இயக்கத் தோழர்கள் சிலர், அந்த ஒடுக்கு முறையை எதிர்த்துப் போராட்டத்தில் குதித்தனர் என்பதுதான். புரட்சிவாத அரசியல் இயக்கங்களை, குறிப்பாக, சனதா விமுக்தி பெரமுனையை இந்நாட்டில் நசுக்கவேண்டும் என்ற ஒரு தேவை, இந்நாட்டின் ஆளும் வர்க்கத்திற்கு ஏற்பட்டது. அதன்படி அவர்கள் நடவடிக்கையில் இறங்கினார்கள். ஏப்பிரல் சம்பவங்கள் அதன் விளைவுகளாகும்.

"முடிவாக இதைமட்டும் சொல்ல விரும்புகிறேன். முதலாளி வர்க்கமானது ஒரு தற்காலிக வெற்றியை அடைந்துள்ளது என் பதை, நான் ஏற்றுக் கொள்கிறேன். இது பாட்டாளிவர்க்கத்திற்கு ஏற்பட்ட ஒரு தோல்வியாக நான் கருதவில்லை. பாட்டாளி வர்க்கத்திற்கு இது பெரியதொரு பின்வாங்குதலாகும். ஆனால், பின்வாங்குதல் ஒரு தோல்வியாகாது. அது ஒரு கட்டத்தைக் குறிப்பது. இந்தக் காலகட்டத்திற் புத்துயிர் பெறும் பாட்டாளி வர்க்கம், திடமான ஒரு வெற்றியை நோக்கி வீறுநடைபோடும் என்பது திண்ணம். புரட்சிவாத இயக்கங்களின் முன்னேற்றப் பாதையில், பின்வாங்குதல்கள் ஏற்படுவது இயல்பான விடயம். இதே நிலைதான் இன்று எம்மை எதிர்நோக்கியுள்ளது. இந்த நிலையில் நின்றுகொண்டுதான், நான் உங்கள் முன்பாகச் சாட்சியம் அளிக்க வந்தேன். எனது தனிப்பட்ட நன்மையைக்கருதி, எனது இலட்சியத்திற்குமாறாக நான் எதையும் சொல்லவில்லை. நான் இங்கு ஆதரித்துப் பேசுவது என்னையல்ல; மார்க்சிசக் கொள்கை களையே."

"முதலாளித்துவ வர்க்கமானது இந்த ஏப்பிரல் சம்பவங்கள் மூலம் எவ்வித பயனை எதிர்பார்த்தார்களோ எனக்குத் தெரியாது. அதன் இறுதி விளைவு என்னவாகமுடியும் என்பதை, ஒரு புரட்சி வாதக் கவிஞன் ஒரு கவிதையில் அழகாகச் சொல்கிறான். அந்தக் கவிதையின் அர்த்தம் இதுதான்.

புரட்சியின் பூக்கள் பூத்தன, அவையோ
பூமியில் உலர்ந்து மடிந்தன, அவற்றின்
நறுமணமோ என்றும் சாவதில்லை.
புதிய மொட்டுக்கள் மலர்ந்து, பெருகி
அந்த சுகந்தத்தைத்திக் கெங்கும் பரப்பிவரும்.

"முதலாளித்துவமானது, தனது தற்காலிக வெற்றியைக் கண்டு களிப்படைவதற்கு எவ்வித காரணமுமில்லை. ஏனெனில், வர்க்கப் போராட்டத்தில், இறுதியில் வெற்றிவாகை சூடுவது பாட்டாளி வர்க்கமேதான்."

**புரட்சியின் தோல்விக்கு பிரதான காரணங்கள்.**

தன்னைப் பற்றியும், தனது இலட்சியம் பற்றியும், தனது இயக்கம் பற்றியும், ஏப்பிரல் புரட்சிபற்றியும் ரோகன் விஜேவீரா அளித்த வாக்குமூலத்தைப் பார்த்தீர்கள். இக்கூற்றுக்களிலிருந்து இவன் மார்க்சிச-லெனினிசக் கொள்கைத்திட்டத்தைச் சீரியமாய்த்

தழுவிய ஒரு பாட்டாளிவர்க்கப் புரட்சிவாதியெனக் கருதிவிடக் கூடாது. இவனது வாக்குமூலத்திலேயே பல பொய்கள் ஒளிந்து கிடக்கின்றன. இந்தப் பொய்களையும், புரட்சியின் தோல்விக்கான பிரதான காரணங்களையும் இனி ஆராய்ந்து பார்ப்போம்.

முதலாவதாக நாம் சுட்டிக்காட்ட விரும்புவது என்ன வென்ருல், ரேகன் விஜேவீரா மார்க்சிச-லெனினிசக் கொள்கைத் திட்டத்தைத் தனது அரசியல் இலட்சியமாய் வரித்துக் கொள்ள வில்லை. அதனைப் புரிந்து கொள்ளும் சிந்தனைத் தெளிவும் அவனிடம் இருக்கவில்லை.

ஒரு புரட்சிகரமான கொள்கைத் திட்டமில்லாமல், ஒரு புரட்சி கரமான இயக்கம் உருப்பெருது என்பது லெனினின் அனுபவக் கூற்று. இந்தப் புரட்சிகரமான கொள்கைத் திட்டமானது ஒரு சமுதாயத்தின் சரித்திர, பொருளாதார, அரசியல் அம்சங்களை ஆணித்தரமாக ஆராய்ந்து, யதார்த்த சூழ்நிலையைக் கிரகிப்பதாக அமையவேண்டும். அப்படி வரிந்து கொள்ளப்படும் கொள்கைத் திட்டத்தின் அத்திவாரத்தில் கட்டப்படும் ஒரு இயக்கம், ஒடுக்கப் படும் மக்களின் விருப்புக்களைப் பூர்த்தி செய்யும் புரட்சிகரமான தீர்வுகளைக் கொண்டிருப்பதால், அது பொதுசன இயக்கமாய் விரிந்துவளரும். சோசலிசப் புரட்சிக்கோ, ஆயுதக் கிளர்ச்சிக்கோ ஒரு புரட்சிகரமான கொள்கைத் திட்டம் அவசியம் என்பதை, எந்த மார்க்சிசப் புரட்சிவாதியும் மறுக்கமுடியாது.

ரேகன் விஜேவீராவோ அல்லது சனதா விமுக்தி பெர முனையோ அப்படியான புரட்சிகரமான கொள்கைத் திட்டத்தைக் கொண்டிருக்கவில்லை. இனவாதமும், பிற்போக்குவாதமும், பேரினத்தேசியவாதமும் ஒன்று கலந்த ஒருவிதத் திரிபுவாத சோசலிசத்தின் அடிப்படையில், ஆட்சியைக் கைப்பற்றும் அதீத ஆசையும், அவசர புத்தியும், முரட்டுத் துணிச்சலும் சேர்ந்த ஒரு குளறுபடியான திட்டத்தில் உருவாக்கப்பட்டதுதான் சனதா விமுக்தி பெரமுனை. உலகப் புரட்சிவீரர்களான சேகுவேரா, மாசேதுங், கோ-சி-மின் போன்றோரின் சரித்திரப் பாடங்களை சரி வரப் புரிந்துகொள்ளாத குழப்பத்துடன், புரட்சிப் பாதையில் காலடி வைத்து, சறுக்கி விழுந்த மாபெரும் அரசியல் தற்கொலை இது.

தெளிவான கொள்கைத் திட்டம் இல்லாததால், சனதா விமுக்தி பெரமுனைத் தலைமைப் பீடத்தில் ஆரம்பத்திலிருந்தே சித்தாந்தப் பிணக்கு ஏற்பட்டது. சித்தாந்தப் பிணக்கால்

தலைமைப் பீடம் மூன்று குழுக்களாகப் பிளவுகண்டது. உருசியப் புரட்சியை வலியுறுத்தி ஒரு குழுவும், மாவோவின் புரட்சி நுட்பங்களைக் கையாளவேண்டுமென இன்னொரு குழுவும், சேகுவேராவின் கெரில்லா யுக்திகள் தான் சிறந்த மார்க்கம் என மற்றொரு குழுவுமாக மூன்று பிரிவினர்தலைமைப் பீடத்திற்குள் தோன்றிச் சர்ச்சைப்பட்டு வந்தார்கள்.

சேகுவேராவின் பாதையைப் பின்பற்ற விரும்பிய குழுவே, இயக்கத்தில் பலம் வாய்ந்ததாக உருப்பெற்றது. இப்பிரிவினருக்கு லொக்கு அத்துல, பியதிலகா போன்ருேர் தலைமை தாங்கினர். இவர்களது பிரச்சாரத்தால்தான், சனதா விமுக்தி பெரமுனைக்கு சேகுவேரா இயக்கம் என்ற புனைபெயரும்கிட்டியது. ருேகன் விஜேவீரா இம்மூன்று குழுவினரையும் சித்தாந்த ரீதியில் இணைக்க முயன்றது தோல்வியில் முடிந்தது. கொள்கையில் குழம்பி நின்ற இந்தச் சக்திகளை இணைக்கவல்ல, சரியான கொள்கைத்திட்டத்தை வகுக்கும் ஆற்றலும், அனுபவமும், அரசியல் ஞானமும் ரோகனிடம் இருக்கவில்லை. இதனால், சனதா விமுக்தி பெரமுனை இறுக்கமான, கட்டுக்கோப்பான இயக்கமாக அமைந்திருக்கவில்லை. தலைமைப்பீட அமைப்பிலிருந்த ஒவ்வொரு குழுவும், நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொண்டது. இயக்க அமைப்பு கட்டுக்குலைந்தது ஒரு புறமிருக்க, அங்கத்தவர் மத்தியில் சித்தாந்த வேறுபாடு சிதறிக்கிடந்தது. இயக்கத்தின் நோக்கம், கொள்கை, புரட்சிப் பாதை எதிலும் தெளிவு இருக்கவில்லை. தலைமைப்பீட அங்கத்தவர்கள் ஒருவருக்கெதிராக ஒருவர் சதியிலும் ஈடுபட்டனர். கொலைகளும் திட்டமிடப்பட்டன. உதாரணமாக, இயக்கத் தலைவர்களில் ஒருவனான சரத் விஜயசேகரா சனதா விமுக்தி பெரமுனை அங்கத்தவன் ஒருவனால் சுட்டுக்கொல்லப்பட்டான். இந்தக் கொலையைத் திட்டமிட்டது யார் என்ற மர்மம் இன்னும் துலக்கப்படவில்லை. ருேகன் விஜேவீராவைக் கொல்ல லொக்கு அத்துல திட்டம் தீட்டியிருந்தான் என்பது, ஏப்பிரல் கிளர்ச்சியை அடுத்து நடந்த வழக்கு விசாரணையின் பொழுது அம்பலமாகியது. இப்படித் தலைமைப் பீடத்திற்குள் குத்துவெட்டு.

இவற்றிலிருந்து நாம் முக்கியமாகக் கவனிக்கவேண்டியது என்னவென்ருல், ஏப்பிரல் கிளர்ச்சியின் தோல்விக்குப் பிரதான காரணங்களில் ஒன்று சனதா விமுக்தி பெரமுனையின் தெளிவற்ற குழப்பகரமான சித்தாந்த விளக்கமாகும். இதனால் தலைமைப் பீடப் பிளவும், கட்சிக்கட்டுப்பாட்டமைப்பிற்சீர்கேடும் உருவாகி, ஈற்றில் மாபெரும் அழிவுக்கு வழிவகுத்தது. தமிழீழப் புரட்சிவாதிகளாகிய

எமக்கு, இது ஒரு முக்கிய பாடத்தைப் புகட்டுகிறது. அதாவது, ஆயுதப் புரட்சியின் நோக்குடன், ஒரு புரட்சிகரமான தேசிய விடுதலை இயக்கம் ஒன்றையமைத்து அதனை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதாயின், ஒரு தெளிவான அரசியல் சித்தாந்தத்தில் வகுக்கப்பட்ட, புரட்சிகரமான கொள்கைத் திட்டம் அவசியம். இயக்க வளர்ச்சிக்கும், கட்டுப்பாட்டிற்கும், ஒருமைப்பாட்டிற்கும், பிரதானமாகப் பொதுசன ஆதரவைத் திரட்டுவதற்கும் இது இன்றியமையாதது. ஆகவே, அரசியற் சித்தாந்த விளக்கமும், புரட்சித் திட்டமும் இல்லாமல், ஆயுதப் புரட்சியில் இறங்க விழைவது மிகவும் ஆபத்தானது. சனதா விமுக்தி பெரமுனையின் சீர்கேடான புரட்சித் திட்டத்திலிருந்து, நாம் புரிந்துகொள்ள வேண்டிய முக்கிய பாடம் இது.

*அரசியல் சூழ்நிலையை அசட்டை செய்தார்கள்.*

ஆட்சியாளரின் சதியும், ஆயுதப் படைகளின் ஒடுக்குமுறையின் கொடூரமும் காரணமாகவே, ச. வி. பெ. ஆயுதக் கிளர்ச்சியில் இறங்க நிர்ப்பந்திக்கப்பட்டது என்கிறுன், ரோகன். இந்தக் கூற்று உண்மையானதல்ல. ஏப்பிரலில் ஒரு கிளர்ச்சி நடத்த வேண்டுமென்று, பலமாதங்களுக்கு முன்னரே திட்டமிடப்பட்டது. இரகசியப் போலிசார் இயக்கத் தலைமைப்பீடம் வரை ஊடுருவி, ஏப்பிரல் கிளர்ச்சிக்கான திட்டங்கள் பற்றி விபரமாக அறிந்து கொண்டார்கள். ஒளித்து வைக்கப்பட்ட வெடிகுண்டுகள், துப்பாக்கிகள் பொலிசார்வசம் இலகுவாகச் சிக்கியதும், ஏப்பிரலுக்கு முன்னரே நாலாயிரம்பேர் வரை கைதானதும் இதற்குச் சான்று பகர்கின்றன. ஏப்பிரல் திட்டம் அம்பலமாகியதால்தான், அரசாங்கம் ச.வி. பெமீது மிகப் பயங்கரமான ஒடுக்குமுறையில் இறங்கியது. ஏப்பிரலில் புரட்சிக்கு ஆயத்தங்கள் நடைபெறுவதாக அரசாங்கம் அறிந்திருந்தாலும், ஏப்பிரலில் எந்தத் திகதியில், எவ்விதம் புரட்சி வெடிக்குமென அரசாங்கத்திற்குத் திட்டவட்டமான தகவல் கிடைக்கவில்லை. அது மட்டுமன்றி, நாட்டுப் புறங்களில் ச. வி. பெயின் பலத்தை அரசாங்கம் தப்பாக எடைபோட்டிருந்தது. தலைவர்களையும், மற்றும் முக்கிய அங்கத்தவர்களையும் கைது செய்தால், இயக்கத்தை நசுக்கிப் புரட்சியையும் ஒடுக்கிவிடலாமென ஆட்சியாளர் எண்ணினர். ஆனுல், தென்னிலங்கையிற் குறிப்பாகத் தென்மாகாணம், மேற்கு மாகாணம், மத்திய, வடமத்திய மாகாணங்களில் வேலையற்ற இளைஞர்கள் மத்தியிலும், நிலமற்ற ஏழை விவசாயிகள் மத்தியிலும் ச. வி. பெ. வேருன்றிப் பரவலாக வளர்ந்திருந்தது. ஏப்பிரல் 5 ஆம் திகதி, திடீரெனப் பல பொலிசு நிலையங்கள் தாக்கப்பட்ட பொழுது, ஆட்சியாளர் பதட்டப்

பட்டனர்; செய்வதறியாது தடுமாறினர். இது அரசாங்கத்தின் தப்பான மதிப்பீட்டைக் காட்டுகிறது.

1971ஆம் ஆண்டு ஏப்பிரலில், ச. வி. பெ. ஆயுதக் கிளர்ச்சிக் குத் திட்டம் வகுத்துள்ளதாயின், ஒரு பொதுசனப் புரட்சிக்கு இக்காலகட்டம் உகந்ததா என நாம் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்குமிடத்து சரித்திரகாலகட்டம், மக்கள் மனோநிலை, அரசியற் சூழ்நிலை போன்றவற்றை முற்ருக அசட்டை செய்து, அவசரத்தில் ஆக்கப்பட்ட திட்டமென்றே இதைச் சொல்ல வேண்டும்.

1970ஆம்ஆண்டு மே 27ஆம்தேதி நடந்த, பொதுத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாசக்கட்சி, கம்யூனிசக் கட்சி என்பன ஒன்று சேர்ந்த ஐக்கிய முன்னணி பொது மக்களின் அமோகஆதரவைப்பெற்று ஆட்சிபீடம் ஏறியது(151 தொகுதிகளில் 114 தொகுதிகள் ஐக்கிய முன்னணிக்குக் கிட்டியது குறிப்பிடத் தக்கது.) சோசலிச அரசாங்கம், மக்கள் அரசாங்கம் பதவிக்கு வந்து விட்டது,ஒடுக்கப்பட்ட வர்க்கங்களுக்கு சுபீட்சம் கிட்டப்போகிறது, என்றெல்லாம்,மக்களிடையே அலாதியான நம்பிக்கை குடிகொண் டிருந்த காலகட்டம் இது. நாட்டின் சமூக, பொருளாதார நிலை சீர்கெட்டு இருந்த பொழுதும், பதவிக்கு வந்துள்ள இடதுசாரி அரசாங்கம் எப்படியோ ஒரு விடிவைக் கொண்டுவரப் போகிறது என, மக்களிடையே ஆர்வம் தோன்றியிருந்த அரசியல் சூழ்நிலை இது. இப்படியான அரசியல் சூழ்நிலையில், பொதுமக்களின் நம்பிக்கையும், ஆதரவும் புதிய அரசாங்கத்திடம் சார்ந்திருந்த தறுவாயில், ஒரு ஆயுதக் கிளர்ச்சிக்குத் திட்டம் இடுவது அரசியல் அசட்டுத்தனமாகும். பொதுமக்கள் ஆதரவின்றி எந்தவொரு கிளர்ச்சியும் வெற்றி பெறுதென்பது, புரட்சி அரசியல் வரலாற்றி லிருந்து புரிந்துகொள்ள வேண்டிய பாடமாகும். பொதுசன ஆதரவையும், அரசியல் சூழ்நிலையையும் அசட்டை செய்தது, கிளர்ச்சியின் தோல்விக்கான முக்கிய காரணங்களில் ஒன்று.

### இந்திய விரிவாதிக்கம் என்ற இனவாதப் பிரச்சாரம்.

ச. வி. பெ. நடாத்திவந்த வகுப்புகளில், மூன்ருவது வகுப்பு இந்திய விரிவாதிக்கம் பற்றியது என்பதனை ரோகனின் அறிக்கையி லிருந்து பார்த்தோம். இந்த வகுப்பு ரோகனின் கூற்றுக்கு முற்றிலும் மாருக, மிகவும் துவேசமான இனவாதப் பிரச்சாரமாக அமைந்தது. தென் இந்தியத் தமிழ்வர்த்தகர்கள் இலங்கையைச் சுரண்டிவருவ தாகக் கூறியது ஒரு புறமிருக்க, தமிழ்த் தோட்டப் பாட்டாளி வர்க்கத்தின் தோளில் நாட்டின் பொருளாதாரமே தங்கியிருப்ப தாகவும், அதை மாற்றியமைக்க வேண்டுமென்றும் பிரச்சாரம்

செய்யப்பட்டது. பர்மிய அரசாங்கம் எவ்விதம் இந்திய மக்களை நாட்டைவிட்டு விரட்டிக் கலைத்ததோ, அதே போலவே இலங்கை யிலிருந்தும் தமிழர்கள் விரட்டப்படவேண்டுமென ,ச.வி·பெ தலைவர் ஒருவர் பொதுக் கூட்டம் ஒன்றில் பேசியது இங்கு குறிப்பிடத் தக்கது. இன்னொரு விதத்திற் சொல்லப் போனால் ''இந்திய விரிவாதிக்கம்'' என்ற பதம் ''தமிழ் விரிவாதிக்க''மாகத் திரிக்கப் பட்டு, தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான இனத் துவேசப் பிரச்சார மாக மாற்றப்பட்டது. ஒரு விதத்தில் இந்த இனவாத அரசியலே, ச.வி.பெக்கு இனவெறிபிடித்த இளைஞர் மத்தியில் செல்வாக்கைத் தேடிக் கொடுத்தது எனலாம். இந்த இனவாதத் துவேசம் காரணமாகவே, ச. வி. பெ. தமிழ் பேசும் இனத்தை தனது புரட்சித் திட்டத்தில் இருந்து ஒதுக்கி வைத்தது.

இலங்கையின் அதிபலம் வாய்ந்ததும், பாட்டாளிவர்க்கப் புரட்சிக்கு முதுகெலும்பானதுமான தோட்டத் தொழிலாளி வர்க்கத்தின் ஆதரவைத் தேடாமல், தமிழீழத் தமிழ் பேசும் மக்களை முற்றாக ஒதுக்கிவிட்டு அரசியல் புரட்சித் திட்டம் வகுத் தது, ச.வி. பெயின் இனவாதத்தின் இறுமாப்பை அம்பலப்படுத்து வதாக உள்ளது. தமிழ் பேசும் இனத்தை ஒதுக்கிவைத்து எந்தவொரு அரசியல் சக்தியாவது, ஒரு தேசியப் புரட்சியை நடத்த முடியாதென்பது ச. வி. பெயின் படுதோல்வியிலிருந்து, சிங்களப் புரட்சிவாதிகள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடமாகும். இன்றைய ச. வி. பெ. இந்தப் பாடத்தைப் பட்டுணர்ந்து கொண்ட தால்தான், இன்று வட, கிழக்கிலும், மலையகத்திலும் தமிழர்களின் ஆதரவுக்கு வலைவீசித் திரிகிறது. எமது புரட்சிவாத இளைஞர்கள் இந்த அரசியலில் வலையிற் சிக்கி விடக்கூடாது, தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஆதரிப்பதாக இவர்கள் சொல்லிக்கொண்டாலும், தனிநாட்டுக் கோரிக்கையை எதிர்க்கிறார் கள் என்பதையும், இது மார்க்சிச—லெனினிச சித்தாந்தத்திற்கு விரோதமானது என்பதையும் நாம்ஏற்கனவே சுட்டிக்காட்டினோம். இவர்களது அரசியல் சந்தர்ப்ப வாதத்திற்கும், பேரினத் தேசிய வாதத்திற்கும் எமது இளைஞர்கள் வசப்படக்கூடாது.

புரட்சிவாதம் பேசும் எந்தவொரு சிங்கள அரசியல் இயக்கத் தில் சேர்ந்தாலும், எமக்கு விடுதலை கிட்டப் போவதில்லை. புரட்சி கரமான ஒரு விடுதலை இயக்கத்தை நாம் கட்டியெழுப்பி, அந்த இயக்கத்திற்கும், அதன் புரட்சிகரமான கொள்கைத் திட்டத்திற் கும் சிங்களப் புரட்சி இயக்கங்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதே, எமது நோக்கமாக இருக்க வேண்டும். எமது தேசிய விடுதலையை நாமே போராடிப் பெற்றுக் கொள்ள வேண்டும். மற்றவர்கள் பெற்றுத் தருவார்கள் என எதிர்பார்ப்பது அரசியல்

மூடத்தனமாகும். எமது பிரச்சனை இன்னும் மொழிப் பிரச்சனை என்பதே, பல சிங்கள மார்க்சிச அரசியல் இயக்கங்களின் கருத் தாகும். எமது பிரச்சனையானது சமூக, பொருளாதார, அரசியல் வடிவங்களைக் கொண்ட ஒரு தேசிய இனப் பிரச்சனை யென்பதை, இவர்கள் இன்னும் உணர்ந்து கொள்ளவில்லைப் போலும்.

போர் நுணுக்கங்களிற் பயிற்சி பெறவில்லை.

ச. வி. பெ. யின் ஏப்பிரல் கிளர்ச்சி நடவடிக்கைகளை ஊன்றிக் கவனித்தால், எந்தவிதமான இராணுவப் போர் நுணுக்கங்களிலும் பயிற்சியில்லாத, முட்டாள்தனமான ஒரு தாக்குதலாகவே அது அமைந்ததெனச் சொல்ல வேண்டும். தாமாகத் தயார் செய்த கைக் குண்டுகளுடனும், களவாடிய சில துப்பாக்கிகளுடனும் பொலிசு நிலையங்களைத் தாக்கி, அங்கு கைப்பற்றக்கூடிய ஆயுதங் களை ஆதாரமாகக் கொண்டு. நாட்டுப் புறங்களைத் தமது ஆதிக்கத் தில் வைத்திருப்பதே இவ்வியக்கத்தினரின் நோக்கமாக இருந் தது. ஆயுதப் படைகளின் எதிர்த்தாக்குதலைச் சமாளிக்கும் திட்டமோ அல்லது நீண்ட கால நாட்டுப்புறக் கெரில்லா யுத்தத் திற்கான திட்டமோ வரிக்கப்படவில்லை. தலை நகரமும், ஆயுதப் படைகளின் தளங்கள் மற்றும் முக்கிய கேந்திர நிலையங்களும் தாக்கப்படுவதற்கான திட்டங்கள் வகுக்கப்படவில்லை.

ஏப்பிரல் 5ஆம் திகதியிலிருந்து 10ஆம் திகதிக்குள், மொத்தம் 93 பொலிசு நிலையங்கள் கிளர்ச்சிக்கார இளைஞர்கள் வசம் வீழ்ந்தன. கிளர்ச்சி வெடித்து ஒரு வாரத்திற்குள், கேகாலை, மாத்தறை, குரு நாகல், அநுராதபுரம், மாத்தளை, பொலனறுவை, காலி, அம்பாந் தோட்டை, அம்பலாங்கொடை, கட்டுநாயக்கா போன்ற பத்து நிருவாக மாவட்டங்கள், கிளர்ச்சிக்கார இளைஞர்களின் தாக்கு தலுக்கு இலக்காகின. தென்னிலங்கையில் குறிப்பிடத்தக்க நாட்டுப்புறப் பகுதி, இவர்களின் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டது.

ஆரம்பத்திற் பதட்ட மடைந்த போதும், தலைநகரும், இராணு வத் தளங்களும் மற்றும் கேந்திர நிலையங்களும் தாக்கப்படாத தால் ஆயுதப் படைகளைப் பலப்படுத்தி, எதிர்த்தாக்குதல்களை நடத்திக் கிளர்ச்சியை முற்றாக முறியடிக்க, அரசாங்கத்திற்குப் போதிய அவகாசம் கிடைத்தது. ஊரடங்குச் சட்டத்தை மாறி மாறி அமுலாக்கி, அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஆயுதப் படை களுக்கு அளவுக்கு மீறிய அதிகாரங்கள் வழங்கி, வெளி நாட்டா யுத உதவிகள் பெற்று ஆட்சியாளர்கள் தம்மைச் சரிவரத் தயார் செய்து கொண்டனர். பல வகையான ஆயுத உதவிகள் பெற்றுப் பலமடைந்த சிங்கள இராணுவ இயந்திரம், எதிர்த்தாக்குதலில்

மும்முரமாக இறங்கியபோது, கிளர்ச்சிக்காரர்கள் சிதறுண்டு பின் வாங்கினர். டாங்கிகள், பீரங்கிகள், இயந்திரத் துப்பாக்கிகள் மூலம் நடாத்தப்பட்ட தாக்குதல்களை எதிர்கொண்டு சமாளிக்கும் போர்த்திறனும், ஆயுத பலமும் இளைஞர்களிடம் இருக்கவில்லை. பிரதான வீதிகள், பாலங்களைத் தடுத்துப் போக்குவரத்தைத் துண்டிக்க முயன்றவர்கள்மீது, விமான ஹெலிகாப்டர் தாக்குதல்கள் நிகழ்ந்தபோது நூற்றுக் கணக்கானோர் மாண்டனர். சரணடைந்த இளைஞர்களை இராணுவத்தினர் இரக்கமின்றிச் சுட்டுக் கொன்றனர். இலங்கைச் சரித்திரத்திலேயே நடைபெறாத, மிருகத்தனமான படுகொலைகளைச் சிங்கள இராணுவம் புரிந்தது. நவீன இராணுவ பலத்தை எதிர்கொள்ள முடியாது பின் வாங்கி ஓடியவர்களும், சரணடைந்தவர்களும், சந்தேகத்தில் கைதானவர்களும் இராணுவத்தின் பயங்கர வாதத்திற்குப் பலியானார்கள். சுடப்பட்டவர்கள் காட்டுப் புறங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு எரிக்கப்பட்டார்கள்; புதைக்கப்பட்டார்கள். சுடப்பட்ட பிணங்கள் ஆறுகளில் வீசப்பட்டன. பௌத்தர்களின் புனித நதியான களனி கங்கையில் மட்டும், நூற்றுக் கணக்கான பிணங்கள் மிதந்து வந்து, கொழும்பு நகருக்கு அருகாமையில் உள்ள முகத்துவாரத் துறையிற்குவிந்தன.

ஒரு சில வாரங்களில், ச. வி. பெ. யின் கிளர்ச்சி முற்றாக நசுக்கப்பட்டது. சிங்கள ஆயுதப் படைகளின் மிலேச்சத்தனத்திற்கும், பயங்கரவாதத்திற்கும் பத்தாயிரம் இளைஞர்கள் பலியாகினர். இந்தப் பயங்கரமான சரித்திர நிகழ்ச்சியிலிருந்து, நாம் ஒன்றை மட்டும் முக்கியமாகப் படித்துக்கொள்ள வேண்டும். அதாவது, சிங்கள இராணுவத்தின் மனிதாபிமானமற்ற மிருகத்தனத்தையே. இராணுவ அறநெறிக் கட்டுப்பாடற்ற, இந்த இதயமற்ற இராணுவம், தனது இனத்தைச் சேர்ந்த இளைஞர்களையே ஈவிரக்கமின்றிக் கொன்று குவித்து வெறியாட்டம் ஆடியுள்ளது. அப்படியான இந்த ஆயுதப்படை, தமிழீழ விடுதலைப்படைமீது ஒரு ஆயுதப் போரில் எவ்விதம் நடந்துகொள்ளும் என்பதை நாம் ஊகித்துக் கொள்ளலாம்.

*அந்நிய நாடுகளின் ஆதரவு.*

ச.வி. பெயின் கிளர்ச்சி மிகப்பயங்கரமான முறையில் நசுக்கப்பட்ட பொழுது, எந்தவொரு வெளி நாட்டு அரசாங்கமாவது ச. வி. பெக்கு ஆதரவோ, அனுதாபமோ தெரிவிக்கவில்லை. தாம் மார்க்சிச-லெனினிச கொள்கைத் திட்டத்திற் செயல்பட்டு வந்த இயக்கத்தினர் என்று சொல்லிக் கொண்ட போதும், மார்க்சிசத்தைத் தழுவும் எந்தவொரு சோசலிச நாடாவது உதவிக்கு முன்வரவில்லை. அதற்குப் பதிலாகச் சோசலிச நாடுகளும், முதலாளித்

துவ நாடுகளும் கூட்டாகச் சேர்ந்து, கூட்டணி அரசாங்கத்திற்கு
ஆயுத உதவிகளை அள்ளி வழங்கி, ச. வி. பெ. யின் அழிவுக்குக்
காரணமாக இருந்தன.

ரோகன் விஜேவீராவினதும், மற்றும் இயக்கத் தலைவர்களின
தும் கொள்கைக் குழப்பத்தினால் வந்த விளைவு இது. தொடக்கத்
தில் உருசியா சார்பாக இருந்து, பின் சீனா சார்பாகத் திரும்பி,
அதன் பின் கியூபாவை வழிபட்டு இறுதியில் உருப்படியான நிலை
எதுவுமின்றிக் குழம்பி நின்றதால், சோசலிச அரசாங்கங்கள்
ச. வி. பெயைச் சந்தேகக்கண் கொண்டு நோக்கின. ஆயுத ரீதி
யாகவோ, சித்தாந்த ரீதியாகவோ ச. வி. பெ. சோசலிச நாடு
களின் ஆதரவை நாடவில்லை. அப்படித்தான் அணுகியிருந்தா
லும், ஆயுத உதவியோ அல்லது தார்மீக ஆதரவோ கிடைத்திருக்
கும் என்பது சந்தேகமானதுதான். ஏனென்றால், ஆட்சியிலிருந்த
அரசாங்கத்தின் வெளி நாட்டுக் கொள்கை அப்படியானது.
கூட்டுச் சேராத நடுநிலைமைக் கொள்கையைக் கடைப்பிடிப்பதாகக்
கூறிச் சோசலிசப் போர்வையைப் போர்த்திக் கொண்ட போதும்,
சுதந்திரக் கட்சித் தலைமைப்பீடமானது, பூர்சுவா அபிலாசைகளைக்
கொண்டதென்பது உலக நாடுகளுக்குத் தெரியாததல்ல. இதனால்
மேற்கத்தைய முதலாளித்துவ அரசுகள், கூட்டணி அரசாங்கத்
திற்கு ஆதரவாக இருந்தன. உருசியா சார்பு கம்யூனிஸ்ட் கட்சி
அரசாங்கத்துடன் ஒட்டிக்கொண்டு இருந்ததனால் உருசியாவின
தும் மேற்கு ஐரோப்பிய நாடுகளினதும் ஆதரவு இவ் அரசாங்கத்
திற்குச் சார்பானதாக இருந்தது. சீனாவைப் பொறுத்தவரை,
முன்னாள் பிரதமர் திரு. சூ. என். லாய்க்கும், பண்டா அம்மையா
ருக்கும் நெருக்கமான நட்புறவு இருந்து வந்தது என்பதனை,
கிளர்ச்சியை அடுத்துச் சீனப் பிரதமர் எழுதிய தனிப்பட்ட
அனுதாபக் கடிதம் சுட்டிக்காட்டுகிறது. இஸ்ரவேலின் ஆக்கிர
மிப்பை அரசாங்கம் கண்டித்து வந்ததால், அரபு நாடுகளும்
அம்மையார் பக்கமாக இருந்தன. ஆகவே, ச.வி.பெ. இளைஞர்கள்
கிளர்ச்சியில் குதித்த சமயம், அம்மையார் வெளிநாட்டு உதவிக்
குக் குரல் கொடுத்ததும், எல்லாத் திசைகளிலிருந்தும் உதவி வந்து
குவிந்ததில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

முதலாவதாக, பிரித்தானிய ஏகாதிபத்தியம் உதவிக்கு
முன்வந்தது. சிங்கப்பூர் தளத்திலிருந்து பெருந்தொகையில்
ஆயுதங்களையும் அத்துடன் ஆறு இராணுவ ஹெலிகாப்டர்களையும்
உதவியாக வழங்கியது. இதனையடுத்து அமெரிக்காவும், ஆயுத
உதவி அளித்தது. இந்தியாவும், பாக்கிஸ்தானும் ஆயுத உதவி
மட்டுமன்றி ஆயுதப் படைகளையும் கொடுத்துதவ முன்வந்தன.

இந்தியா உடனடியாக ஒரு பட்டாளத்தை அனுப்பிவைத்ததுடன், நான்கு இந்திய யுத்தக் கப்பல்களையும் அனுப்பிக் கொழும்புத்துறை முகத்தை ரோந்துக் காவல் செய்தது.

முதலாளித்துவ நாடுகளுக்குப் போட்டியாகச் சோவியத் யூனியனும் உதவிக்கு முன்வந்தது; எகிப்தில் குவித்துவைத்திருந்த ஆயுதத்தளவாடங்களில், ஒன்பது தொன் எடையுள்ள நவீன ஆயுதங்களைச் சோவியத் விமானமூலம் அனுப்பிவைத்தது; இதனையடுத்து ஆறு மிக் விமானங்களையும், இருபது பீரங்கி வாகனங்களையும் உதவியாகக் கொடுத்தது. யூகோஸ்லேவியாவும் பெருந் தொகையான மலைப்பீரங்கிகளைக் கொடுத்துதவியது. கம்யூனிஸ்ட் சீனாவும், தனது பங்கைச் சரிவரச் செய்யாமல் விடவில்லை. ஆயுதங்களுக்குப் பதிலாகச் சீன அரசாங்கம், அவசரகால நிதி உதவியாகப் பதினைந்து கோடி ரூபாயை வட்டியில்லாக் கடனாக வழங்கியது.

ச. வி. பெ.யின் ஆயுதக் கிளர்ச்சிக்கு கம்யூனிஸ்ட் சீனா மறைமுகமாக உதவியதாகவும், கொழும்பிலுள்ள வடகொரியத் தூதராலாயம் மூலம் ஆயுதங்கள் கடத்தப்பட்டதாகவும் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. இதனையடுத்து. வடகொரியத் தூதராலயம் மூடப்பட்டதும், உள்ளூர் சீன கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதும் சகலரும் அறிந்ததே. ஆனால், இந்த இளைஞர் கிளர்ச்சியில் கம்யூனிச சீனாவோ அல்லது வடகொரியாவோ எவ்வித பங்கும் கொள்ளவில்லை என்பது பின்னர் தெள்ளத் தெளிவாகியது. உண்மையில் நடந்தது என்னவென்றால், உள்ளூர் சீனக் கம்யூனிசக் கட்சியில் அங்கத்தவர்களாக இருந்த பல இளைஞர்கள் ச. வி. பெ. யில் சேர்ந்து, மாவோவின் போர் நுணுக்கங்களை இயக்கம் கடைப்பிடிக்க வேண்டுமென வலியுறுத்தி வந்தனர். இதனைப் புரிந்துகொள்ளாத இரகசியப் பொலிசார், கம்யூனிச சீனாவும் இந்தக் கிளர்ச்சிக்கு ஆதரவளித்ததென எண்ணினர். கிளர்ச்சிக்கு முன்னராக ச. வி. பெ. தலைவர்கள் சிலர், வடகொரிய தூதராலயத்திற்கு அடிக்கடி விசயம் செய்த சம்பவம் காரணமாகவே, வடகொரியத் தூதராலயம்மீது சந்தேகம் எழுந்தது. ஆனால், வடகொரியா எவ்விதத்திலும் கிளர்ச்சிக்குத் தூண்டுதலோ அல்லது மறைமுகமாக ஆயுத உதவியோ அளிக்கவில்லை.

கம்யூனிசச் சீன அரசாங்கம், பண்டா அம்மையாருடன் நீண்ட காலமாக நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது. உள்ளூர் பீக்கிங்

கம்யூனிசக் கட்சித் தலைவர்கள் சந்தேகத்தின்பேரில் கைதாகிச்
சீனாமீது சந்தேகம் எழுந்ததும், சீன அரசாங்கத்திற்கு இது
சங்கடமான நிலையை உண்டுபண்ணியது. இந்த சந்தேகத்தைப்
போக்கவும், தனது நட்புறவை நிலைநாட்டிக் கொள்ளவும்
விரும்பிய சீனா, பதினைந்து கோடி ரூபாயை வட்டியில்லாக்
கடனாக வழங்கியது. அதுமட்டுமன்றி, சீனப் பிரதமர் திரு.
சூ. என். லாய் திருமதி பண்டாரநாயக்காவுக்குத் தனிப்பட்ட
கடிதமொன்று அனுப்பி, கிளர்ச்சியை அரசாங்கம் முறியடித்ததைப்
பாராட்டியுள்ளார். சீனப் பிரதமர் அனுப்பிய செய்தியில் ச. வி.
பெ.யை பிற்போக்குவாதிகள் என்றும், தீவிர இடது சாரிக் கும்ப
லென்றும் கண்டித்துள்ளார். 1971 ஆம் ஆண்டு ஏப்பிரல் 26 ஆம்
திகதி, பண்டா அம்மையாருக்குச் சீனப் பிரதமர் எழுதிய
கடிதத்தை அப்படியே ஆங்கிலத்தில் இங்கு தருகிறோம்.

## CHOU EN-LAI'S MESSAGE TO SRIMAVO BANDARANAIKE

"I am grateful to Your Excellency and the Ceylon Government for your trust in the Chinese Government and your friendly senti- ments towards the Chinese people. The friendship between China and Ceylon is in the fundamental interests of the two peoples and can stand tests. The Chinese Government and people highly treasure the friendship between our two countries and no one with ulterior motives will ever succeed in trying to sow discord and sabotage our friendly relations."

"Following Chairman Mao - Tse – tung's teaching, the Chinese peoplehave all along opposed ultra 'left' and 'right' opportunism in their protracted revolutionary struggles. We are glad to see that thanks to the efforts of your Excellency and the Ceylon Govern- ment, the chaotic situation created by a handful of persons who style themselves 'Guevarists' and into whose ranks foreign spies have sneaked has been brought under control. We believe that as a result of your Excellency's leadership and the co-operation and support of the Ceylonese people these acts of rebellion plotted by reactionaries at home and abroad for the purpose of under- mining the interests of the Ceylonese people are bound to fail."

"We fully agree to the correct position of defending state soverei- gnty and guarding against foreign interference as reffered to by

your Exeellency. The Chinese government and people admire this and firmly support Ceylon in her just struggle towards this end. As your Excellency is deeply aware the Chinese government has consistently abided by the Five Principles of Co-existence, has never interfered in the internal affairs of other countries, and is also firmly opposed to any country interfering in other countries' internal affairs, and particularly to foreign reactionaries taking advantage of the opportunity to carry out armed intervention. I would like once again to reaffirm this unshakable stand of the Chinese Government."

"In the interests of the frienship between China and Ceylon and in consideration of the needs of the Ceylon Government, the Chinese Government, agrees to provide it with a long-term interest free loan of 150 million rupees in convertible foreign exchange. We would like to hear any views which your Excellency might have on this matter. We are prepared to deliver a portion of the loan in May and sign a document on it. As for other material assistance, please let us know if it is needed"

*சிறிமாவோ பண்டாரநாயகாவுக்கு திரு. சூ-என்-லாய்*
*அனுப்பிய கடிதத்தின் தமிழாக்கம்.*

"தாங்கள் சீன அரசாங்கத்தின்பால் நம்பிக்கையும், சீன மக்களின்மேல் தோழமை உணர்வும் கொண்டிருக்கிறீர்கள். அதற்காக மேன்மைமிகு தங்களுக்கும், இலங்கை அரசாங்கத்துக்கும் நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். சீனாவுக்கும், இலங்கைக்குமிடையிலுள்ள நட்புறவு இரு நாட்டு மக்களினதும் அடிப்படை நலன்களுக்கு உகந்தது; சோதனைகளைத் தாங்கக் கூடியது. எங்கள் இரு நாடுகளுக்குமிடையிலுள்ள நட்புறவை, சீன அரசாங்கமும், மக்களும் உயர்வாக மதிக்கிறார்கள். தீய உள்நோக்கமுடைய எவரும், இந்த நட்புறவில் கருத்து வேறுபாட்டை விதைத்து, இதைச் சிதைப்பதற்கு எடுக்கும் எந்தவொரு முயற்சியும் ஒருபோதும் வெற்றியளிக்காது."

"சீன மக்கள் தங்கள் நீடிக்கப்பட்ட புரட்சிகரப் போராட்டங்களில், தலைவர் மா-சே-துங்கின் போதனைகளைப் பின்பற்றி, எப்பொழுதுமே அதிதீவிர 'இடதுசாரி', 'வலது சாரி' சந்தர்ப்பவாதத்தை எதிர்த்து வந்திருக்கிறார்கள். வெளிநாட்டு ஒற்றர்களால் ஊடுருவப்பட்ட, தங்களைத் தாங்களே 'சேகுவேரிஸ்டுகள்'

என்று அழைத்துக்கொள்ளும், ஒரு சிறு கூட்டத்தால் ஏற்பட்டிருந்த குழப்பகரமான நிலைமை, மேன்மை மிகு தாங்கள் இலங்கை அரசாங்கத்துடன் சேர்ந்து எடுத்துக்கொண்ட முயற்சிகளால், கட்டுப்பாட்டுக்குள்கொண்டு வரப்பட்டுள்ளது என்பதை அறிவதில் மகிழ்ச்சி அடைகிறோம். மேன்மைமிகு தங்களது தலைமையினாலும், இலங்கை மக்களின் ஒத்துழைப்பாலும், ஆதரவாலும் இந்தக் கிளர்ச்சி நடவடிக்கைகள் தோற்றே தீரும் என்பதில், நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். இலங்கை மக்களின் நலன்களை நயவஞ்சமாகக் கெடுக்கும் நோக்குடனேயே, உள்நாட்டிலும், வெளிநாட்டிலுமுள்ள பிற்போக்குவாதிகளால் இந்தச் சதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.''

"மேன்மைமிகு தாங்கள் நாட்டின் இறைமையைப் பாதுகாப்பதிலும், வெளியார் தலையீட்டை எதிர்த்து நிற்பதிலும் கொண்டுள்ள சரியான நிலையை, நாம் முழுமையாக ஏற்கிறோம். இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக, இலங்கை நடத்தும் நீதியான போராட்டத்தை, சீன அரசாங்கமும், மக்களும் மெச்சுவதோடு, அதை உறுதியாக ஆதரிக்கவும் செய்கிறார்கள். சமாதான சகவாழ்வின் ஐந்து பிரதான கொள்கைகளை, சீன அரசாங்கம் தொடர்ச்சியாகக் கடைப்பிடித்து வந்திருக்கின்றது என்பதை, மேன்மைமிகு தாங்கள் அறிவீர்கள். சீன அரசாங்கமானது, எந்த நாட்டினதும் உள் விவகாரங்களில், ஒருபோதும் தலையிட்டது கிடையாது; அத்துடன் வேறெந்த நாடும் மற்ற நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதையும், முக்கியமாக, வெளிநாட்டு பிற்போக்குவாதிகள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஆயுதம் தாங்கிய தலையீட்டை மேற்கொள்வதையும் உறுதியாக எதிர்க்கிறது. இந்த விடயத்தில், சீன அரசாங்கத்தின் அசைக்க முடியாத நிலையை மீண்டும் உறுதிப்படுத்த விரும்புகிறேன்.''

"இலங்கைக்கும், சீனாவுக்கும் இடையிலுள்ள நட்புறவுக்காகவும், இலங்கை அரசாங்கத்தின் தேவைகளுக்காகவும், சீன அரசாங்கமானது, இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கைப்படி நீண்டகால வட்டியில்லாக் கடனாக, மாற்றக்கூடிய அந்நியச் செலாவணியில் 15 கோடி ரூபாய் வழங்கச் சம்மதிக்கிறது. இந்த விடயத்தைப்பற்றி மேன்மைமிகு தாங்கள் ஏதாவது அபிப்பிராயம் கொண்டிருப்பின் அதை அறிய விரும்புகிறோம். கடனின் ஒரு பகுதியை மே மாதத்தில் கொடுத்து, கடன் பத்திரத்தில் கையொப்பமிடுவதற்குத் தயாராக இருக்கிறோம். வேறு பொருளுதவி தேவைப்படின் தயவு செய்து எங்களுக்கு அறியத் தருக.''

வெளிநாட்டு ஆயுத உதவி, பண உதவி, ஆட்படை உதவி இவையெல்லாம் பெற்றுப் பலம் பெற்று, சிங்கள முதலாளித்துவ இராணுவ இயந்திரம் புரட்சிவாத இளைஞர்கள்மீது, படுபாதகமான பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்டது. ஆயிரக்கணக்கானோர் அநியாயமாகக் கொல்லப்பட்டபோதும், மிருகத்தனமான அட்டூழியங்கள் நடைபெற்றபோதும், அதனை ஆட்சேபிக்க எந்த உலக நாடும் முன்வரவில்லை. இதிலிருந்து, நாம் ஒரு முக்கிய பாடத்தைப் படித்துக் கொள்ளவேண்டும். அதாவது, ஆயுதக் கிளர்ச்சி மூலம் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம் ஒன்றில் நாம் குதிப்பதாயின், முதலில் நாம் உலக நாடுகளின் ஆதரவை, குறிப்பாக சோசலிச நாடுகளினதும், உலகத் தேசிய விடுதலை இயக்கங்களினதும் ஆதரவைத் திரட்டிக்கொள்ளவேண்டும். 'நாம் விடுதலைவேண்டும் ஓர் ஒடுக்கப்பட்ட தேசிய இனம்; எமது சுதந்திரக் கோரிக்கை நியாயமானது; சோசலிச அரசியல் கொள்கைத் திட்டத்திற்கு இசைவானது' என நாம் சர்வதேச ரீதியில் பிரச்சாரம் செய்து, உலக சோசலிச புரட்சிவாத சக்திகளை எமக்கு ஆதரவாகத் திரட்டிக்கொள்ளவேண்டும். உலக நாடுகளின் தார்மீக ஆதரவு, ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு இன்றியமையாதது.

### *எதிரிகள் யார்? நண்பர்கள் யார்?*

ஆயுதக் கிளர்ச்சியின் அடிப்படையில் ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தைத் திட்டமிடுவதாயின், வெளிநாட்டு ஆதரவு திரட்டுமிடத்து எமது எதிரிகள் யார், நண்பர்கள் யார் என்பதனை நாம் முதலில் சிந்திக்கவேண்டும்.

எமது போராட்டமானது மிகப் பிற்போக்கான, வலதுசாரி, முதலாளித்துவ அரசுக்கு எதிரானது. இந்த அரசாங்கம் உலக முதலாளித்துவத்தின் நண்பன்; சர்வதேச ஏகாதிபத்தியத்தின் அடிமை; ஏகாதிபத்திய உளவு சக்திகளின் சிலந்திவலைக்குள் சிக்குப்பட்டது. இந்த ஆட்சி பீடத்திற்கு ஆபத்து ஏற்படும் சமயம், ஏகாதிபத்திய நாசகார சக்திகள் உதவிக்கு முன்வருவது திண்ணம். ஆகவே, எமது பிரதான எதிரிகள் சிங்கள ஏகாதிபத்தியம் மட்டுமன்றி, உலக முதலாளித்துவ வல்லரசுகளும், அவற்றின் அடிவருடிகளும்தான் என்பதை, நாம் மறந்துவிடக் கூடாது.

ஈரான், ஆப்கானிஸ்தான் புரட்சிகளின்பின் உலக ஏகாதிபத்தியத்தின் அக்கறை, இந்து சமுத்திரப் பிராந்தியத்தில், குறிப்பாகத் தென் ஆசியப்பிரதேசம்மீது திரும்பியிருக்கிறது. இப்பிரதேசத்தில்,

கட்டாதிக்க ரீதியில், இலங்கை முக்கிய இடமாக அமைகிறது. ஆகவே, இலங்கையின் அரசியல் நிலையை நிலைப்படுத்துவதில் அதாவது, தனக்குச் சார்பான முதலாளித்துவ அமைப்பைப் பலப் படுத்துவதில், உலக ஏகாதிபத்திய நாடுகள் அக்கறை காட்டிவரும்.

இப்படியான சூழ்நிலையில், சோசலிச சமுதாய நிர்மாணத்தை இலட்சியமாய்க் கொண்டு தேசிய விடுதலைவேண்டும் எமது போராட்டத்தை, உலக ஏகாதிபத்தியம் விரும்பப் போவதில்லை. முதலாளித்துவத்தின் தென் ஆசிய நிலைப்பாட்டிற்கு, இப் போராட்டம் ஆபத்தானதென்றே இவர்கள் கருதுவார்கள். ஆகவே, இந்த முதலாளித்துவ நாசகார சக்திகள் சிங்கள ஆட்சியாளருக்கு உதவியாக நின்று, எமது போராட்டத்தை நசுக்க முற்படலாம். ச.வி.பெ.யின் கிளர்ச்சியை முறியடிப்பதில், அமெரிக்க உளவு தாபனமாகிய சி.ஐ.ஏ, பெரிய பங்கு கொண்டிருந்ததென்பதனை நாம் மறந்துவிடக்கூடாது.

இதன் காரணமாகத்தான், எமக்குச் சோசலிச நாடுகளின் ஆதரவு அவசியமென வலியுறுத்துகிறோம். தமிழீழ விடுதலை வீரர் கள் சிங்கள முதலாளித்துவ ஆயுதப் படைகளை வெற்றிகொண்டு, சோசலிசத் தமிழீழ சுதந்திரப் பிரகடனம் செய்யும் பொழுது, சோசலிச நாடுகள் எமது தேசிய சுதந்திரத்திற்கு அங்கீகாரம் வழங்கவேண்டும். சிங்கள ஆயுதப் படைகளின் எதிர்த்தாக்கு தலையும், அந்நிய ஏகாதிபத்தியத்தின் தலையீட்டையும் தடுத்து நிறுத்துவதற்கு இது அவசியமாகும்.

முடிவாக, சிங்களக் கிளர்ச்சிக்கார இளைஞர்களின் கிளர்ச்சியி லிருந்தும், அதன் வீழ்ச்சியிலிருந்தும் நாம் பல அரசியற் பாடங் களைக் கற்றுக் கொள்ளவேண்டும். தோல்விகளின் காரணங்களைக் கற்றுக் கொண்டால் வெற்றியின் பாதை புலனாகும்.

LENIN. 'The national programme of the RSDLP,' Collec Works, Vol. 19.

LENIN. 'Critical Remarks on the National Question,' Collec Works. Vol. 20.

LENIN. 'Right of Nations to Self-Determination,' Collec Works. Vol. 20.

LENIN. 'The National Pride of Great Russians,' Collected Works, Vol. 21.

LENIN, 'The Socialist Revolution and the Right of Nations to Self-Determination,' Collected Works. Vol. 22

LENIN. 'The Discussion on Self-Determination Summed Up', Collected Works. Vol. 22.

LENIN. 'The Question of Nationalities or Autonomisation,' Collected Works. Vol. 36.

LENIN. 'The Question of Nationalitees or Autonomisation,' Collected Works. Vol. 22.

LENIN. 'Socialism and War,' Collected Works. Vol. 21.

LENIN. 'The Question of Peace,' Collected Works. Vol. 21.

LENIN. 'Resolution on the National Question,' Collected Works. Vol. 24.

LENIN. 'Letter to the Workers and Peasants of the Ukraine apropos of the Victories over Denikin,' Collected Works. Vol. 30.

MARX-ENGELS. 'Selected Correspondence, Progress Publishers, 1965.' Marx to Engels Nov. 20. 1867. Marx to Mayer and Vogt. Ap. 9. 1870.

ROSA LUXEMBURG. 'The Junius Pamphlet' in Mary-Alice Waters edited, 'Rosa Luxemburg Speaks' New York 1970.

ROSA LUXEMBURG. 'Thesis on the Tasks of International Social Democracy' ibid. p. 329.


See Peter Netti, 'Rosa Luxemburg', Oxford University Press. 1969, Appendix. 'The National Question'.

STALIN. J. 'Marxism and the National Question' in Works, Moscow 1953, Vol. 2

TROTSKY. L. 'The Russian Revolution' Anchor 1959.

TROTSKY. L. 'The Bolshevik and World Peace', New York, 1918.

TROTSKY. L. 'On Black Nationalism and Self-Determination' N.Y. 1963.




அடையாளமிடப்பட்ட பகுதிகள், கிளர்ச்சிக்கார இளைஞர்களால் கிளர்ச்சியின்போது கைப்பற்றப்பட்டவையாகும்.